# ஹேண்ட் புக் (கையேடு):

# டிஜிட்டல் (எண்ணியல் முறை) கல்வி குறித்த திறனாய்வு




புதுமுயற்சி

செயல்படுத்தும் ஏஜென்சி

सत्यमेव जयते

எலெக்ட்ரானிக்ஸ் மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை
தொடர்புகள் மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சகம்,
இந்திய அரசாங்கம்

CSC
e-Governance Services India Limited

வெளியீடு எண் : CSCSPV/ED/15/001

**மேலும் தகவலுக்காக, தொடர்பு கொள்ளவும்:**
திட்ட நிர்வாக பிரிவு
சி எஸ் சி இ-கவர்னென்ஸ் சர்வீசஸ் இண்டியா லிமிடெட்
எலெக் ட்ரானிக்ஸ் நிகேதன் , 3வது தளம்
6 , சி ஜி ஓ காம்ப்ளெக்ஸ் , லோதி சாலை
புது தில்லி - 110003
தொலைபேசி : +91-11-24301349
இணையதளம்: www.csc.gov.in

रवि शंकर प्रसाद
**ரவி ஷங்கர் பிரசாத்**

सत्यमेव जयते

मंत्री
संचार एवं सूचना प्रौद्योगिकी
एवं
कानून एवं न्याय,
भारत सरकार

**அமைச்சர்**
**தொடர்புகள் மற்றும் தகவல் தொழில் நுட்பம்**
**மற்றும்**
**சட்டம் மற்றும் நீதி**
**இந்திய அராங்கம்**



# தகவல்

மதிப்பு வாய்ந்த பிரதம மந்திரி திரு. நரேந்திர மோடியின் தொலை நோக்கு பார்வையில் உருவான 'டிஜிட்டல் இண்டியா' இந்தியாவை டிஜிட்டல் சக்தி கொண்டி ஒரு சமுதாயமாக மற்றும் உலகில் ஒரு முன்னணி அறிவு கொண்ட பொருளாதாரமாக மாற்றுவதற்கான ஒரு குறிக்கோள் கொண்ட திட்டம். டிஜிட்டல் தொழில் நுட்பத்தில் அனைவரையும் இணைப்பதற்கு , அறிவு கொண்ட சமுதாயத்தை அளிப்பதற்கு வசதிகளைக் கிடைக்கச் செய்வது , பயன்படுத்த முடிவது மற்றும் டிஜிட்டல் திறன்கள் மூலமாக நிரந்திரமான மாற்றத்தைச் செய்வதற்கான குறிக்கோளை இந்த திட்டம் கொண்டிருக்கிறது.

அனைத்து குடிமக்களையும் டிஜிட்டல் அறிவு திறன் பெற்றவர்களாக்குவது இந்த திட்டத்தின் முக்கிய தூண்களில் ஒன்று மற்றும் என்னுடைய அமைச்சகம் இதைச் சாதிப்பதற்கு ஒரு உலகளாவிய டிஜிட்டல் அறிவு ஏற்படுத்தும் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறது

தேசிய டிஜிட்டல் அறிவு ஏற்படுத்தும் குறிக்கோள் பணித்திட்டம் (என் டி எல் எம்) அல்லது டிஜிட்டல் சாக்ஷர்தா அப்யான் டிஜிட்டல் இண்டியாவின் தொலை நோக்கு பார்வையுடன் இணைந்து உருவாக்கப்பட்டிருக்கிறது, இதில் நாடு முழுவதும் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் குறைந்தபட்சம் ஒரு உறுப்பினர் டிஜிட்டல் கல்வி பெறுவார்.

இந்த திட்டம் அனைத்து மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களிலும் உள்ள ஆங்கான்வாடி மற்றும் ஆஷா ஊழியர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ரேஷன் டீலர்கள் உட்பட 52.5 லட்சம் நபர்களுக்கு டிஜிட்டல் அறிவு அளிப்பதை எதிர்நோக்குகிறது , இதனால் நாட்டின் ஜனநாயக மற்றும் முன்னேற்ற செயல்முறைகளில் திறம்பட பங்கேற்பதை இயன்றதாக்கும் மற்றும் அவர்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தும்

என் டி எல் எம்-ன் குறிக்கோள்களை சாதிப்பதில் மிக அதிகமான சவால்கள் உள்ளது ஆனால் அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் உலக அறிவு கொண்ட பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு ' டிஜிட்டல் அறிவு பெற்றவர்கள் மற்றும் பெறாதவர்களை' வேறு படுத்தும் டிஜிட்டல் பிரிவை நம்மால் எதிர்கொள்ள முடியும் என்பதில் நான் நம்பிக்கையாக இருக்கிறேன்.

டிஜிட்டல் அறிவு திறன் பெற்ற ஒரு தேசம் ஆவதற்கான குறிக்கோளை முன்வந்து ஏற்க வேண்டும் என நான் இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனையும் அழைக்கிறேன்.

எலெக்ட்ரானிக்ஸ் நிகேதன் , 3வது தளம் , 6 , சி ஜி ஓ காம்ப்ளெக்ஸ் , லோதி சாலை, புது தில்லி - 110003
தொலைபேசி : +91-11-24301349

# முன்னுரை



**திரு ஆர். எஸ். ஷர்மா**
செக்ரட்டரி, எலெக்ட்ரானிக்ஸ்
மற்றும் தகவல் தொழில்
நுட்ப துறை
இந்திய அரசாங்கம்

தகவல் தொழில் நுட்பம் மீதான தேசிய கொள்கை , கல்வி , மருத்துவம் , திறன் மேம்பாடு, நிதித்துறையில் ஒன்று சேர்ப்பது , மற்றும் வேலை வாய்ப்பை உருவாக்குவதற்கான துறைகளில் உள்ள சவால்களை எதிர்கொள்வதற்கு தகவல் மற்றும் தொடர்புகளுக்கான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலமாக குடிமக்களின் வாழ்வை மாற்றுவதை எதிர்நோக்குகிறது இந்த குறிக்கோளைச் சாதிப்பதற்கு, ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தபட்சம் ஒரு நபரை டிஜிட்டல் அறிவு பெற்றவராக்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது

இந்த குறிக்கோளைச் சாதிப்பதற்கு , தேசிய டிஜிட்டல் அறிவு ஏற்படுத்தும் குறிக்கோள் பணித்திட்டம் (என் டி எல் எம்) அல்லது டிஜிட்டல் சாக்ஷரதா அப்யான் பிரதம மந்திரி திரு. நரந்திர மோடியால் அறிமுகப்படுத்தப்பட்டது பெருந்திரளான மக்களுக்கான இந்த முயற்சி மூலமாக, கிராமப்புற மற்றும் சிறுபான்மை சமுதாயத்தில் உள்ள குடிமக்களுக்கு சக்தி அளிப்பதற்கு தகவல் மற்றும் தொடர்புகளின் ஆற்றலை அளிப்பதற்கு அரசாங்கம் ஆசை கொள்கிறது, அதனால் அவர்களுடைய வாழ்வாதாரத்தை அவர்கள் மேம்படுத்தலாம், பொருளாதார மற்றும் முன்னேற்ற நடவடிக்கைகளில் தீவிரமாக பங்கேற்கலாம் மற்றும் தேசத்தை உருவாக்குவதற்கு மேலும் பங்களிக்கலாம்.

இந்த டிஜிட்டல் கல்வி பயிற்சி , ஆங்கன் வாடி மற்றும் ஆஷா ஊழியர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ரேஷன் டீலர்கள் உட்பட்ட 52.5 லட்சம் பயணாளிகளுக்கு அளிக்கப்படவிருக்கிறது, இது இரண்டு நிலைகளை உள்ளடக்கியது - நிலை 1 (டிஜிட்டல் அறிவு குறித்த திறனாய்வு) மற்றும் நிலை 2 (டிஜிட்டல் கல்வியின் அடிப்படைகள்).
நிலை 1 என்பது ஒரு 20-மணி நேர பாடப் பிரிவு, இதன் குறிக்கோள் ஒரு நபரை தகவல் தொழில்நுட்ப கல்வி பெற்றவராக ஆக்குவதாகும், இதனால் அவரால் ஒரு கம்ப்யூட்டரை அல்லது எந்த டிஜிட்டல் சாதனத்தையும் இயக்க முடியும், இமெயில் அனுப்ப பெற முடியும் மற்றும் தகவல்களை இன்டர்னெட்டில் தேட முடியும்.

இந்த கையேடு, நிலை 1 பாடப்பிரிவின் கீழ் கலந்து பேசப்படும் தலைப்புகளை உள்ளடக்கியது. சி எஸ் சி எஸ் பி வி இந்த வெளியீட்டைக் கொண்டு வந்திருக்கிறது என்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன், இது டிஜிட்டல் சாதனங்களை இயக்குவது, இன்டர்னெட் மூலமாக தொடர்பு கொள்வது எப்படி மற்றும் இன்டெர்னெட்டில் அப்ளிகேஷன்ஸ் போன்ற அடிப்படை விஷயங்களைப் புரிந்து கொள்வதில் குடிமக்களுக்கு உதவும்.

# முன்னோட்டம்



**டாக்டர். அஜெய் குமார்**
இணை செக்ரட்டரி,
எலெக்ட்ரானிக்ஸ் மற்றும்
தகவல் தொழில்நுட்ப துறை
இந்திய அரசாங்கம்

தேசிய டிஜிட்டல் அறிவு ஏற்படுத்தும் குறிக்கோள் பணித்திட்டம் (என் டி எல் எம்) அல்லது டிஜிட்டல் சாக்ஷர்தா அப்யான் , நாடு முழுவதிலும் உள்ள அனைத்து மாவட்டங்கள் / வட்டாரங்களில் உள்ள ஆங்கன்வாடி மற்றும் ஆஷா ஊழியர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ரேஷன் டீலர்கள் உட்பட 52.5 லட்சம் நபர்களுக்கு டிஜிட்டல் கல்வி பயிற்சி அளிப்பதற்கான நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த திட்டம், மேற்புரத்தின் மீது துளிகள் விழுவதன் மூலமாக எழும் அதிர்வலைகளைப் போன்றது. நாங்கள் தனி நபர்களை மாற்றத்திற்கான ஏஜென்டுகளாக பார்க்கிறோம், இவர்கள் குடும்பம் முழுவதிலும் உள்ளவர்களுக்கு கல்வி அளிப்பவர்களாக இருப்பார்கள். ஆனால் இவை அனைத்தும், மாற்றங்களுக்கான இந்த ஏஜென்டுகள் எவ்வளவு திறன் பெற்றவர்களாக இருக்கிறார்கள் மற்றும் திறன்களை நாம் மற்றவர்களுக்கு அளிக்கிறோம் என்பதைப் பொருத்தது. இந்த பயிற்சி பகுதிகள் இந்த செயல்முறையின் அடித்தளமாக உள்ளது.
ஐடீ பயிற்சியின் இரண்டு நிலைகள் இந்த திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டிருக்கிறது. நிலை 1, இது டிஜிட்டல் கல்விக்கான திறனாய்வு மற்றும் நிலை 2, டிஜிட்டல் கல்விக்கான அடிப்படைகள் நிலை 1 பயிற்சி பாடப்பிரிவின் உள்ளடக்க விஷயங்களில் ஒரு பகுதியாக சி எஸ் சி எஸ் பி வி -யால் உருவாக்கப்பட்டிருக்கிறது, இது 20 மணி நேரங்களுக்கு நடை பெறும்.

இந்த கையேடு ஐந்து பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது , ஒவ்வொன்றும் நிலை 1 என்பதன் கீழ் பட்டியலிடப்பட்ட தலைப்புகளை உள்ளடக்கியது. பிரிவு 1, கம்ப்யூட்டர் , மொபைல் ஃபோன் மற்றும் ஒரு டேப்லெட் போன்ற டிஜிட்டல் சாதனங்களின் , வெவ்வேறு பகுதிகள் , செயல்பாடுகள் மற்றும் அப்ளிகேஷன்கள் குறித்து கலந்து பேசுகிறது பிரிவு 2 ஒரு கம்ப்யூட்டர், மொபைல் ஃபோன் மற்றும் டேப்லெட்டின் அடிப்படை அம்சங்கள் மற்றும் அவற்றை எப்படி இயக்குவது என்பதைப் பற்றி பேசுகிறது. பிரிவு 3 இன்டர்னெட் கனெக்ஷன்களின் வகைகள் , அதன் அப்ளிகேஷன்கள், இன்டர்னெட் ஆதாரங்களின் வகைகள் மற்றும் சர்ச் என்ஜின்களை உபயோகிப்பதைக் கையாள்கிறது. பிரிவு 4 இ-மெயில் அகவுன்ட், ஸ்கைப் மற்றும் ஹேங்க அவுட், ஃபேஸ்புக் , ட்விட்டர், யூ ட்யூப் மற்றும் விகிபீடியா போன்ற சோஷியல் மீடியா மற்றும் வாட்ஸாப் போன்ற மெசேஜிங்க சேவைகளின் வெவ்வேறு அம்சங்களை உருவாக்குவது மற்றும் பயன்படுத்துவது எப்படி என்பதைப் பற்றி உங்களுக்கு சொல்கிறது. பிரிவு 5 , வாழ்வாதாரம் தொடர்பான தகவல்களை இன்டர்னெட்டில் தேடுவது எப்படி, ஆன்லைனில் பயன்பாட்டு பில்களைச் செலுத்துவது , ரயில் மற்றும் பஸ் டிக்கெட்டுகளை முன் பதிவு செய்வது மற்றும் ஆன்லைனில் வெவ்வேறு அரசு திட்டங்களைப் பயன்படுத்துவது எப்படி என்பதைப் பற்றி சொல்கிறது.

இந்த பிரிவுகள் டிஜிட்டல் சாதனங்களின் வார்த்தைகள் , பயன்பாடு மற்றும் செயல்பாட்டை விளக்குவதற்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த பிரிவுகள் மாணவர்கள் டிஜிட்டல் சாதனங்களைப் பயன்படுத்துவதற்கு, தகவலை உருவாக்குவதற்கு, நிர்வகிப்பதற்கு மற்றும் பகிர்ந்து கொள்வதற்கு உதவும், தகவலை பார்பதற்கு இன்டர்னெட்டை உபயோகிப்பது , மேலும் அவர்களுடைய அன்றாட செயல்பாட்டில் திறம்பட தொடர்பு கொள்வதற்கு தொழில் நுட்பத்தை உபயோகிப்பதில் உதவும்.

டிஜிட்டல் கல்வி பெற்றவர்களாக ஆவதற்கான அவர்களுடைய பயணத்தில் இந்த கையேடு மாணவர்களுக்கு உபயோகமானதாக இருக்கும் நான் உண்மையாக நம்புகிறேன்.

# உள்ளடக்க விஷயங்கள்


| பிரிவு எண். | பிரிவின் தலைப்பு | பக்கம் எண். |
| --- | --- | --- |
| | அறிமுகம் | 8 |
| 1 | டிஜிட்டல் சாதனங்களுக்கான அறிமுகம் | 9 |
| 2 | ஆபரேட்டிங் டிஜிட்டல் சாதனங்கள் | 22 |
| 3 | இன்டர்னெட்டிற்கான அறிமுகம் | 62 |
| 4 | இன்டர்னெட்டை உபயோகித்து தொடர்புகள் | 77 |
| 5 | இன்டர்னெட் பயன்பாடுகள் | 112 |

# அறிமுகம்

*" டிஜிட்டல் கல்வி என்பது தனிநபர்கள் மற்றும் சமுதாயங்கள் வாழ்க்கை சூழ்நிலைக்குள் அர்த்தம் வாய்ந்த செயல்பாடுகளுக்கான டிஜிட்டல் தொழில் நுட்பங்களைப் புரிந்து கொள்வதற்கு உபயோகிப்பதற்கான திறனாகும்."*

ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு நபரை டிஜிட்டல் கல்வி பெற்றவராக ஆக்குவது , பிரதம மந்திரியின் தொலை நோக்கு பார்வையான 'டிஜிட்டல் இண்டியாவின்"' ஒருங்கிணைந்த பகுதிகளில் ஒன்றாகும். தேசிய டிஜிட்டல் கல்வி குறிக்கோள் பணித்திட்டம் , நாட்டின் ஒவ்வொரு மாநிலத்திலும் / யூனியன் பிரதேசத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் தகுதி பெறும் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒருவர், என 10 லட்சம் நபர்களுக்கு தகவல் மற்றும் தொடர்புகளுக்கான பயிற்சி அளிப்பதை எதிர்நோக்குகிறது. இதன் குறிக்கோள் , பயிற்சியின் தேவைக்கு பொருத்தமான அடிப்படை ஐ சி டீ திறன்களை அளிப்பதாகும், இது குடிமக்கள் நாட்டின் ஜனநாயக செயல்முறையில் தீவிரமாக மற்றும் திறம்பட பங்கேற்பதற்கு ஐ டீ மற்றும் தொடர்புடைய அப்ளிகேஷன் களை உபயோகிப்பதை இயன்றதாக்கும் , மேலும் அவர்களுடைய வாழ்வாதாரத்திற்கான வாய்ப்புகளை மேம்படுத்தும்.

இந்த திட்டத்தின் கீழ் ஐ டீ பயிற்சியின் இரண்டு நிலைகள் எதிர்நோக்கப்படுகிறது:

- நிலை 1- டிஜிட்டல் கல்வி குறித்த திறனாய்வு
- நிலை 2 - டிஜிட்டல் கல்வியின் அடிப்படை விஷயங்கள்

நிலை 1 ன் கீழ் பயிற்சியின் முக்கிய குறிக்கோள்-டிஜிட்டல் கல்வி குறித்த திறனாய்வு:

*"ஒரு நபரை ஐ டீ அறிவு பெற்றவராக ஆக்குவதற்கு, அதாவது அவரை ஒரு கம்ப்யூட்டர் / டிஜிட்டல் பயன்பாட்டு சாதனங்களை (டேப்லெட்டுகள் போன்றவை) , அவர் இயக்கலாம், இமெயில்களை அனுப்பலாம் மற்றும் பெறலாம் மற்றும் தகவலுக்காக இன்டர்னெட்டைத் தேடலாம்."*

இந்த கையேடு நிலை 1 -ன் தலைப்புகள் கீழ் உள்ள பாடங்களை உள்ளடக்கியது, கம்ப்யூட்டர் , மொபைல் ஃபோன் மற்றும் டேப்லெட், இன்டர்னெட்டை உபயோகித்து தொடர்புகள், மற்றும் இன்டர்னெட்டின் பயன்பாடு போன்ற டிஜிட்டல் சாதனங்களை இயக்குவது தொடர்பான ஐந்து பிரிவுகளை உள்ளடக்கியது.

# 1 டிஜிட்டல் சாதனங்களுக்கான அறிமுகம்



**கற்றதன் விளைவுகள்**

இந்த பிரிவின் இறுதியில், உங்களால் பின்வரும் செயல்களைச் செய்ய முடியும்:

- கம்ப்யூட்டரின் வெவ்வேறு பாகங்கள், செயல்பாடுகள் மற்றும் கம்ப்யூட்டரின் அப்ளிகேஷன்களைக் கண்டறிவது மற்றும் புரிந்து கொள்வது
- மொபைல் ஃபோன்களின் பாகங்கள் , செயல்பாடுகள் மற்றும் அப்ளிகேஷன்களைப் புரிந்து கொள்வது
- டேப்லெட்டின் பாகங்கள் , செயல்பாடுகள் மற்றும் அப்ளிகேஷன்களைப் புரிந்து கொள்வது

**பாடத் திட்டம்**

I. கம்ப்யூட்டர் பாகங்கள், செயல்பாடுகள் மற்றும் அப்ளிகேஷன்கள்

II. மொபைல் ஃபோனின் பாகங்கள், செயல்பாடுகள் மற்றும் அப்ளிகேஷன்கள்

III. டேப்லெட்டின் ஃபோனின் பாகங்கள், செயல்பாடுகள் மற்றும் அப்ளிகேஷன்கள்

# I. கம்ப்யூட்டரின் பாகங்கள், செயல்பாடுகள் மற்றும் அப்ளிகேஷன்கள்

**ஒரு கம்ப்யூட்டர் என்றால் என்ன?**
ஒரு கம்ப்யூட்டர் என்பது ஒரு எலெக்ட்ரானிக் சாதனம், டேட்டா மற்றும் தகவலை ஸ்டோர் செய்வதற்கு மற்றும் ப்ராசஸ் செய்வதற்கு உபயோகிக்கப்படுகிறது.

**ஒரு கம்ப்யூட்டருடன் நாம் என்ன செய்யலாம்?**
ஒரு கம்ப்யூட்டர் மூலமாக, நீங்கள் பல மைல்கள் தொலைவில் உள்ள உங்கள் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளலாம், தகவலைச் ஸ்டோர் செய்யலாம், ரயில்வே டிக்கெட்டுகளை முன்பதிவு செய்யலாம், உங்கள் வங்கி கணக்குகளை பயன்படுத்தலாம், கேம் விளையாடலாம், இசைக் கேட்கலாம் மற்றும் திரைப்படங்களைப் பார்க்கலாம்!

**ஒரு கம்ப்யூட்டரின் இரண்டு பாகங்கள் என்னென்ன?**
ஒரு கம்ப்யூட்டர் இரண்டு பாகங்களாக பிரிக்கப்படுகிறது-ஹார்டுவேர் (வன்பொருள்) மற்றும் சாஃப்ட்வேர் (மென்பொருள்) கம்ப்யூட்டர் மற்றும் அதனுடன் இணைக்கப்படும் அனைத்து சாதனங்களும் ஹார்டுவேர் (வன்பொருள்) என்று அழைக்கப்படுகிறது. சாஃப்ட்வேர் (மென்பொருள்) என்பது ஒரு வேலை செய்வதில் கம்ப்யூட்டர் பின்பற்றும் அறிவுரைகளின் தொகுதியாகும்.

**ஒரு கம்ப்யூட்டரின் பாகங்கள்**
கம்ப்யூட்டர் வெவ்வேறு பாகங்களால் ஆனது:

- இன்புட் சாதனங்கள்
- ப்ராசசிங் சாதனங்கள்
- அவுட்புட் சாதனங்கள்




**இன்புட் சாதனங்கள்**
ஒரு கம்ப்யூட்டரில் டேட்டா , அறிவுரைகள் அல்லது தகவலை நுழைப்பதற்காக உபயோகிக்கப்படும் சாதனங்கள். உதாரணம்-மவுஸ், கீபோர்டு, பென் டிரைவ், சி டி , மைக்ரோ ஃபோன், ஜாய்ஸ்டிக் மற்றும் ஸ்கேனர். கீபோர்டு மற்றும் மவுஸ் முதன்மையான இன்புட் சாதனங்கள்.

**கீபோர்டு**
கீபோர்டு ஒரு டைப்ரைட்டர் கீபோர்டைப் போன்றதே, அதில் உள்ள கூடுதல் கீக்களைத் தவிர. வழக்கமான கீக்கள் தவிர, இது எண்களைக் கொண்ட கீபேடு மற்றும் நேவிகேஷன் மற்றும் எடிட் செய்வதற்கான கீக்கள் , டைரக்ஷனல் கீஸ், செயல்பாட்டிற்கான கீக்கள் மற்றும் எஸ்கேப் கீ (ESC). போன்ற சில பிரத்யேகமான கீக்களையும் இது கொண்டிருக்கிறது.





**ந்யூமரிக் கீபேடு** என்பது ஒரு கேல்குலேட்டரைப் போல கீபேடுடன் நம்பர்களை டைப் செய்வதற்கு ந்யூமரிக் கீபேடு உங்களுக்கு உதவுகிறது

**நேவிகேஷனல் கீக்கள்** மானிட்டரில் ஒரு பக்கத்தைப் பார்பதற்கு உங்களுக்கு உதவுகிறது **பேஜ் அப் கீ** கர்சரை நகர்த்துகிறது மற்றும் ப்ரோக்ராமில் ஸ்க்ரீனின் மேலே உள்ள பகுதியை பார்க்கும்படி செய்கிறது. **பேஜ் டவுன் கீ** கர்சரை நகர்த்துகிறது மற்றும் ப்ரோக்ராமில் ஸ்க்ரீனின் கீழே உள்ள பகுதியை பார்க்கும்படி செய்கிறது. **ஹோம் கீ** கர்சரை ஆவணத்தின் தொடக்கத்திற்கு நகர்த்துகிறது. **என்ட் கீ** கர்சரை ப்ரோக்ராமில் உள்ள எழுத்துக்களின் இறுதி எழுத்திற்க்கு நகர்த்துகிறது






**எடிட்டிங் கீக்கள்** கம்ப்யூட்டரில் உள்ள டெக்ஸ்ட் டாக்குமென்டுகளை எடிட் செய்வதில் உதவுகிறது **இன்சர்ட்** பட்டன் என்பது பெரும்பாலான டெக்ஸ்ட் எடிட் செய்வதற்கான ப்ரோக்ராம்களில் எழுத்துக்களை நுழைப்பது மற்றும் மேலே எழுதுவதற்கு இடையே மாறிக் கொள்கிறது **டெலீட்** பட்டன் என்பது டெக்ஸ்ட் எடிட் செய்வதற்கான ப்ரோக்ராம்களில் டெக்ஸ்டில் ஒரு தனி எழுத்தை (வலது பக்கத்தில்) டெலீட் செய்கிறது **பேக்ஸ்பேஸ் கீ** டெக்ஸ்ட் எடிட் செய்வதற்கான ப்ரோக்ராம்களில் டெக்ஸ்டின் ஒரு தனி எழுத்தை (இடது பக்கத்தில்) டெலீட் செய்கிறது

**டைரக்ஷனல் கீ உங்**களை கர்சர் மேலே, கீழே, இடது அல்லது வலது பக்கத்திற்கு நகர்வதற்கு உங்கள் உதவுகிறது **மேலே** உள்ள அம்புக்குறி கீ கர்சரை மேலே நகர்த்துகிறது, அதே சமயத்தில் கீழ் நோக்கிய அம்புக்குறி கீ டெக்ஸ்ட் எடிட் செய்வதற்கான ப்ரோக்ராம்களில் கர்சரை கீழே நகர்த்துகிறது. **இடது** பக்க அம்புக்குறி கீ கர்சரை இடது பக்கமாக நகர்த்துகிறது மற்றும் வலது பக்க அம்புக்குறி , டெக்ஸ்ட் எடிட் செய்வதற்கான ப்ரோக்ராம்களில் கர்சரை வலது பக்கமாக நகர்த்துகிறது





ஃப்ங்க்ஷனல் கீ எந்த ப்ரோக்ராம் ஆக்டிவானது (செயல்பாட்டில் உள்ளது) என்பதைப் பொருத்து குறிப்பாக நியமிக்கப்பட்ட செயல்பாடுகளைச் செய்கிறது




**எஸ்கேப் கீ** , பெரும்பாலான ப்ரோக்ராம்களில், தற்போது செயல்பாட்டில் உள்ள செயல்முறைகளை முடித்துவிடுகிறது



க்ன்ட்ரோல் (CTRL) மற்றும் ஆல்டர்னேட் (ALT) கீ செயல்பாட்டை மாற்றுவதற்கான கீக்கள், இவை பெரும்பாலான ப்ரோக்ராம்களில் குறிப்பிட்ட நடவடிக்கைகள் மற்றும் மவுஸ் செயல்பாடுகளை மாற்றும் அல்லது மேம்படுத்தும்,




விண்டோஸ் கீ , விண்டோஸ் ஸ்டார் மெனுவை ஆக்டிவேட் செய்கிறது, இது டாஸ்க் பாரின் ஸ்டார்ட் பட்டனைக் க்ளிக் செய்வதைப் போன்றதே.



**மவுஸ்**

ஒரு மவுஸ் என்பது ஒரு பாயின்டிங் சாதனம் மற்றும் இது கம்ப்யூட்டர் ஸ்க்ரீனில் உள்ள பொருட்களைச் (ப்ரோக்ராம்களை) சுட்டிக் காட்டுவதற்கு மற்றும் தொடர்பு கொள்வதற்கு உபயோகிக்கப்படுகிறது. மவுஸ் நகர்த்தப்பட்டவுடன், மவுஸ் நகரும் அதே திசையில் ஸ்க்ரீன் மீது ஒரு சிறிய அம்புக்குறி நகர்வதை நீங்கள் கவனிப்பீர்கள். இந்த அம்புக்குறி பாயின்டர் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த பாயின்டர் ப்ராசசிங்கிற்காக கம்ப்யூட்டருக்கு தகவல் அல்லது அறிவுரைகளை அளிக்கலாம்.




ஒரு மவுஸ் இரண்டு பட்டன்களைக் கொண்டிருக்கிறது? இடது மற்றும் வலது. இது இரண்டு பட்டன்கள் இடையே ஒரு ஸ்க்ரோல் வீலையும் உள்ளடக்கியது, இது ஆவணங்கள் மற்றும் வெப் பேஜ்கள் இடையே அதிக சுலபமாக நகர்த்துவதற்கு உங்களுக்கு உதவுகிறது. இடது பட்டனை ஒரு முறை க்ளிக் செய்வதன் மூலமாக, நீங்கள் ஸ்க்ரீனில் ஒரு குறிப்பிட்ட ப்ரோக்ராமைத் தேர்ந்தெடுக்கலாம். இடது பட்டனை விரைவாக இரு முறை க்ளிக் செய்வதன் மூலமாக, தேர்ந்தெடுக்கப்பட்ட ப்ரோக்ராமிற்கு உள்ளே உங்களை வழிகாட்டுகிறது. மவுசின் வலது பட்டனை க்ளிக் செய்வது , இன்டெக்சஸ் மெனுவைத் திறக்கும். இந்த ஸ்க்ரால் வீல் ஸ்க்ரீனில் ஒரு பக்கத்தில் மேலே அல்லது கீழே செல்ல உங்களுக்கு உதவுகிறது.

**ப்ராசசிங் சாதனங்கள்**

ப்ராசசிங் சாதனங்கள் ஒரு கம்ப்யூட்டரில் தகவலை ஸ்டோர் செய்வதை மற்றும் சேவ் செய்வதைக் கட்டுப்படுத்துகிறது. கம்ப்யூட்டர் ப்ராசசரால் (சி பி யூ) ப்ராசெஸ் செய்யப்பட்ட தகவல், கம்ப்யூட்டர் மெமரி அல்லது ராமில் (RAM) சேவ் செய்யப்படுகிறது

**அவுட்புட் சாதனங்கள்**

ஒரு கம்ப்யூட்டருடன் முடிவுகளை (ரிசல்டை) காண்பிப்பதற்கு உபயோகிக்கப்படும் சாதனங்கள், அவுட்புட் சாதனங்கள் என்றழைக்கப்படுகிறது. முக்கிய அவுட்புட் சாதனங்கள், மானிட்டர், ப்ரின்டர், ஸ்பிக்கர், ஹெட்ஃபோன்கள் மற்றும் ப்ரொஜெக்டர்கள் ஆகும்.



**மானிட்டர்** என்பது வார்த்தைகள் , நம்பர்கள் மற்றுக் க்ராஃபிக்ஸ் போன்ற முடிவுகளை (அவுட்புட்டை) டிஸ்பிளே செய்வதற்கு உபயோகிக்கப்படும் ஸ்க்ரீன், மானிட்டர்கள் இரண்டு வகைகள் கொண்டவை-கேதோட் ரே ட்யூப் (சி ஆர் டீ) மற்றும் ஃப்ளாட் பேனல் டிஸ்பிளேக்கள். **ப்ரின்டர்** கம்ப்யூட்டரிலிருந்து சாஃப்ட் காபி என்றழைக்கப்படும் ப்ராசெஸ் செய்யப்பட்ட டேட்டாவை எடுத்து அதன் அச்சடிக்கப்பட்ட நகலை (ஹார்டு காப்பியை) உருவாக்குகிறது சாஃப்ட் காபி என்பது ஒரு இமேஜ் அல்லது டெக்ஸ்ட் ஃபைல் , இது கம்ப்யூட்டரில் பார்க்கப்படுகிறது, ஆனால் ஒரு ஹார்டுகாபி என்பது அதன் அச்சடிக்கப்பட்ட வடிவம் மூன்று வகையான ப்ரின்டர்கள் உள்ளன: இங்க்ஜெட், லேசர் மற்றும் டாட் மேட்ரிக்ஸ் ப்ரின்டர்.





**ஸ்பீக்கர்** என்பது ஒரு அவுட்புட் சாதனம், இதன் மூலமாக நாம் சப்தத்தைக் கேட்கிறோம் ஒரு ஸ்பீக்கர் இல்லாமல் உங்களால் இசை கேட்க முடியாது, ஆடியோவில் உள்ளடக்க விஷயங்களைக் கேட்கலாம் போன்றவை.



**ஹெட் ஃபோன்கள்** கம்ப்யூட்டரிலிருந்து சவுன்ட் அவுட்புட்டை அளிக்கிறது. அவை ஸ்பீக்கர்களைப் போன்றதே , ஆனால் அவை காதுகள் மீது அணியப்படுகிறது, இதனால் அந்த அவுட்புட்டை ஒரு சமயத்தில் ஒரு நபர் மட்டுமே கேட்கலாம்.



**ப்ரொஜெக்டர்** என்பது ஒரு அவுட்புட் சாதனம், இதன் மூலமாக டெக்ஸ்ட் அல்லது ஒரு இமேஜ் ஒரு ஃப்ளாட் ஸ்க்ரீன் மீது ப்ரொஜெக்ட் செய்யப்படுகிறது. ஒரு ப்ரொஜெக்டர் என்பது அடிக்கடி மீட்டிங்கில் ப்ரெசன்டேஷன்களை அளிப்பதற்கு உபயோகிக்கப்படுகிறது. இது டிஸ்பிளேவை பலர் பார்பதை அனுமதிக்கிறது.

## பயிற்சி 1

1. பின்வருபவைகளில் எது ஒரு இன்புட் சாதனம்?
   ப்ரொஜெக்டர் ஹெட்ஃபோன் பென்டைரைவ்

2. பின்வருபவைகளில் எது ஒரு அவுட்புட் சாதனம்?
   ஸ்பீக்கர் மைக்ரோஃபோன் மவுஸ்

3. கீபோர்டில் உள்ள எந்த கீ கர்சரை ஆவணத்தின் தொடக்கப்பகுதிக்கு எடுத்துச் செல்கிறது?
   ஹோம் ஷிஃப்ட் ஆல்ட்

4. எந்த அவுட்புட் சாதனத்தால் ஒரு சாஃப்ட் காபியிலிருந்து ஒரு ஹார்டு காப்பியை (அச்சடிக்கப்பட்ட நகல்) உருவாக்க முடியும்?
   ப்ரொஜெக்டர் ப்ரின்டர் ஸ்பீக்கர்

**கம்ப்யூட்டர் மெமரி**

ஒரு கம்ப்யூட்டர் , கம்ப்யூட்டர் மெமரியில் டேட்டாவை ஸ்டோர் செய்கிறது. ஒரு கம்ப்யூட்டர் என்பது இரண்டு வகையான மெமரிகளைக் கொண்டிருக்கிறது- ப்ரைமரி அல்லது மெயின் மெமரி மற்றும் செகன்டரி மெமரி.




இந்த மெயின்/ ப்ரைமரி மெமரி ரேம்(RAM) - ராண்டம் ஆக்செஸ் மெமரி என்றழைக்கப்படுகிறது இது மிகவும் விரைவானது கம்ப்யூட்டரின் வேகம் ரேமைச் (RAM) சார்ந்தது. டேட்டா மற்றும் அறிவுரைகள் ரேமில்(RAM) ஸ்டோர் செய்யப்படுகிறது, இதிலிருந்து டேட்டா மற்றும் அறிவுரைகள் முடிவுகளை (ரிசல்டுகளை) ப்ராசஸ் செய்வதற்கான சென்ட்ரல் ப்ராசசிங் யூனிட் அல்லது சி பி யூ-விற்கு செல்கிறது. ரேம் (RAM) என்பது அனைத்து ப்ரோக்ராம்களும் ஸ்டோர் செய்யப்படும் மெமரி. கேச் மெமரி என்பதும், ரேமின் (RAM ) ஒரு பகுதியாகும் மற்றும் ப்ராசசருக்கும் மிகவும் நெருக்கமானது. இது ப்ராசசிங் வேகத்தை மேம்படுத்துவதற்கு உபயோகிக்கப்படுகிறது.




ப்ரைமரி மெமரி வரையறுக்கப்பட்டது என்றால், வரையறுக்கபடாத டேட்டாவை ஸ்டோர் செய்வதற்கு செகண்டரி மெமரி உபயோகிக்கப்படுகிறது செகண்டரி மெமரியில் வைக்கப்படும் எந்த டேட்டா அல்லது ப்ரோக்ராமும், ரேமில் (RAM) நகல் செய்யப்பட வேண்டும் ஏனென்றால் கம்ப்யூட்டரால் நேரடியாக செகன்டரி மெமரியில் ப்ராசஸ் செய்ய முடியாது. பென் டிரைவ், ஹார்டு டிஸ்க் மற்றும் டிவிடி செகன்டரி மெமரி சாதனங்களின் உதாரணங்கள்



**ஒரு கம்ப்யூட்டரின் மெமரியில் டேட்டா எப்படி ஸ்டோர் செய்யப்படுகிறது?**
கம்ப்யூட்டர் அனைத்து தகவலையும் வெறும் இரண்டு இலக்கங்களில் ஸ்டோர் செய்கிறது - 0 மற்றும் 1. ஒரு பைனரி இல்லக்கம் , அதாவது 1 அல்லது 0 என்பது ஒரு பிட் என அழைக்கப்படுகிறது. எட்டு பிட்டுகளின் ஒரு குழு ஒரு பைட் என்றழைக்கப்படுகிறது.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 1 |
| 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 1 | 0 |
| 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 |
| 1 | 0 | 0 | 1 | 1 | 0 | 0 | 0 |
| 0 | 0 | 0 | 1 | 1 | 1 | 0 | 0 |
| 0 | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 |
| 0 | 0 | 1 | 0 | 1 | 0 | 0 | 1 |
| 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 1 | 0 |

கீழே உள்ள கட்டம் பிட் மற்றும் பைட்டுகள் இடையே உள்ள உறவைக் காண்பிக்கிறது:

| | |
|---|---|
| 1 பைட் | 8 பிட்டுகள் |
| 1 கிலோபைட்டுகள் (1 கேபி) | 1024 பைட்டுகள் |
| 1 மெகாபட் (1 எம் பி) | 1024 கே பி |
| 1 கிகா ஃபைட் (1 ஜிபி) | 1024 எம் பி |

**சாஃப்ட்வேர் வகைகள்**
ஹார்டுவேரைக் கன்ட்ரோல் செய்வதற்கு மற்றும் வேலைகளை முடிப்பதற்கு உபயோகிக்கப்படும் அறிவுரைகள் சாஃப்ட்வேர் என்றழைக்கப்படுகிறது. சாஃப்ட்வேர் ப்ரோக்ராம்கள் என்பது திட்டமிடப்பட்ட படிப்படியான அறிவுரைகளின் செட்டாகும் , இது என்ன செய்வது மெற்றும் எப்படி செய்வது என கம்ப்யூட்டருக்கு வழிகாட்டுகிறது, இரண்டு வகையான சாஃப்ட்வேர்கள் இருக்கிறது-அப்ளிகேஷன் சாஃப்ட்வேர் மற்றும் சிஸ்டம் சாஃப்ட்வேர்.




**அப்ளிகேஷன் சாஃப்ட்வேர்** என்பது ஒரு கம்ப்யூட்டரில் ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்வதற்கு , உபயோகிப்பவருக்கு உதவும் ஒரு ப்ரோக்ராம். மைக்ரோசாஃப்ட் வொர்டு மற்றும் ஓபன் ஆஃபீஸ் ட்ரா ஆகியவை அப்ளிகேஷன் சாஃப்ட்வேரின் உதாரணங்கள்




கம்ப்யூட்டர் ஹார்டுவருடன் நேரடியாக தொடர்புடைய ப்ரோக்ராம்கள் **சிஸ்டம் சாஃப்ட்வேர்** என்றழைக்கப்படுகிறது. ஒரு கம்ப்யூட்டரை இயக்குவதற்கு உங்ளுக்கு ஒரு ஆபரேட்டிங் சிஸ்டம் தேவை, இது ஒரு சிஸ்டம் சாஃப்ட்வேர்.

## பயிற்சி 2

1. பின்வருபவைகளில் எது ஒரு இன்புட் சாதனம்?
   ப்ரொஜெக்டர் ஹெட்ஃபோன் பென்டைரைவ்

2. பின்வருபவைகளில் எது ஒரு அவுட்புட் சாதனம்?
   ஸ்பீக்கர் மைக்ரோஃபோன் மவுஸ்

3. கீபோர்டில் உள்ள எந்த கீ கர்சரை ஆவணத்தின் தொடக்கப்பகுதிக்கு எடுத்துச் செல்கிறது?
   ஹோம் ஷிஃப்ட் ஆல்ட்

4. எந்த அவுட்புட் சாதனத்தால் ஒரு சாஃப்ட் காபியிலிருந்து ஒரு ஹார்டு காப்பியை (அச்சடிக்கப்பட்ட நகல்) உருவாக்க முடியும்?
   ப்ரொஜெக்டர் ப்ரின்டர் ஸ்பீக்கர்

## ஒரு கம்ப்யூட்டரை செட் செய்வது மற்றும் அது வேலை செய்வது



இந்த மானிட்டர் ஒரு டிவி போன்றது மற்றும் ஸ்க்ரீன் மீது அவுட்புட்டை டிஸ்பிளே செய்வதற்கு உபயோகிக்கப்படுகிறது. இந்த சிஸ்டம் யூனிட் பாக்ஸ் , சென்ட்ரல் ப்ராசசிங் யூனிட்டை (சி பி யூ) கொண்டிருக்கிறது. சி பி யூ என்பது கம்ப்யூட்டரின் மூளையாகும். கீபோர்டு மற்றும் மவுஸ் இன்புட் சாதனங்கள் , இதன் மூலமாக நாம் கம்ப்யூட்டருக்குள் டேட்டாவைப் போடுகிறோம்.

**கம்ப்யூட்டருடன் இணைப்பதற்கான படிகள்**

| | | |
|---|---|---|
| படி 1 | ஒரு மேஜை மீது கம்ப்யூட்டரை வைக்கவும். சிஸ்டம் யூனிட்டை மானிட்டருக்கு அருகே செட் செய்யவும். இந்த சிஸ்டம் யூனிட்டின் பின்பக்க பகுதி, வெவ்வேறு சாதனங்களை இணைப்பதற்கான கனெக்ஷன் ஸ்லாட்டுகள் அனைத்தையும் கொண்டிருக்கிறது. |  |
| படி 2 | இந்த சிஸ்டம் யூனிட்டின் வீடியோ போர்ட் வி ஜி ஏ போர்ட் என்றழைக்கப்படுகிறது. வி ஜி ஏ கேபிளின் ஒரு முனையை சிஸ்டம் யூனிட்டின் வீடியோ போர்டுடன் இணைக்கவும் மற்றும் மற்ற முனையை மானிட்டருடன் இணைக்கவும். |  |
| படி 3 | ஒரு கீபோர்டு என்பது இந்த இரண்டு வகையான கனெக்டர்களுடன் வருகிறது - PS/2 கனெக்டர் அல்லது யூ எஸ் பி கனெக்டர் சிஸ்டெம் யூனிட்டுடன் கீ போர்டை இணைப்பதற்கு, அளிக்கப்பட்டிருக்கும் கனெக்டரை சிஸ்டம் யூனிட்டில் உள்ள போர்டிற்குள் ப்ளக் செய்யவும் (சொருகவும்) |  |
| படி 4 | ஒரு கம்ப்யூட்டர் மவுஸ் என்பது மூன்று வெவ்வேறு மாடல்களின் கனெக்டருடன் வருகிறது - PS/2 கனெக்டர், யூ ஏஸ் பி கனெக்டர் அலது சீரியல் கனெக்டர். மவுசை கனெக்ட் செய்வதற்கு, அளிக்கப்பட்டிருக்கும் கனெக்டரை சிஸ்டம் யூனிட்டில் பொருத்தமான போர்டில் நுழைக்கவும். |  |
| படி 5 | அதே போல, கம்ப்யூட்டருடன் நீங்கள் ஒரு ப்ரின்டரை இணைக்க விரும்பினால், அளிக்கப்பட்டிருக்கும் கனெக்டரை சிஸ்டம் யூனிட்டின் இரண்டு வகை போர்டுகளான - பேரலெல் போர்ட் அல்லது யூ எஸ் பி போர்டில் ஒன்றில் மட்டுமே நுழைக்கவும். |  |

**கம்ப்யூட்டரை மெயின் எலெக்ட்ரிக் போர்டுடன் இணைப்பதற்கான படிகள்**

**படி 1:** சிஸ்டம் யூனிட்டில் பவர் சப்ளை ப்ளக்கில் ஒரு பவர் சப்ளை கேபிளை ப்ளக் செய்யவும் மற்றும் மானிட்டரில் பவர் சப்ளை போர்டிற்கு மற்ற கேபிளை ப்ளக் செய்யவும்.

**படி 2:** அளிக்கப்பட்டிருக்கும் ஒரு ஸ்விட்ச் போர்டில் அல்லது யூ பி எஸ்-ல் பவர் பளகிற்கு இரண்டு கேபிள்களையும் ப்ளக் செய்யவும்.

**கம்ப்யூட்டரை ஆன் செய்வதற்கான படிகள்**

| | | |
|---|---|---|
| படி 1 | சிஸ்டம் யூனிட் மற்றும் மானிட்டர் இரண்டின் பவர் சப்ளையையும் ஸ்விட்ச் ஆன் செய்யவும். |  |
| படி 2 | சிஸ்டம் யூனிட்டின் பவர் பட்டனை அழுத்தவும். |  |
| படி 3 | பின்னர் மானிட்டரின் பவர் பட்டனை அழுத்துவதன் மூலமாக ஸ்விட்ச் ஆன் செய்யவும். |  |
| படி 4 | சற்று நேரத்திற்கு காத்திருக்கவும், மானிட்டர் மீது டிஸ்பிளே தோன்றும். இதுவே பூட் ஸ்க்ரீன் என்றழைக்கப்படுகிறது. லோட் செய்யப்பட்டிருக்கும் அனைத்து சாஃப்ட்வேரையும் நீங்கள் பார்க்கலாம். இப்போது இந்த கம்ப்யூட்டர் உபயோகிப்பதற்கு தயாராக இருக்கிறது. |  |

## II. மொபைல் ஃபோனின் பாகங்கள், செயல்பாடுகள் மற்றும் அப்ளிகேஷன்கள் (பயன்பாட்டு அம்சங்கள்)

**ஒரு மொபைல் ஃபோன் என்றால் என்ன?**

ஒரு மொபைல் ஃபோன் என்பது ஒரு வையர் இல்லாத கையில் வைக்கப்படக்கூடிய சாதனம், இது மற்ற அம்சங்கள் இடையே உபயோகிப்பவர்களை கால்கள் செய்வதற்கு மற்றும் டெக்ஸ்ட் மெசேஜ்களை அனுப்புவதற்கு அனுமதிக்கிறது. இப்போதெல்லாம், மொபைல் ஃபோன்கள் வெப் பிரவுசர்கள், கேம்கள் , கேமராக்கள் , வீடியோ ப்ளேயர்கள் மற்றும் நேவிகேஷனல் சிஸ்டம்கள் போன்ற அதிகமான கூடுதல் அம்சங்களுடன் பேக் செய்யப்பட்டிருக்கிறது



ஒரு அடிப்படை மொபைல் ஃபோன் என்பது எளிமையான ஃபோன்களில் ஒன்று , இதன் மூலமாக நீங்கள் ஃபோன் கால்களைச் செய்யலாம் அல்லது பெறலாம் மற்றும் டெக்ஸ்ட் மெசேஜ்களை அனுப்பலாம் அல்லது பெறலாம்.



நவீன மொபைல் ஃபோன்கள் அல்லது ஸ்மார்ட் ஃபோன்கள் அதிகமான கூடுதல் அம்சங்கள் கொண்டிருக்கிறது, இவை தொடர்புகள் , கம்ப்யூட்டிங் மற்றும் பொழுதுபோக்கிற்காக உபயோகிக்கப்படலாம். இந்த ஃபோன்கள் , இமெயில் மற்றும் வெப் பிரவுசிங் முதல் இசை இசைக்கச் செய்வது, வீடியோக்கள் எடுப்பது மற்றும் பார்பது, டேட்டாவை ஸ்டோர் செய்வது மற்றும் நிர்வகிப்பது போன்ற பல வேலைகளைச் செய்கிறது.



சில மொபைல் ஃபோன்கள் ஒரு தனி ஹேண்ட்செட்டில் இரண்டு சிம் கார்டுகள் பொருத்துவதற்கு உங்களை அனுமதிக்கிறது. இவை இரட்டை சிம் ஃபோன்கள் என்றழைக்கப்படுகிறது.

**ஒரு மொபைல் ஃபோனின் பாகங்கள்**

ஒரு மொபைல் ஃபோனின் வெவ்வேறு பாகங்கள் கீழே உள்ள படத்தில் காண்பிக்கப்பட்டிருக்கிறது




**ஒரு ஃபோனில் சிம் கார்டு மற்றும் பேட்டரியை நுழைப்பதற்கான படிகள்**

| | | |
|---|---|---|
| படி 1 | ஃபோனை ஸ்விட்ச் ஆஃப் செய்யவும் மற்றும் பின் கவரை அகற்றவும் |  |
| படி 2 | ஃபோனில் பேட்டரி இருந்தால் , அதை வெளியே எடுக்கவும் |  |
| படி 3 | சிம் ஸ்லாட்டிற்குள் சிம்மை நுழைக்கவும் |  |

| | | |
|---|---|---|
| படி 4 | ஃபோனில் திரும்பவும் பேட்டரியைப் போடவும் |  |
| படி 5 | பின்பக்க கவரைத் திரும்ப வைக்கவும் மற்றும் ஃபோனை மீண்டும் ஸ்டார்ட் செய்யவும் |  |

**உங்கள் ஃபோனில் பேட்டரியை சார்ஜ் செய்வதற்கான படிகள்**

| | | |
|---|---|---|
| படி 1 | சார்ஜரை ஒரு சுவர் ப்ளக் பாயின்டில் சொருகவும். |  |
| படி 2 | ஃபோனுடன் சார்ஜரை இணைக்கவும். உங்கள் மொபைல் 'பேட்டரி ஃபுல்' என காண்பிக்கும் போது, ஃபோனிலிருந்து சார்ஜரை எடுக்கவும் மற்றும் பின்னர் சுவரில் உள்ள ப்ளகிலிருந்து எடுக்கவும். |  |

**ஃபோனை எப்படி லாக் செய்வது மற்றும் அன்லாக் செய்வது**

நீண்ட நேரத்திற்கு உங்கள் ஃபோன் உபயோகத்தில் இல்லாத போது உங்கள் ஃபோனிகன் கீக்களை லாக் செய்வது எப்போதுமே சிறந்தது. உங்கள் ஃபோனின் கீக்களை லாக் செய்வதற்கு, மெனுவைத் தேர்ந்தெடுக்கவும் பின்னர் (*) கீயை அழுத்தவும். உங்கள் ஃபோனில் உள்ள கீக்களை அன்லாக் செய்வதற்கு, அன்லாக்கை பிரெஸ் செய்யவும் பின்னர் (*) கீயை அழுத்தவும்.

*குறிப்பு: நீங்கள் உங்கள் ஃபோனுக்காக ஒரு அன்லாக் முறையை , பின் அல்லது பாஸ் வொர்டை செட் செய்திருக்கிறீர்கள் என்றால், உங்கள் ஸ்க்ரீனை அன்லாக் செய்வதற்கு நீங்கள் அந்த முறையைப் பின்பற்ற வேண்டும் அல்லது பின் / பாஸ்வொர்டை டைப் செய்ய வேண்டும்.*



**உங்கள் ஃபோனின் அம்சங்களைக் கண்டறிவதற்கான படிகள்**

படி 1: 'மெனு' பட்டனை அழுத்தவும் அல்லது தொடவும் அதில் உள்ள அனைத்து அம்சங்களும் அதன் மீது டிஸ்பிளே செய்யப்படும்

படி 2: முன்பிருந்ததைப் பார்பதற்கு திரும்பச் செல்வதற்கு, 'பேக்' பட்டனை அழுத்தவும்/ தொடவும்

படி 3: ஹோம் ஸ்க்ரீனுக்கு திரும்பச் செல்வதற்கு , ஃபோனின் மீது ஹோம் ஐகான்/ பட்டனை ப்ரெஸ் செய்யவும்/ தொடவும்

**ஒரு அடிப்படையான ஃபோனில் ரிங்க்டோனை மாற்றுவதற்கான படிகள்**

| | | |
|---|---|---|
| படி 1 | மெனு > செட்டிங்க்ஸ் -ஐ தேர்ந்தெடுக்கவும் |  |
| படி 2 | 'டோன்சை' தேர்ந்தெடுக்கவும் மற்றும் 'ரிங்டோனுக்கு' ஸ்க்ரோல் செய்யவும். |  |
| படி 3 | 'கேலரியை' திறப்பதற்கு ஸ்க்ரோல் செய்யவும் ரிங்டோன்களின் ஒரு பட்டியல் தோன்றும். நீங்கள் தேர்வு செய்யும் ரிங்க்டோன் மீது க்ளிக் செய்வதன் மூலமாக ரிங்க்டோனை தேர்தெடுக்கவும் |  |

**ஒரு ஸ்மார்ட் ஃபோனில் ரிங் டோனை மாற்றுவதற்கான படிகள்**

| | | |
|---|---|---|
| படி 1 | ஹோம் கீ > மெனு கீ > பர்சனலைசேஷன் / செட்டிங்சைத் தொடவும் |  |
| படி 2 | ப்ரொஃபைல் செட்டிங்கை தொடவும் |  |

| | | |
|---|---|---|
| படி 3 | டச் ஃபோன் ரிங்டோன் அல்லது நோடிஃபிகேஷன் ரிங்டோனைத் தொடவும். |  |
| படி 4 | ரிங்டோன் பட்டியலை ஸ்க்ரால் செய்யவும் மற்றும் நீங்கள் உபயோகிக்க விரும்பும் ரிங்டோனைத் தேர்ந்தெடுக்கவும் மற்றும் 'ஓகே' வைத் தொடவும். |  |

**அடிப்படை ஃபோன் மீது ஒரு அலாரத்தை செட் செய்வதற்கான படிகள்**

படி 1: மெனு>அப்ளிகேஷன்ஸ்>அலாரம் க்ளாக்கை> தேர்ந்தெடுக்கவும்

படி 2: அலாரம் நேரத்தை தேர்ந்தெடுக்கவும், பின்னர் சேவைத் தேர்ந்தெடுக்கவும்.

படி 3: அலாரத்தை திருப்பி அடிக்கச் செய்வதற்கு, ஆப்ஷன்ஸ்>'ரிபீட் டேஸ்' தேர்ந்தெடுக்கவும் மற்றும் அந்த நாளைத் தேர்ந்தெடுக்கவும்

படி 4: 'டன்' என்பதை தேர்ந்தெடுக்கவும்

**ஒரு ஸ்மார்ட் ஃபோனில் ஒரு அலாரத்தை செட் செய்வதற்கான படிகள்**

படி 1: மெனுவைத் தொடவும்

படி 2: க்ளாக்கை தொடவும்

படி 3: அலாரம் என்பதை தொடவும்

படி 4: அலாரம் நேரத்தை செட் செய்யவும்

படி 5: சேவை தொடவும்

## III. டேப்லெட்டின் பாகங்கள் , செயல்பாடுகள் மற்றும் அப்ளிகேஷன்கள்



ஒரு டேப்லெட் என்பது ஸ்மார்ட் ஃபோன் அல்லது ஒரு லேப்டாப் / கம்ப்யூட்டரைப் போன்ற ஒரு கச்சிதமான சாதனம். இன்டெர்னெட் பிரவுஸ் செய்வது, இ-மெயில் பார்பது, புத்தகங்களை டவுன்லோட் செய்வது மற்றும் புத்தகங்களை வாசிப்பது, கேம் விளையாடுவது, வீடியோக்கள் பார்பது , உள்ளடக்க விஷயங்களை ஒழுங்குபடுத்துவது போன்றவை மற்றும் மேலும் பல வெவ்வேறு காரணங்களுக்காக இது உபயோகிக்கப்படலாம் பொதுவாக, டேப்லெடுகள் தொட்டு இயக்ககூடியவை மற்றும் ஒரு ஸ்மார்ட் ஃபோன் மற்றும் ஒரு லேப்டாப்பின் சைசிற்கு இடையே உள்ள சைஸ் கொண்டிருக்கும்.



இது இன்டெர்னெட் பிரவுஸ் செய்வதற்கு, இ-மெயில் பார்பதற்கு, புத்தகங்களை டவுன்லோட் செய்வது மற்றும் புத்தகங்களை வாசிப்பது , கேம் விளையாடுவது, வீடியோ பார்பது அல்லது உள்ளடக்க விஷயங்களை ஒழுங்குபடுத்துதற்கு உபயோகிக்கப்படலாம்.

## டேப்லெட்டுகளின் வகைகள்

| | | |
|---|---|---|
| **கையேடு** | இது இரண்டு பக்கங்களிலும் ஒரு டிஸ்பிளேயைக் கொண்டிருக்கிறது, மற்றும் இரண்டு ஸ்க்ரீன்கள் மீதும் டச் ஸ்க்ரீன் செயல்பாட்டுடன் வருகிறது. இந்த சாதனம் கையெழுத்தை கணடறியும் மென் பொருளைக் கொண்டிருக்கிறது, இது நீங்கள் பேப்பரில் எழுதுவதைப் போலவே ஸ்க்ரீன் மீது எழுதுவதற்கு உங்களை அனுமதிக்கிறது |  |
| **ஸ்லேட்** | இது பொதுவாக திரைப்படங்களைப் பார்பதற்கு, இணையதளத்தை பிரவுஸ் செய்வதற்கு , வீடியோக்கள் பார்பது , வீடியோ கால் செய்வது மற்றும் நண்பர்களுடன் சாட் செய்வதற்கான ஒரு பொழுதுபோக்கு மையமாக உபயோகிக்கப்படுகிறது |  |
| **கன்வர்டிபிள்** | இது ஏறக்குறைய ஒரு பாரம்பரிய லேப்டாப்பைப் போலவே தோற்றமளிக்கும், ஒரே முக்கிய வித்தியாசம் அவை ஒரு டச் ஸ்க்ரீன் டிஸ்பிளேயுடன் வருகிறது மற்றும் இது 180 டிகிரி சுழற்சி செய்யப்படலாம் |  |
| **ஹைப்ரிட்** | இது ஸ்லேட் மற்றும் கன்வர்டிபிள் டேப்லெட்டுகளிலிருந்து சிறந்த அம்சங்களை உள்ளடக்கியது ஹைப்ரிட் டேப்லெட் தனியாக பிரிக்க கூடிய ஒரு கீபோர்டுடன் வருகிறது, அளிக்கப்பட்டிருக்கும் ஸ்லாட்டை உபயோகித்து ஸ்லேட் டேப்லெட்டுடன் இணைக்கப்படலாம், இதனால் டேப்லெட் , டேப்லெட் பிசியின் கன்வர்டிபிளாக மாற்றப்படலாம் |  |
| **ரகட்** | இந்த வகையான டேப்லெட் பிசி , கடினமான சுற்றுப்புறச் சூழ்நிலைகளில் வேலை செய்ய வேண்டிய உபயோகிப்பாளர்களுக்கு பொருந்துகிறது. அவை ஷாக் - அடிப்பதை தடுக்கும் , உள்ளுக்குள் உள்ள ஹார்டு டிரைவ் மற்றும் ஒரு பாதுகாப்பு உரை காரணமாக மிக அதிகமாக நீடித்துழைக்கிறது |  |

*குறிப்பு: முதல் முறையாக இந்த சாதனத்தை உபயோகிப்பதற்கு முன், குறைந்தபட்சம் 6-8 மணி நேரங்களுக்கு அல்லது பேட்டரி முழுமையாக சார்ஜ் செய்யப்படும் வரையில் நீங்கள் பேட்டரியை சார்ஜ் செய்ய வேண்டும்*

### ஒரு டேப்லெட்டின் பேட்டரியை சார்ஜ் செய்வதற்கான படிகள்

படி 1: சார்ஜிங் செய்வதற்கான பகுதிக்குள் கேபிளை நுழைக்கவும் மற்றும் ஒரு நிலையான ஏசி (ஆல்டர்னேட் கரன்ட்) பவர் ப்ளிகினுள் சொருகவும்

படி 2: இந்த சாதனம் முழுமையாக சார்ஜ் செய்யப்பட்ட பின், சார்ஜெங் ஹெட்டை ப்ளகிலிருந்து நீக்கவும்

### பவர் சேவ் மோட் மற்றும் லாக் ஸ்க்ரீன்

இந்த சாதனத்தில் மின்சாரத்தை மிச்சப்படுத்துவதற்கு, பவர் சேவ் பட்டனை அழுத்துவதன் மூலமாக நீங்கள் ஸ்க்ரீனை ஆ.ஃப் செய்யலாம், இது ஸ்க்ரீனை லாக் ஸ்க்ரீன் மோடிற்கு மாற்றும். இந்த சாதனத்தை மீண்டும் ஆக்டிவேட் செய்வதற்கு இந்த செயல்முறையைத் திரும்பச் செய்யவும்.

### இந்த சாதனத்தை ஆ.ஃப் செய்வதற்கான படிகள்

படி 1: சில நொடிகளுக்கு பவர் பட்டனை அழுத்தி பிடிக்கவும். நீங்கள் பவரை ஆ.ஃப் செய்ய விரும்புகிறீர்களா என்பதை உறுதி செய்யும் ஒரு மெனு தோன்றும்

படி 2: டேப்லெட்டை ஆ.ஃப் செய்வதற்கு பவர் ஆ.ஃபைத் தொடவும்

**ஒரு டேப்லெட்டின் ஹோம் ஸ்க்ரீன்**

ஒரு டேப்லெட்டின் ஹோம் ஸ்க்ரீன் என்பது அப்ளிகேஷன்கள் , செயல்பாடுகள் மற்றும் மெனுக்களுக்கான தொடங்கும் இடம். அப்ளிகேஷன் ஐகான்கள் , ஷார்ட் கட்டுகள் , ஃபோல்டர்கள் அல்லது விட்ஜெட்டுகளைச் சேர்ப்பதன் மூலமாக உங்கள் ஹோம் ஸ்க்ரீனை நீங்கள் மாற்றி அமைக்கலாம்.



**கூடுதல் ஸ்க்ரீன்களை டிஸ்பிளே செய்வதற்கு ஸ்க்ரீனை இடது பக்கத்திலிருந்து வலது பக்கத்திற்கு ஸ்வைப் செய்யவும் (மேலே கையை வைத்து தள்ளி விடவும்)**

## பயிற்சி 3

1. எந்த வகையான டேப்லெட் கடினமான சுற்றுப்புறச் சூழ்நிலைகளில் வேலை செய்ய வேண்டி மக்களுக்கு பொருத்தமானது?
   புக்லெட் ரகட் ஹைப்ரிட்

2. ஃபோன் கால்கள் செய்வது மற்றும் டெக்ஸ்ட் மெசேஜ்கள் அனுப்புவதை மட்டுமே செய்யக்கூடிய ஒரு மொபைல் ஃபோனை நாம் எப்படி அழைக்கிறோம்?
   பேசிக் ஃபோன் ஸ்மார்ட்ஃபோன் டுயல் சிம் ஃபோன்

3. கம்ப்யூட்டரின் எந்த பகுதி சி பி யு-வைக் கொண்டுள்ளது?
   மானிட்டர் சிஸ்டம் யுனிட் கீபோர்டு

4. ஒரு கம்ப்யூட்டரின் வீடியோ போர்ட் என்னவென்று அழைக்கப்படுகிறது?
   பி எஸ் /2 போர்ட் யு எஸ் பி போர்ட் வி ஜி ஏ போர்ட்

5. பொதுவாக இவற்றில் எந்தெந்த டேப்லெட்டுகள் ஒரு பொழுதுபோக்கு மையமாக உபயோகிக்கப்படுகிறது?
   ஸ்லேட் புக்லெட் ஹைப்ரிட்

# 2 டிஜிட்டல் சாதனங்களை இயக்குவது



## கற்றதன் விளைவுகள்

இந்த பிரிவின் இறுதியில், உங்களால் பின்வரும் செயல்களைச் செய்ய முடியும்:

- ஒரு கம்ப்யூட்டர் ஆபரேட்டிங் சிஸ்டத்தின் அடிப்படை அம்சங்களைப் புரிந்து கொள்வது
- மொபைல் ஃபோன் ஆபரேட்டிங் சிஸ்டம் மற்றும் அதன் அம்சங்களைப் புரிந்து கொள்வது
- டேப்லெட் ஆபரேட்டிங் சிஸ்டம் மற்றும் அதன் அம்சங்களைப் புரிந்து கொள்வது

## பாடத் திட்டம்

I. ஒரு கம்ப்யூட்டர் ஆபரேட்டிங் சிஸ்டத்தின் அடிப்படை அம்சங்கள்
II. மொபைல் ஃபோன் ஆபரேட்டிங் சிஸ்டம் மற்றும் அம்சங்கள்
III. டேப்லெட் ஆபரேட்டிங் சிஸ்டம் மற்றும் அம்சங்கள்

## I. ஒரு கம்ப்யூட்டர் ஆபரேட்டிங் சிஸ்டமின் அடிப்படை அம்சங்கள்

**ஆபரேட்டிங் சிஸ்டம்**

ஆபரேட்டிங் சிஸ்டம் என்பது மற்ற கம்ப்யூட்டர் ப்ரோக்ராம்களுடன் நாம் தொடர்பு கொள்வதற்கு நமக்கு உதவும் ஒரு ப்ரோக்ராம் ஒரு ஆபரேட்டிங் சிஸ்டம் இல்லாமல், ஒரு கம்ப்யூட்டர் பயனற்றது வெவ்வேறு வகையான ஆபரேட்டிங் சிஸ்டம்கள் கிடைக்கிறது.

இந்த ஆபரேட்டிங் சிஸ்டம் உபயோகிப்பவர் மற்றும் கம்ப்யூட்டர் இடையே , ஒரு இடைமுகமாக (இணைப்பு பாலமாக) வேலை செய்கிறது. மற்ற அனைத்து ப்ரோக்ராம்களும் தொடங்குவதற்கு ஒரு ஆபரேட்டிங் சிஸ்டம் தேவை, ஆனால் ஆபரேட்டிங் சிஸ்டம் தானாகவே தொடங்குகிறது. பவர் ஆன் செய்யப்படும் போது இது தானாகவே கம்ப்யூட்டரை தொடக்குகிறது.

**ஒரு ஆபரேட்டிங் சிஸ்டமின் செயல்பாடுகள்**




### ஆபரேட்டிங் சிஸ்டமை வகைப்படுத்துவது

ஆபரேட்டிங் சிஸ்டம் இரண்டு வகைகளாக பிரிக்கப்படலாம் :

- கேரக்டர் யூசர் இன்டர்ஃபேஸ் (சி யூ ஐ)
- க்ராஃபிகல் யூசர் இன்டர்ஃபேஸ் (ஜி யூ ஐ)

**கேரக்டர் யூசர் இன்டர்ஃபேஸ்**



கேரக்டர் யூசர் இன்டர்ஃபேசில் , ஐகான்கள் அல்லது இமேஜ்கள் இருக்காது, இது டெக்ஸ்ட் மற்றும் கேரக்டர்களை (வார்த்தைகள் மற்றும் எழுத்துக்கள்) மட்டும் உபயோகித்து வேலை செய்கிறது. ரீ-நேம், சி எல் எஸ், சி டி , எம் டி மற்றும் டி ஐ ஆர் அல்லது டைரக்டரி போன்ற எழுத்துகளில் ஆணைகளை அளிப்பதன் மூலமாக சி யூ ஐ மீது உங்கள் வேலைகளை நீங்கள் செய்யலாம். ஒரு சி யூ ஐ -க்கான உதாரணம் டிஸ்க் ஆபரேட்டிங் சிஸ்டம்

**க்ரா∴பிகல் யூசர் இன்டர்∴பேஸ்**

ஒரு க்ரா∴பிகல் யூசர் இன்டர்∴பேஸ் பின்னணியில் ஒரு படம் மற்றும் பல ஐகான்களை (சிறு படங்கள்) ஹொண்டிருக்கும் பின்வருபவை ஜி யூ ஐ க்கான உதாரணங்கள்




இந்த ஜி யூ ஐ மேலும் 'ப்ரொபரைட்டரி சா∴ப்ட்வேர்' மற்றும் '∴ப்ரீ அல்லது ஓபன் சோர்ஸ் சா∴ப்ட்வேர்' என மேலும் பிரிக்கப்படலாம்.




**ப்ரொபைரடரி சா∴ப்ட்வேர்** என்பது காபி ரைட் வைத்திருப்பவரின் தனிப்பட்ட சட்டரீதியிலான உரிமையின் கீழ் உரிமம் பெற்றது ப்ரொப்ரைட்டரி சா∴ப்ட்வேரை உபயோகிப்பது ஒரு சிறு கட்டணத்துடன் லைசென்ஸ் பெறுவதற்கான தேவை கொண்டுள்ளது மற்றும் பதிவு செய்யப்பட்ட உரிமத்துடன் மட்டுமே உபயோகிக்கப்படலாம். உபயோகிப்பவர் அவற்றை மாற்றுவதற்கு , பகிர்ந்து கொள்வதற்கு, ஆய்வு செய்வதற்கு மற்றும் மீண்டும் விநியோகிப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை ப்ரொப்ரைட்டரி சா∴ப்ட்வேரில் மிக பொதுவான வகை மைக்ரோசா∴ப்ட் , ஆப்பிள் இன்க், ஐ பி எம் ஆபரேட்டிங் சிஸ்டம்ஸ் மற்றும் யூனிசிஸ் ஆகும்




**∴ப்ரீ அல்லது ஓபன் சோர்ஸ் சா∴ப்ட்வேர்** (FOSS) என்பது உபயோகிப்பவரால் இன்டர்னெட்டிலிருந்து இலவசமாக டவுன்லோட் செய்யப்படலாம். இது ஒரு ஓபன் சோர்ஸ் லைசென்சின் கீழ் அளிக்கப்படுகிறது, இது உபயோகிப்பவரை சா∴ப்ட்வேரை சுதந்திரமாக மாற்றுவதற்கு , மேம்படுத்துவதற்கு மற்றும் விநியோகிப்பதற்கு அனுமதிக்கிறது. இருந்தாலும், இந்த மாற்றங்களுக்கு காப்புரிமை பெற முடியாது. ஓபன் சோர்ஸ் சா∴ப்ட்வேரின் மிக பொதுவான வகை யூனிக்ஸ், லினெக்ஸ், அரோரா யூ எக்ஸ் மற்றும் ஓபன் சோலாரிஸ்.

**வின்டோஸ் ஆபரேட்டிங் சிஸ்டம்**




மைக்ரோசா∴ப்ட் வின்டோஸ் என்பது மைக் ரோசா∴ப்டால் உருவாக்கப்பட்டு , மார்கெட் செய்யப்பட்டு மற்றும் விற்பனை செய்யப்படும் தொடர்ச்சியான க்ரா∴பிகல் இன்டர்∴பேஸ் ஆபரேட்டிங் சிஸ்டம்களாகும். பெரும்பாலான கம்ப்யூட்டர்கள் , மைக்ரோசா∴ப்ட் வின்டோசின் முன்னதாக -இன்ஸ்டால் செய்யப்பட்ட ஆபரேட்டிங் சிஸ்டமுடன் வருகிறது ஒருவேளை வின்டோஸ் ஆபரேட்டிங் சிஸ்டம் இல்லாமல் நீங்கள் ஒரு கம்ப்யூட்டர் சிஸ்டம் வைத்திருக்கிறீர்கள் என்றால், அங்கீகரிக்கப்பட்ட சா∴ப்ட்வேர் விற்பனையாளரிடமிருந்து நீங்கள் லெசென்ஸ் கொண்ட சா∴ப்ட்வேரை வாங்கலாம். மைக்ரோசா∴ப்ட் இணையதளம் போன்ற ஆன்லைன் இணையதளங்கள் மூலமாக வாங்குவது , சா∴ப்ட்வேரை வாங்குவதற்கான ஒரு மாற்று முறை.

வின்டோஸ் இன்டர்∴பேஸ், பயன்படுத்துபவர் ப்ரோக்ராம்களை உபயோகிப்பதற்கு மற்றும் அவற்றை ஒழுங்குப்படுத்தி வைப்பதில் உதவுகிறது. வின்டோஸ் என்பது ஜி யூ ஐ-ன் WYSIWYG வகை, இதன் அர்த்தம் 'வாட் யூ சீ இஸ் வாட் யூ கெட்'. (நீங்கள் பார்பதையே நீங்கள் பெறுகிறீர்கள்' என்பதாகும் உங்கள் கம்ப்யூட்டரில் உள்ள ஆபரேட்டிங் சிஸ்டம் வின்டோஸ் என்றால், உங்கள் கம்ப்யூட்டரை ஸ்விட்ச் ஆன் செய்த பின் தோன்றும் முதல் ஸ்க்ரீன் டெஸ்க்டாப். கம்ப்யூட்டரில் உள்ள அனைத்து அப்ளிகேஷன்கள் மற்றும் பயன்பாடுகளை வைப்பதற்கு நீங்கள் வின்டோஸ் டெஸ்க்டாப்பை உபயோகிக்கலாம்.



**டெஸ்க்டாப்** இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது-முக்கிய பகுதி அல்லது டெஸ்க்டாப் மற்றும் டாஸ்க் பார் கீழே உள்ள குறுகலான பட்டை டாஸ்க் பார் என்றழைக்கப்படுகிறது. இந்த டாஸ்க் பார் ஒரு ஸ்டார்ட் பட்டனை கொண்டிருக்கிறது, இந்த கம்ப்யூட்டரில் உள்ள அனைத்து ப்ரோக்ராம்களையும் பயன்படுத்துவதற்கு நீங்கள் இதனை உபயோகிக்கலாம். இந்த டெஸ்க்டாப் ஒரு பின்னணியைக் கொண்டிருக்கிறது, இது வால் பேப்பர் என்றழைக்கப்படுகிறது.



**டெஸ்க்டாப்:** நீங்கள் கம்ப்யூட்டரை ஸ்டார்ட் செய்து அதில் லாகின் செய்யும் போது உங்களுக்கு கிடைக்கும் முதல் ஸ்க்ரீன் டெஸ்க்டாப் என்றழைக்கப்படுகிறது. இந்த டெஸ்க்டாப்பில் உள்ள சிறிய படங்கள் டெஸ்க்டாப் ஐகான்கள் என்றழைக்கப்படுகிறது. இந்த ஐகான்கள் ஃபைல்கள் , ப்ரோக்ராம்கள் மற்றும் ஃபோல்டர்களுக்கான ஷார்ட்கட்டைப் பிரதிபலிக்கிறது, இதனை விரைவாக மற்றும் சுலபமாக பயன்படுத்தலாம். **டாஸ்க்பார் :** ஸ்க்ரீனின் மிகக் கீழே உள்ள பட்டை டாஸ்க் பார் என்றழைக்கப்படுகிறது. இந்த டாஸ்க் பார் பல ஐகான்கள் மற்றும் ஷார்ட்கட்டுகளைக் கொண்டுள்ளது. இந்த டாஸ்க்பார் செயல்பாட்டில் உள்ள அனைத்து அப்ளிகேஷன்கள் மற்றும் ப்ரோக்ராம்களை டிஸ்பிளே செய்கிறது. இது இந்த ஐகான்கள் மூலமாக இந்த கம்ப்யூட்டரில் பல அப்ளிகேஷன்கள் மற்றும் ப்ரோக்ராம்களைப் பயன்படுத்துவதற்கும் உங்களுக்கு உதவுகிறது. இந்த டாஸ்க் பார் கம்ப்யூட்டரில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் பல ப்ரோக்ராம்கள் இடையே மாறிக் கொள்வதற்கான ஒரு சுலபமான வழியை அளிக்கிறது பல அப்ளிகேஷன்கள் இயங்குகிறது மற்றும் அனைத்து ஐகான்களையும் வைப்பதற்கு டாஸ்க்பார் மீது போதிய இடம் இல்லை என்றால், ஒரே வகையான ஐகான்கள் ஒன்றாக சேர்க்கப்படலாம்.



**ஸ்டார்ட் பட்டன்:** ஸ்டார்ட் பட்டன் மூலமாக, நீங்கள் ப்ரோக்ராம்கள் மற்றும் மற்ற சிஸ்டம் பயன்பாடுகளைப் பயன்படுத்தலாம். ஸ்டார்ட் மெனுவில் உள்ள க்ன்ட்ரோல் பேனல் உங்கள் கம்ப்யூட்டரில் வெவ்வேறு ஹார்டுவேர் மற்றும் சாஃப்ட்வேரை மாற்றுவதற்கு உபயோகிக்கப்படுகிறது. ஸ்டார்ட் மெனுவில் உள்ள ஹெல்ப் மற்றும் சப்போர்ட் மெனு வின்டோசுடன் வேலை செய்யும் போது தேவையான எந்த உதவியையும் பெறுவதற்கு உபயோகிக்கப்படலாம். ஸ்டார்ட் மெனுவின் உதவியுடன் க்ளிக் மட்டும் செய்து நீங்கள் ஷட் டவுன் செய்யலாம், கம்ப்யூட்டரை லாக் ஆஃப் செய்யலாம் அல்லது மீண்டும் ஸ்டார்ட் செய்யலாம்.

**சிஸ்டம் தேதி மற்றும் நேரத்தை மாற்றுவதற்கான படிகள்**

| | | |
|---|---|---|
| படி 1 | டாஸ்க்பாரின் வலது பக்கதில் உள்ள தேதி மற்றும் நேரம் மீது க்ளிக் செய்யவும். ஒரு கடிகாரம் மற்றும் ஒரு நாட்காட்டி தோன்றும். |  |
| படி 2 | தேதி மற்றும் நேரத்தை செட் செய்வதற்கான லிங்க் மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 3 | தேதி மற்றும் நேரத்தை மாற்றுவதற்கான பட்டன் மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 4 | பின்னர் , தேதி மற்றும் நேரத்தை செட் செய்யவும். |  |
| படி 5 | மாற்றங்களை சேவ் செய்வதற்கு ஒகே-வைக் க்ளிக் செய்யவும் மற்றும் தேதி மற்றும் நேரத்திற்கான டைலாக் பாக்சிற்கு திரும்பச் செல்லவும். |  |
| படி 6 | மாற்றங்களை சேவ் செய்வதற்கு தேதி மற்றும் நேரத்திற்கான டைலாக் பாக்ஸ் மீது ஒகே-வைக் க்ளிக் செய்யவும் மற்றும் டைலாக் பாக்சை மூடவும் |  |

**டெஸ்க்டாப் மற்றும் அதன் டிஸ்பிளே செட்டிங்கஸ்**



நீங்கள் உங்கள் கம்ப்யூட்டரில் லாகின் செய்யும் போது நீங்கள் பார்க்கும் டிஸ்பிளே பகுதி டெஸ்க்டாப் ஆகும். ஐகான்களுக்கு பின்னால் உள்ள படம் வால் பேப்பர் அல்லது டெஸ்க்டாப் பேக்கிரவுன்டு என்றழைக்கப்படும். சற்று நேரம் நீங்கள் உங்கள் கம்ப்யூட்டரை சும்மா வைத்திருக்கும் போது, படங்கள் அல்லது எழுத்துகளின் அனிமேஷன் ஸ்க்ரீன் மீது தோன்றும். இதுவே **ஸ்க்ரீன் சேவர்** என்றழைக்கப்படுகிறது.

**டெஸ்க்டாப் பேக்கிரவுன்டை மாற்றுவது**

நீங்கள் தேர்வு செய்யும் படங்கள் மற்றும் படங்களுடன் உங்கள் கம்ப்யுட்டரின் வால்பேப்பர் அல்லது டெஸ்க்டாப் பேக்கிரவுன்டை மாற்றலாம்.

**டெஸ்க்டாப்பை பேக்கிரவுன்டை மாற்றுவதற்கான படிகள்**

| | | |
|---|---|---|
| படி 1 | டெஸ்க்டாப்பின் மீதுள்ள காலி இடம் மீது வலது பக்கத்தில் க்ளிக் செய்யவும். |  |
| படி 2 | மெனுவிலிருந்து பெர்சனலைஸ் வாய்ப்பு (ஆப்ஷன்) மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 3 | டெஸ்க்டாப் கேக்கிரவுண்டு லிங்க் மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 4 | ஒரு படத்தை தேர்ந்தெடுக்கவும் மற்றும் அதனை உங்கள் டெஸ்க்டாப் பேக்கிரவுண்டில் செட் செய்யவும். |  |
| படி 5 | மாற்றங்களை சேவ் செய்வதற்கு சேவ் சேஞ்சஸ் பட்டன் மீது க்ளிக் செய்யவும். |  |

**ஒரு ஸ்க்ரீனரை செட் செய்வதற்கான படிகள்**

| | | |
|---|---|---|
| படி 1 | டெஸ்க்டாப்பின் மீதுள்ள காலி இடம் மீது வலது பக்கத்தில் க்ளிக் செய்யவும். |  |
| படி 2 | பர்சனலைஸ் வாய்ப்பு (ஆப்ஷன்) மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 3 | ஸ்க்ரீன் சேவர் லிங்க் மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 4 | ஸ்க்ரீன் சேவர் ட்ராப் டவுன் மெனு மீது க்ளிக் செய்யவும் மற்றும் இந்த பட்டியலிலிருந்து ஒரு ஸ்க்ரீன் சேவரைத் தேர்ந்தெடுக்கவும் |  |
| படி 5 | 'வெயிட்' காத்திருக்கவும் காம்போ பாக்சிலிருந்து நிமிடங்களின் எண்ணிக்கையைத் தேர்ந்தெடுப்பதன் மூலமாக ஸ்க்ரீன் சேவர் தொடங்குவதற்கான நேரத்தை செட் செய்யவும். |  |
| படி 6 | ஸ்க்ரீன் சேவர் எப்படி தோற்றம் அளிக்கும் என்பதைப் பார்வையிடுவதற்கு (ப்ரிவியூவிற்கு) ப்ரிவியூ பட்டன் மீது க்ளிக் செய்யவும் |  |
| படி 7 | ஸ்க்ரீன் சேவரை போடுவதற்கு அப்ளை பட்டன் மீது க்ளிக் செய்யவும் |  |
| படி 8 | மாற்றங்களை சேவ் செய்வதற்கு ஒகே பட்டன் மீது க்ளிக் செய்யவும். |  |

ஒரு கம்ப்யூட்டரில், ஆபரேட்டிங் சிஸ்டம் மற்றும் தனிப்பட்ட ப்ரோக்ராம்களுக்கு கிடைக்ககூடிய தகவல் உள்ள ஒரு தொகுப்பு ஃபைல் என்றழைக்கப்படுகிறது. ஒரு ஃபைல் என்பது ஆவணமாக, ஒரு படமாக , இசையாக அல்லது ஒரு திரைப்படமாக இருக்கலாம். பல ஃபைல்களை ஒரு இடத்தில் வைப்பதற்கு , நீங்கள் ஒரு ஃபோல்டரை உருவாக்கலாம். ஒரு ஃபைல் அல்லது ஃபோல்டர் கம்ப்யூட்டரில் அல்லது டெஸ்க்டாப்பில் ஏதாவது டிரைவ்களில் உருவாக்கப்படலாம். ஒரு ஃபைல் அல்லது ஃபோல்டரை உருவாக்கிய பின் , நீங்கள் அதன் பெயரை மாற்றலாம், காப்பி பேஸ்ட் செய்யலாம் அல்லது உங்களுக்கு தேவையில்லை என்றால் நீங்கள் டெலீட்டும் செய்யலாம்.

**ஒரு டிரைவில் ஒரு ஃபோல்டரை உருவாக்குவதற்கான படிகள்**

| | | |
|---|---|---|
| படி 1 | ஸ்டார்ட் மெனுவை பாப் செய்வதற்கு ஸ்டார்ட் பட்டன் மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 2 | கம்ப்யூட்டர் வின்டோ அல்லது வின்டோஸ் எக்ஸ்ப்ளோரரை டிஸ்பிளே செய்வதற்கு 'கம்ப்யூட்டர்' மீது க்ளிக் செய்யவும். | |
| படி 3 | D டிரைவில் உள்ள உள்ளடக்க விஷயங்களைப் பார்பதற்கு '(D:)' ஐகான் மீது க்ளிக் செய்யவும் | |
| படி 4 | ஒரு புதிய ஃபோல்டரை உருவாக்குவதற்கு மெனு பாரில் ந்யூ ஃபோல்டர் மீது க்ளிக் செய்யவும். புதிய ஃபோல்டருக்கு நீங்கள் ஒரு பெயரை அளிக்கலாம் மற்றும் என்டரை அழுத்தவும். | |

நீங்கள் ஒரு ஃபோல்டருக்குள் ஒரு ஃபோல்டரையும் உருவாக்கலாம், இது சப்-ஃபோல்டர் என்றழைக்கப்படுகிறது

படி 1: ஃபோல்டரைத் தேர்ந்தெடுக்கவும் மற்றும் திறக்கவும்
படி 2: ஃபோல்டரில் காலி இடத்தின் மீது வலது பக்கத்தில் க்ளிக் செய்யவும் மற்றும் முதலில் 'ந்யூ' (புதியது) என்பதை தேர்ந்தெடுக்கவும்)
படி 3: பாப்-அப் மெனுவிலிருந்து 'ஃபோல்டரை' தேர்ந்தெடுக்கவும். ஒரு புதிய ஃபோல்டர் உருவாக்கப்படும்.

**ஒரு ஃபைலை / ஃபோல்டரை திறப்பதற்கான படிகள்**
படி 1: ஸ்டார் மெனுவை பாப் செய்வதற்கு ஸ்டார்ட் பட்டன் மீது க்ளிக் செய்யவும்
படி 2: கம்ப்யூட்டர் வின்டோவை அல்லது வின்டோஸ் எக்ஸ்ப்ளோரரை டிஸ்பிளே செய்வதற்கு 'கம்ப்யூட்டர்' மீது க்ளிக் செய்யவும்
படி 3: டிரைவில் உள்ள உள்ளடக்க விஷயங்களைப் பார்பதற்கு 'லோக்கல் டிஸ்க் (D:)' ஐகான் மீது க்ளிக் செய்யவும்
படி 4: நீங்கள் திறப்பதற்கு விரும்பும் ஃபோல்டர் மீது டபுள்-க்ளிக் செய்யவும்
படி 5: ஃபோல்டருக்குள், நீங்கள் ஃபைல் அல்லது சப்-ஃபோல்டரை திறப்பதற்கு விரும்பினால் அவற்றின் மீது டபுள்-க்ளிக் செய்யவும்.

**ஒரு ஃபைலை / ஃபோல்டரை சேவ் செய்வது மற்றும் மீண்டும் பெயர் அளிப்பது**
லோக்கல் டிஸ்க் (D:)ல் நீங்கள் ஒரு ஃபோல்டர்/ சப்-ஃபோல்டர்/ஃபைலை உருவாக்கும் போது, இது D டிரைவில் தானாகவே 'ந்யூ ஃபோல்டராக' / 'ந்யூ டெக்ஸ்ட் டாக்குமென்டாக' சேவ் செய்யப்படுகிறது

**ஒரு ஃபைலை / ஃபோல்டரை ரீனேம் (பெயர் மாற்றம்) செய்வதற்கான படிகள்**
படி 1: ஃபைல் / ஃபோல்டர் மீது ரைட் க்ளிக் செய்யவும்
படி 2: பாப்-அப் மெனுவில் 'ரீனேம்' மீது க்ளிக் செய்யவும்
படி 3: ஒரு ந்யூ நேமை டைப் செய்யவும் மற்றும் 'என்டரை' க்ளிக் செய்யவும்.

**ஆக்சசரீசை உபயோகிப்பது**
வின்டோஸ் ஆபரேர்ட்டிங் சிஸ்டமில், சில முக்கியமான ஆக்சசரீஸ் மிகவும் உபயோகமானவை.

**ஒரு கம்ப்யூட்டரில் ஆக்சசரீஸ் பயன்படுத்துவதற்கான படிகள்**

| | | |
|---|---|---|
| படி 1 | டாஸ்க் பாரின் ஸ்டார்ட் பட்டன் மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 2 | மவுசை 'ஆல் ப்ரோக்ராம்ஸ்' மீது வைக்கவும். |  |
| படி 3 | 'ஆக்சசரீஸ்' மீது க்ளிக் செய்யவும் |  |
| படி 4 | வெவ்வேறு ஆக்சசரீஸ் பட்டியலிடப்பட்டிருக்கிறது. அதனை ஆக்செஸ் செய்வதற்கு ஏதாவது ஆக்சசரி மீது க்ளிக் செய்யவும். |  |

**பெயின்ட்**

பெயின்ட் படங்களை உருவாக்குவது , எடிட் செய்வதற்கு மற்றும் பார்பதற்கு உபயோகிக்கப்படுகிறது படம் வரைவதற்கான ஒரு காலியான பகுதியில் அல்லது தற்போதுள்ள படங்கள் மீது படங்களை உருவாக்குவதற்கு நீங்கள் பெயின்டை உபயோகிக்கலாம். நீங்கள் ஒரு பெயின்ட் படத்தை வேறு ஏதாவது ஆவணத்திற்குள் நகல் எடுத்து ஒட்டலாம். (காபி அண்டு பேஸ்ட்).

**பெயின்டை இயக்குவதற்கான படிகள்**



படி 1: 'ஸ்டார்ட்' பட்டன் மீது க்ளிக் செய்யவும்

படி 2: மவுசை 'ஆல் ப்ரோக்ராம்ஸ்' மீது சுட்டிக் காட்டவும்மவுசை 'ஆல் ப்ரோக்ராம்ஸ்' மீது வைக்கவும்.

படி 3: 'ஆக்சசரீஸ்' மீது க்ளிக் செய்யவும் மற்றும் 'பெயின்டை' தேர்ந்தெடுக்கவும்.

பெயின்ட் வின்டோ நான்கு முக்கிய பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது-பெயின்ட் பட்டன், க்விக் ஆக்செஸ் டூல் பார் , வரைவதற்கான பகுதி மற்றும் ரிப்பன்.



பெயின்ட் **பட்டனுடன் நீங்கள்** வெவ்வேறு நடவடிக்கைகளைச் செய்யலாம். பெயின்ட் பட்டனில் உள்ள வெவ்வேறு வாய்ப்புகள் : ஓபன் , ந்யூ, சேவ் அண்டு ப்ரின்ட்.



**க்விக் ஆக்செஸ் டூல்பார்** , சேவ் , ரீடு மற்றும் அன்டு போன்ற அடிக்கடி உபயோகிக்கப்படும் டூல்சை (கருவிகளை) விரைவாக பயன்படுத்துவதற்கு உங்களுக்கு உதவுகிறது.



இந்த **ரிப்பன்** இரண்டு டேப்சை கொண்டுள்ளது- ஹோம் மற்றும் வியூ. **ஹோம்** டேப் இமேஜ்களை உருவாக்குவதில் மற்றும் எடிட் செய்வதில் உதவும் டூல்சை (கருவிகளை) அளிக்கிறது. இது க்ளிப்போர்டு, இமேஜ, டூல்ஸ், ப்ரஷஸ், ஷேப்ஸ் மற்றும் கலர்ஸ் போன்ற வாய்ப்புகளை (ஆப்ஷன்ஸ்) அளிக்கிறது.



வேலை தேடுவது: வெவ்வேறு துறைகளில் மற்றும் பிரிவுகளில் வேலை கிடைப்பது தொடர்பான தகவல் பெறுவதில் இன்டர்னெட் உதவுகிறது. சாத்தியமுள்ள வேலைகளுக்காக மக்கள் ஆன்லைனில் அவர்களுடைய ரெஸ்யூமை வெளியிடலாம்.



















**புத்தகங்கள் மற்றும் படிப்பதற்கான பொருளைக் கண்டு பிடிப்பது**: உலகெங்கிலும் ஸ்டோர் செய்யப்படும் புத்தகங்கள் மற்றும் படிப்பதற்கான மற்ற பொருட்களை இன்டர்னெட் மூலமாக சுலபமாக கண்டு பிடிக்கலாம். சமீபத்திய என்சைக்ளோபீடியாக்கள் (தகவல் பெட்டகங்கள்) ஆன்லைனில் கிடைக்கிறது.

**ஆரோக்கியம்:** ஆரோக்கியம் மற்றும் மருத்துவம் சார்ந்த துறைகளில் இன்டர்னெட் நிறைய தகவலை அளிக்கிறது. மக்கள் வெவ்வேறு நோய்கள் பற்றிய தகவலைப் பெறலாம் மற்றும் உதவி பெறலாம்.

**பயணம்:** வெவ்வேறு சுற்றுலா இடங்கள் பற்றி தகவல் சேகரிப்பதற்கு ஒருவர் இன்டர்னெட்டை உபயோகிக்கலாம். இது விடுமுறை பயணங்கள், ஹோட்டல்கள், ரயில் மற்றும் விமான டிக்கெட்டுகளை முன்பதிவு செய்வதற்காக உபயோகிக்கப்படலாம்.

**ஷாப்பிங்:** இன்டர்னெட்டை உபயோகித்தும் ஆன்லைனில் ஷாப்பிங் செய்யப்படலாம். அகவுன்ட் விவரங்களை மட்டும் அளித்து, நீங்கள் இந்த பணப்பரிமாற்றத்தை செய்யலாம். நீங்கள் உங்கள் பில்களைச் செலுத்தலாம் மற்றும் வங்கி தொடர்புடைய பணப் பரிமாற்றத்தைச் செய்யலாம்.

**இன்டர்னெட் கனெக்ஷன்களின் வகைகள்**

இன்டர்னெட்டுடன் இணைப்பதற்கான சில வழிகள்:




**டையல் அப் கனெக்ஷன்**

டையல்-அப் கனெக்ஷன் இன்டர்னெட்டுடன் இணைப்பதற்கு தொலைபேசி லைனை உபயோகிக்கிறது. கம்ப்யூட்டர் மோடத்தை உபயோகித்து, அதனுடன் ஹோம் ஃபோன் லைனை இணைக்கிறது. இன்டர்னெட் சர்வீஸ் ப்ரொவைடரின் மோடத்திற்கு ஒரு ஃபோன் செய்யப்படும் மற்றும் இன்டர்னெட்டைப் பயன்படுத்துவதற்கு ஒரு இணைப்பு ஏற்படுத்தப்படும்.




**இன்டக்ரேட்டட் சர்வீசஸ் டிஜிட்டல் நெட்வொர்க் (ஐ எஸ் டி என்)**

ஐ எஸ் டி என் டையல்-அப்பை போன்றதே ஆனால் டிஜிட்டல் ஃபோன் லைன்கள் மூலமாக கனெக்டிவிட்டியை அளிக்கிறது. அதே நேரத்தில் ஃபோன் மற்றும் இன்டர்னெட் உபயோகத்தை இது அனுமதிக்கிறது. இந்த நெட்வொர்கை உபயோகிப்பதற்கு உங்களுக்கு ஒரு வெளிப்புற மோடம் தேவை. ஐ எஸ் டி என் பொது தொலைபேசி நெட்வொர்க்கில் அகலமான-பேண்ட்விட்த் டிஜிட்டல் ட்ரான்ஸ்மிஷனை இயன்றதாக்குகிறது, இதன் அர்த்தம் ஒரே சமயத்தில் அதிகமான டேட்டா அனுப்பப்படலாம் என்பதாகும்.



**நேரடி இன்டர்னெட் பயன்பாடு**

நேரடி -இணைப்புகளுக்கு டையலிங் மற்றும் இன்டர்னெட் அல்லது வேறு எந்த நெட்வொர்கிலும் லாகிங்-ஆன் செய்யத் தேவையில்லை. சேவைகள் நிலையான பேன்ட்விட்த் கிடைப்பது மற்றும் ஏறக்குறைய கான்ஸ்டென்ட் லேடன்சிக்கான உத்திரவாதத்தை அளிக்கிறது , இந்த அம்சங்களுக்கு அதிகமான பொது துறை நிலைகளில் உத்திரவாதம் இல்லை.




**டிஜிட்டல் சப்ஸ்க்ரைபர் லைன் (டி எஸ் எல்)**

டி எஸ் எல் அல்லது பிராட்பேண்டு என்பது கேபிள் இன்டர்னெட் போன்ற ஒரு ஹை-ஸ்பீடு இன்டர்னெட் சேவையாகும். டி எஸ் எல் தொழில்நுட்பம் , வாடிக்கையாளர்கள் அவர்களுடைய வாய்ஸ் அல்லது இன்டர்னெட் கனெக்ஷன்களைத் துண்டிக்க வேண்டிய தேவை இல்லாமல் அதே ஃபோன் லைனில் வேலை செய்வதற்கு இன்டர்னெட் மற்றும் தொலைபேசி சேவையை அனுமதிக்கிறது டி எஸ் எல் இன்டர்னெட் சேவைகள் முதன்மையாக வீட்டில் மற்றும் சிறு தொழில்களில் உபயோகிக்கப்படுகிறது.

டி எஸ் எல் இன்டர்னெட் சேவை வரையறுக்கப்பட்ட தொலை தூரங்களில் மட்டுமே வேலை செய்கிறது மற்றும் லோக்கல் தொலைபேசி உட்கட்டமைப்பு டி எஸ் எல் தொழில்நுட்பத்திற்கு ஆதரவளிக்காத பல இடங்களில் கிடைப்பதில்லை.




**இன்டர்னெட்டுடன் இணைப்பது**

இன்டர்னெட்டைப் பயன்படுத்துவதற்கு, உங்கள் கம்ப்யூட்டரில் உங்களுக்கு மூன்று அடிப்படை அம்சங்கள் தேவை: மோடம் , இன்டர்னெட் சர்வீஸ் ப்ரொவைடர் (ஐ எஸ் பி) மற்றும் பிரவுசர்.




**மோடெம்** என்பது கம்ப்யூட்டர்கள் டேட்டாவை அனுப்புவதற்கு மற்றும் பெறுவதற்கு அனுமதிக்கிறது. இந்த சாதனம் ஒரு கம்ப்யூட்டரை இன்டர்னெட்டுடன் இணைக்கிறது.




**இன்டர்னெட் சர்வீஸ் ப்ரொவைடர்** (ஐ எஸ் பி) என்பது இன்டர்னெட் இணைப்பை அளிக்கும் ஒரு க்ம்பெனி.




பிரவுசர் என்பது இன்டர்னெட்டில் உள்ள தகவலை தேடி எடுத்து , வழங்குகிறது மற்றும் அதனுள் செல்கிறது. சில பிரபலமான பிரவுசர்கள் இன்டர்னெட் எக்ஸ்ப்ளோரர் , மோசிலா ஃபையர்ஃபாக்ஸ், குகிள் க்ரோம் மற்றும் சஃபாரி.

கேபிள்ஸ் மற்றும் வையர்லெஸ் டெக்னாலஜியை உபயோகித்து நீங்கள் இன்டர்னெட்டுடன் இணைத்துக் கொள்ளலாம். வையர்லெஸ் டெக்னாலஜிக்கு ஆதரவு அளிக்கும் ஒரு கம்ப்யூட்டர் ஒரு வை-ஃபை கார்டு கொண்டிருக்கும். இந்த வை-ஃபை கார்டு கம்ப்யூட்டர் மற்றும் நெட்வொர்க் இடையே வையர்லெஸ் கம்யூனிகேஷனை (தொடர்புகளை) இயன்றதாக்குகிறது.




**மொபைல் டேட்டா கனெக்ஷன் மற்றும் வை-ஃபை உபயோகித்து இன்டர்னெட்டைப் பயன்படுத்துவது**

உங்கள் மொபைல் ஃபோனில் இன்டர்னெட்டைப் பயன்படுத்துவதற்கு உங்களுக்கு பின்வருபவை தேவை:

- இன்டர்னெட் பயன்பாட்டிற்கு ஆதரவளிக்கும் ஒரு மொபைல் ஃபோன்
- டேட்டா ட்ரான்ஸ்மிஷனுக்கு ஆதரவளிக்கும் ஒரு மொபைல் ஃபோன் சேவை
- ஃபோனில் இன்டர்னெட்டைப் பயன்படுத்துவதற்கு டேட்டா செட்டிங்சுடன் உங்கள் மொபைல் சேவை அளிப்பவரிடமிருந்து ஒரு அகவுன்ட்.




**2G, 3G மற்றும் 4G நெட்வொர்க் மூலமாக இன்டர்னெட்டை உபயோகிப்பது**

2G, 3G மற்றும் 4G ல் உள்ள G இந்த நெட்வொர்க்கின் “ஜெனரேஷனை” (தலைமுறையைக்) குறிக்கிறது ‘G’ ன் முன்னால் ஒரு பெரிய எண் என்பது தகவலை அனுப்புவதற்கு மற்றும் பெறுவதற்கு அதிகமான சக்தியைக் குறிப்பிடுகிறது, அதனால் வையர்லெஸ் நெட்வொர்க் மூலமாக அதிக செயல்திறனைச் சாதிப்பதற்கான திறனைக் குறிப்பிடுகிறது.




2G நெட்வொர்க்குகள் நேரோ பேன்டு டிஜிட்டல் நெட்வொர்குகள் அடிப்படையிலானது. சிக்னல்கள் டிஜிட்டல் வடிவில் ஒளிபரப்படுகிறது மற்றும் இது குறிப்பிடத்தக்க அளவு கால்களின் தரத்தை மேம்படுத்துகிறது மற்றும் டேட்டா பரிமாற்றத்தின் சிக்கலையும் குறைக்கிறது.




3G மொபைல் நெட்வொர்க்குகள் பிரபலமாகியிருக்கிறது மற்றும் உபயோகிப்பாளார்கள் மொபைல்கள் மற்றும் டேப்லெட்டுகள் போன்ற சாதனங்களில் இன்டர்னெட்டைப் பயன்படுத்தச் செய்திருக்கிறது. ஒரு 3G நெட்வொர்கில் டேட்டா அனுப்படுவதன் வேகம் 384 KBPS முதல் 2 MBPS வரை இருக்கும். 3G நெட்வொர்க் அதிக டேட்டா ட்ரான்ஸ்மிஷனை அனுமதிக்கிறது இதனால் இந்த நெட்வொர்க் வாய்ஸ் மற்றும் வீடியோ காலிங் , ஃபைல் ட்ரான்ஸ்மிஷன், இன்டர்னெட் சர்ஃபிங், ஆன்லைன் டிவி, ஹை டெஃப்னிஷன் வீடியோஸ் பார்பது , கேம் விளையாடுவது மற்றும் மேலும் அதிகமானதைச் செய்வதை இயன்றதாக்குகிறது. எப்போதுமே இன்டர்னெட்டுடன் இணைந்திருக்க வேண்டிய தேவை உள்ள உபயோகிப்பாளர்களுக்கு 3G சிறந்த வாய்ப்பு




4G மொபைல் நெட்வொர்க்குகள் பல மதிப்பு கூட்டப்பட்ட சேவைகளை அளிப்பதாக நம்பப்படுகிறது. அனைத்து 3G வசதிகளுடன் சேர்த்து, டேட்டா அனுப்புதல் 100 MBPs முதல் 1 GBPS க்கு இடையே உள்ள வேகத்துடன் கூரையைத் தாண்டிச் செல்லும் என நம்பப்படுகிறது.

## கீபோர்டு அடிப்படையிலான மொபைல் ஃபோன்களில் இன்டர்னெட்டை செட் அப் செய்வது

**கீபேட் அடிப்படையிலான ஃபோன்களில் இன்டர்னெட்டை உபயோகிப்பதற்கான படிகள்**

| | | |
|---|---|---|
| படி 1 | மெனு>இன்டர்னெட்டைத் தேர்ந்தெடுக்கவும் |  |
| படி 2 | ஹோம் பேஜைத் திறப்பதற்கு , ஹோமைத் தேர்ந்தெடுக்கவும் அல்லது ஹோம் ஸ்க்ரீனில் 0 வை அழுத்தி பிடிக்கவும். |  |
| படி 3 | ஒரு வெப் அட்ரசை டைப் செய்வதற்கு , கோ டு அட்ரஸ் என்பதை தேர்ந்தெடுக்கவும் , முகவரியை டைப் செய்யவும் மற்றும் ஒகேவைத் தேர்ந்தெடுக்கவும். |  |
| படி 4 | வெப்பை சர்ச் செய்வதற்கு (வலைதளத்தில் தேடுவதற்கு) - சர்ச் (தேடுவதற்கான) விதிமுறைகளை டைப் செய்யவும் , மற்றும் சர்ச்சை தேர்ந்தெடுக்கவும். நீங்கள் அந்த சேவைக்கு கனெக்ட் செய்த பின், நீங்கள் அதன் பக்கங்களை பிரவுஸ் செய்யத் தொடங்கலாம். |  |

**வை-ஃபையுடன் இணைப்பது**

படி 1: செட்டிங்சிற்கு செல்லவும்.



படி 2: 'செட்டிங்ஸ் அண்டு கனெக்டிவிட்டி>வை-ஃபை' என்பதை தேர்ந்தெடுக்கவும்.



படி 3: நீங்கள் இணைத்துக் கொள்ள விரும்பும் கனெக்ஷனைத் தேர்ந்தெடுக்கவும்.



படி 4: தேவையானால் பாஸ்வோர்டை டைப் செய்யவும்



**ஆன்ட் ராய்டு அடிப்படையிலான ஸ்மார்ட் ஃபோனில் / டேப்லெட்டில் இன்டர்னெட்டை செட் செய்வது**

| | | |
|---|---|---|
| படி 1 | செட்டிங்ஸ் மெனுவிற்கு செல்லவும் (இது எந்த ஆன்ட்ராய்டு சாதனத்திலும் ஆப்ஸ் மெனுவில் உள்ள செட்டிங்ஸ் ஐகான் வழியாக செய்யப்படலாம் மற்றும் சில நேரங்களில் நோட்டிஃபிகேஷன்ஸ் பாரில் செய்யப்படலாம்). |   |

| | | |
|---|---|---|
| படி 2 | செட்டிங்ஸ் மெனுவில், நீங்கள் வையர்லெஸ் மற்றும் நெட்வொர்க் செட்டிங்சை கண்டுபிடிக்க வேண்டிய தேவை உள்ளது. பெரும்பாலான சாதனங்களில் , எது பொருந்துகிறதோ அதற்கு ஏற்ப 'மோர்' அல்லது 'மோர் செட்டிங்ஸ்' பட்டனை க்ளிக் செய்யவும்,<br>வையர்லெஸ் மற்றும் நெட்வொர்க் செட்டிங்சை நீங்கள் கண்டவுடன், இரண்டு வாய்ப்புகள் வழியாக நீங்கள் இணைக்கலாம் :<br>(i) மொபைல் இன்டர்னெட்<br>(ii) வை-ஃபை |  |

**இன்டர்னெட்டுடன் இணைப்பது**

| | | |
|---|---|---|
| படி 1 | உங்கள் மொபைல் ஃபோன் வழியாக இன்டர்னெட்டுடன் இணைப்பதற்கு நீங்கள் நோட்டிஃபிகேஷன்ஸ் பாரை கீழே இழுத்து , மொபைல் டேட்டா ஆப்ஷனை (வாய்ப்பைத்) தேர்ந்தெடுக்கவும்.<br><br>அல்லது<br><br>வையர்லெஸ் மற்றும் நெட்வொர்க்ஸ் ஆப்ஷனில் 'மோர் செட்டிங்ஸ்' ஆப்ஷனுக்கு நீங்கள் செல்லலாம். | <br> |
| படி 2 | மொபைல் நெட்வொர்க்ஸ் பட்டன் மீது க்ளிக் செய்யவும். அங்கே , நீங்கள் 'மொபைல் டேட்டா' செக் பாக்சை க்ளிக் செய்ய வேண்டும். அது க்ளிக் செய்யப்பட்டவுடன், உங்கள் ஃபோன் மொபைல் இன்டர்னெட்டை பெறத் துவங்கும். |  |

**வை-ஃபையுடன் இணைப்பது**

| | | |
|---|---|---|
| படி 1 | நோட்டிஃபிகேஷன்ஸ் மெனுவில் வை-ஃபை பட்டனை க்ளிக் செய்வதன் மூலமாக உங்கள் வை-ஃபை வாய்ப்புகளை ஆன் செய்யவும். |  |

| | | |
|---|---|---|
| படி 2 | நீங்கள் இணைக்க விரும்பும் வை-ஃபை நெட்வொர்கை தேர்ந்தெடுக்கவும். |  |
| படி 3 | பாஸ்வொர்டு தேவைப்பட்டால், பாஸ்வொர்டை டைப் செய்யவும் மற்றும் கனெக்டை க்ளிக் செய்யவும். |  |




**டேட்டா கார்டை உபயோகித்து இன்டர்னெட்டுடன் இணைப்பது**

மொபைல் பிராட்பேண்டு தொழில்நுடபம் , வையர்லெஸ் வைடு ஏரியா நெட்வொர்க் (WWAN) தொழில்நுட்பம் என்றும் அழைக்கப்படுகிறது, மொபைல் இன்டர்னெட் கனெக்டிவிட்டியையும் அளிக்கிறது. மொபைல் பிராட்பேண்டை உபயோகிப்பதற்கு, உங்களுக்கு ஒரு டேட்டா கார்டு மற்றும் ஒரு மொபைல் பிராட்பேண்டு அளிப்பவருடன் ஒரு டேட்டா ப்ளான் தேவை. உங்கள் சாதனம் மற்றும் டேட்டா ப்ளான் உங்களுக்கு கிடைத்த பின், நீங்கள் உங்கள் சப்ஸ்க்ரைபர் ஐடென்டிட்டி மாட்யூல் மற்றும் சிம்மிற்கான மொபைல் பிராட்பேண்டு சர்வீசை ஆக்டிவேட் செய்வதை உறுதி செய்து கொள்ளவும்.

**முதல் முறையாக ஒரு பிராட்பேண்ட் இன்டர்னெட் கனெக்ஷனை செட் அப் செய்வதற்கான படிகள்**

| | | |
|---|---|---|
| படி 1 | நோட்டிஃபிகேஷன் பிரிவில் நெட்வொர்க் ஐகானை க்ளிக் செய்வதன் மூலமாக கனெக்ட் டு ஏ நெட்வொர்கை திறக்கவும். |  |
| படி 2 | உங்கள் மொபைல் பிராட்பேண்ட் நெட்வொர்க் பெயரை க்ளிக் செய்யவும் மற்றும் பின்னர் கனெக்டை க்ளிக் செய்யவும். |  |
| படி 3 | உங்கள் மொபைல் பிராட்பேண்ட் பின்னை டைப் செய்யவும், மற்றும் தேவையானால் என்டரை அழுத்தவும். |  |

**ஒரு பிராட்பேண்ட் இன்டர்னெட் கனெக்ஷனைத் துண்டிப்பதற்கான படிகள்**

படி 1: நோட்டிஃபிகேஷன் பிரிவில் நெட்வொர்க் ஐகானை க்ளிக் செய்வதன் மூலமாக கனெக்ட் டு ஏ நெட்வொர்கை திறக்கவும்.

படி 2: மொபைல் பிராட்பேண்ட் நெட்வொர்கின் பெயரை க்ளிக் செய்யவும் , மற்றும் டிஸ்கனெக்ட் என்பதை க்ளிக் செய்யவும்

**ஸ்மார்ட்ஃபோனை / டேப்லெட்டை டிதரிங் (ஃபோன் இன்டர்ன்டை பகிர்ந்து கொள்வது) செய்வதன் மூலமாக இன்டர்னெட்டுடன் இணைப்பது**

ஒரு ஸ்மார்ட் ஃபோனை அல்லது டேப்லெட்டை இணைப்பது அல்லது 'டிதரிங்' செய்வது உங்கள் ஸ்மார்ட்ஃபோனை உங்கள் லேப்டாப் பயன்படுத்தக்கூடிய வைஃபை ஹாட்ஸ்பாட்டாக மாற்றுகிறது.

**ஒரு ஆன்ட் ராய்டு ஃபோனை / டேப்லெட்டை லேப்டாப்பிற்கு இணைப்பதற்கான படிகள்**

| | | |
|---|---|---|
| படி 1<br><br>படி 2 | வையர்லெஸ் மற்றும் நெட்வொர்க் செட்டிங்ஸ் மெனுவிற்கு செல்லவும். சில ஃபோன்கள் ஒரு வையர்லெஸ் ஹாட்ஸ்பாட்டை உருவாக்குவதற்கு ஆப்ஸ் மெனுவில் ஒரு ஆப்பை கொண்டிருக்கும்.<br><br>டிதரிங் மற்றும் போர்டபிள் ஹாட் ஸ்பாட் அல்லது இதே போன்ற ஆப்ஷன் (வாய்ப்பு) மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 3 | போர்டபிள் வைஃபை ஹாட்ஸ்பாட் அல்லது அதே போன்ற ஆப்ஷனை (வாய்ப்பை) ஆன் செய்யவும் மற்றும் ஒரு நெட்வொர்க் மற்றும் / அல்லது பாஸ்வொர்டை செட் செய்யவும். |  |
| படி 4 | கீழே வலது கை மூலையில் (வின்டோசில்) உள்ள வையர்லெஸ் நெட்வொர்க்குகள் மூலமாக உங்கள் லேப்டாப்பில் இந்த நெட்வொர்கை இணைக்கவும். |  |

## பயிற்சி 1

1. இன்டர்னெட்டில் உள்ள தகவலகளை தேடி எடுத்து , வழங்கி மற்றும் அதனுள் நேவிகேட் செய்வதற்கான (செல்வதற்கான) சாஃப்ட்வேர் ..................
2. ............... என்பது இன்டர்னெட்டைப் பயன்படுத்துவதற்கான வசதியை அளிக்கும் ஒரு கம்பெனி
3. டையல்-அப் கனெக்ஷன் இன்டர்னெட்டுடன் இணைப்பதற்கு ...............ஐ உபயோகிக்கிறது.
4. ..................................................... இன்டர்னெட் சேவைகள் முதன்மையாக வீட்டில் மற்றும் தொழிலில் உபயோகிக்கப்படுகிறது.
5. ................. நெட்வொர்க்குகள் குறுகலான பேன்டு டிஜிடல் நெட்வொர்குகள் அடிப்படையிலானது

## II. இன்டர்னெட் ஆதாரங்கள் மற்றும் சர்ச் என்ஜின்களின் வகைகள்

### வோர்ல்டு வைடு வெப் (www)




www என்பது 'வோர்ல்டு வைடு வெப்பை' குறிக்கிறது வோர்ல்டு வைடு வெப் அல்லது 'வெப்' என்பது இன்டர்னெட்டின் ஒரு இணை அமைப்பு மற்றும் அதன் அர்த்தம் அல்ல. வெப் , ஒரு வெப் பிரவுசரை பயன்படுத்தப்படக்கூடிய பேஜ்களைக் கொண்டுள்ளது. டெல்னெட் , எஃப் டீ பி , இன்டர்னெட் கேமிங் , இன்டர்னெட் ரிலே சாட் (ஐ ஆர் சி) மற்றும் இ-மெயில் அனைத்தும் இன்டர்னெட்டின் பகுதியாகும் , ஆனால் வோர்ல்டு வைடு வெப்பின் பகுதி அல்ல.




ஹைபர்-டெக்ஸ்ட் ட்ரான்ஸ்ஃபர் ப்ரொடோகால் உங்கள் கம்ப்யூட்டருக்கு வெப் பேஜ்களை மாற்றுவதற்கு உபயோகிக்கப்படும் முறை. ஹைபர்டெக்சுடடன், ஒரு வார்த்தை அல்லது வாசகம் மற்றொரு இணையதளத்திற்கான லிங்கை (இணைப்பை) கொண்டிருக்கலாம்.

### வொர்ல்டு வைடு வெப்பின் பாகங்கள்

கீழே உள்ள படம் www:-ன் பாகங்களைக் காண்பிக்கிறது




ஒரு வெப் பிரவுசர் என்பது , இன்டர்னெட்டில் கடைசி நிலை உபயோகிப்பாளர்களுக்கு உள்ளடக்க விஷயங்கள் அல்லது சேவைகளை வழங்கும் ஒரு முறை வெப் சர்வர்கள் என்பது வெப்பே ஜ்களை அளிக்கும் கம்ப்யூட்டர்கள்ஒ வ்வொரு வெப் சர்வரும் ஒரு ஐபி முகவரி மற்றும் ஒரு டொமைன் பெயரைக் கொண்டிருக்கிறது. உதாரணமாக உங்கள் பிரவுசரில் நீங்கள் யூ ஆர் எல் - http://www.google.com/index.html ஐ நீங்கள் டைப் செய்தால், இது குகிள்.காம் என்ற டொமைன் பெயர் கொண்ட வெப் சர்வருக்கு ஒரு கோரிக்கையை அனுப்புகிறது. பின்னர் சர்வர் namedindex.html என்ற பேஜை கொண்டுவருகிறது மற்றும் அதனை உங்கள் பிரவுசருக்கு அனுப்புகிறது.




ஒரு வெப் பிரவுசர் என்பது உலகெங்கிலும் பரவிக்கிடக்கும் வலைதளத்தில் (வொர்ல்டு வைடு வெப்பில்) உள்ள வெப் , இமேஜ்கள் , வீடியோ மற்றும் மற்ற ஃபைல்கள் உட்பட்ட உள்ளடக்க விஷயங்களைக் கண்டறிவதற்கு , தேடி எடுப்பதற்கு மற்றும் டிஸ்பிளே செய்வதற்கு உபயோகிக்கப்படும் ஒரு சாஃப்ட்வேர் ஆகும். ஒரு க்ளையன்ட் / சர்வர் மாடலாக, பிரவுசர் என்பது ஒரு கம்ப்யூட்டரில் இயக்கப்படும் க்ளையென்ட் , இது வெப் பிரவுசரை தொடர்பு கொள்கிறது மற்றும் தகவலைக் கோருகிறது. வெப் சர்வர் வெப் பிரவுசருக்கு தகவலைத் திரும்ப அனுப்புகிறது, இது கம்ப்யூட்டரில் அல்லது ஒரு பிரவுசருக்கு அதரவளிக்கும் இன்டர்னெட் - இயக்ககூடிய சாதனத்தில் முடிவுகளை டிஸ்பிளே செய்கிறது



வோர்ல்டு வைட் வெப், வெப் பேஜ்களால் ஆனது. இந்த டாக்குமென்டுகள் ஹெச் டீ எம் அல்லது ஹைபர் டெக்ஸ்ட்

மார்க்-அப் லேங்குவேஜில் எழுதப்பட்டிருக்கும் மற்றும் உங்கள் வெப் பிரவுசரால் மொழி பெயர்க்கப்படும். வெப் பேஜ்கள் ஸ்டேடிக் அல்லது டைனமிக் ஆக இருக்கலாம். ஸ்டேடிக் பேஜ்கள் அவை பார்க்கப்படும் ஒவ்வொரு முறையும் அதே உள்ளடக்க விஷயத்தைக் காண்பிக்கிறது டைனமிக் பேஜஸ் என்பது அவை பயன்படுத்தப்படும் ஒவ்வொரு முறையும் அதன் உள்ளடக்க விஷயங்களை மாற்றிக் கொள்ளக்கூடியது. இந்த பக்கங்கள் வழக்கமாக PHP, Perl, ASP அல்லது JSP போன்ற ஸ்க்ரிப்டிங் மொழிகளில் எழுதப்படும். ஒரு வெப்சைட் என்பது பக்கங்களின் (பேஜ்களின்) ஒரு தொகுப்பாகும். ஒரு வெப் பேஜ் என்பது ஒரு தனிப்பட்ட ஹெச் டி எம் எல் டாக்குமென்ட். (ஆவணம்).

வெப் சைட் என்பது வொர்ல்டு வைடு வெப்பில் ஒன்றுடன் ஒன்றினைந்த பக்கங்களின் ஒரு குழுவாகும். இது வழக்கமாக ஒரு தனி தலைப்பு அல்லது தொடர்புடைய பல தலைப்புகளுக்கு அர்ப்பணிக்கப்படுகிறது. இந்த இணையதளத்தை பயன்படுத்தும் போது டிஸ்பிளே செய்யப்படும் முதல் வெப் பேஜ் ஹோம் பேஜ் என்றழைக்கப்படுகிறது.

ஒரு வெப் அட்ரஸ் என்பது ஆக்செஸ் ப்ரொடோகால், டொமைன் பெயர் மற்றும் ஃபைல் பாத் அடங்கிய ஒரு முகவரி வரிசை (தொகுப்பு) இது வழக்கமாக இன்டர்னெட்டில் உள்ள ஒரு வெப் பேஜ், இமேஜ் அல்லது மற்ற ஆவணங்களின் முகவரியை குறிப்பிடுவதற்கு உபயோகிக்கப்படுகிறது.

வெப் பிரவுசர்கள் வோர்ல்டு வைடு வெப்பில் உள்ள தகவலைப் பயன்படுத்துவதற்கு உருவாக்கப்பட்ட அப்ளிகேஷன் ப்ரோக்ராம்கள். வெப் பிரவுசரில் அளிக்கப்படும் பொதுவான அம்சங்களில் டவுன்லோட் , புக்மார்க்குகள் மற்றும் பாஸ்வொர்டு மேனேஜ்மென்ட் உள்ளடங்கும். அவை ஸ்பெல் செக், சர்ச் என்ஜின் டூல்பார்ஸ், டேப்டு பிரவுசிங், அட்வடைஸ்மென்ட் ஃபில்டரிங் மற்றும் ஹெச் டி எம் எல் ஆக்செஸ் கீஸ், பாப் மற்றும் ப்ளாக்கிங் போன்ற செயல்பாடுகளையும் அளிக்கிறது.

**வெப் பிரவுசர்கள் வகைகள்**

பல வகையான வெப் பிரவுசர்கள் கிடைக்கிறது , உதாரணமாக இன்டர்னெட் எக்ஸ்ப்ளோரர் , ஃபையர்ஃபாக்ஸ், க்ரோம், ஓபெரா மற்றும் சஃபாரி




**இன்டர்னெட் எக்ஸ்ப்ளோரர்** மைக்ரோசாஃப்டால் உருவாக்கப்பட்டது மற்றும் 1995 ல் மைக்ரோ சாஃப்ட் வின்டோசுடன் தொடர்புடைய ஆபரேட்டிங்க சிஸ்டம்களுக்கு சப்போர்டிவ் பேக்கேஜாக அறிமுகப்படுத்தப்பட்டது. உலகில் இது மிக பொதுவாக உபயோகிக்கப்படும் பிரவுசர் ஆகும். இந்த பிரவுசர் சுலபமான ஆன்லைன் நேவிகேஷன் மற்றும் விரைவான சர்ச் மற்றும் பன்முக பாதுகாப்பு தொழில் நுட்பங்களுக்கு அற்புதமானது.

**ஃபையர்ஃபாக்ஸ்** என்பது மோசிலாவிலிருந்து பெறப்பட்ட ஒரு பிரவுசர் மற்றும் இது இன்டர்னெட்டில் இரண்டாவது மிக பிரபலமானதாக வளர்ந்திருக்கிறது.

**குகிள் க்ரோம்** என்பது குகிள் உருவாக்கிய ஒரு வெப் பிரவுசர் இது வெப்பை விரைவானதாக , பாதுகாப்பானதாக மற்றும் சுலபமானதாக ஆக்குவதற்கு நேர்த்திமிக்க தொழில் நுட்பத்துடன் குறைந்தபட்ச டிசைனை ஒருங்கிணைக்கிறது.

**ஓபெரா** என்பது 1996 ல் ஓபரா சா்ப்ட்வேரால் உருவாக்கப்பட்ட ஒரு பிரவுசர். ஓபரா என்பது மற்ற பிரவுசர்களை விட சிறியது மற்றும் விரைவானது. இது கீபோர்டு இன்டர்்பேஸ், பல வின்டோக்கள், சூம் செயல்பாடுகள் மற்றும் பல அம்சங்களுடன் விரைவானது மற்றும் உபயோகிப்பவருக்கு உகந்தது. இந்த பிரவுசர் ஜாவா மற்றும் ஜாவா-அல்லாதவற்றை இயக்ககூடிய வெர்ஷன்களில் (பதிப்புகளில்) கிடைக்கிறது. இது இன்டர்னெட்டிற்கு புதிதாக வந்திருப்பவர்களுக்கு சரியான ஒரு பிரவுசர்.

**ச்பாரி** என்பது ஆப்பிள் இன்க் -ஆல் உருவாக்கப்பட்ட ஒரு வெப் பிரவுசர் மற்றும் இது மேக் ஓஎஸ் எக்சில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இது முதலில் ஜனவரி 2003 ல் பப்ளிக் பேட்டா-வாக வெளியிடப்பட்டது. இந்த பிரவுசர் XHTML, CSS2 போன்ற அனைத்து சமீபத்திய தொழில் நுட்பங்களுக்கும் ஆதரவு அளிக்கிறது



**ஒரு வெப் பிரவுசரைத் திறப்பது**

படி 1: ஸ்டார்ட் பட்டனை க்ளிக் செய்வது



படி 2: ஆல் ப்ரோக்ராம்சிற்கு செல்லவும் மற்றும் இந்த வெப் பிரவுசர்கள் ஏதாவதன் மீது க்ளிக் செய்யவும். பிரவுசிங் வின்டோ தோன்றுகிறது.



வெப் பிரவுசர்கள் பின்வருபவையாக பிரிக்கப்பட்டிருக்கிறது :

டைடில் பார் வெப் பேஜ் மற்றும் வெப் பிரவுசரின் பெயரை டிஸ்பிளே செய்கிறது. இது மூன்று வின்டோ பட்டன்களைக் கொண்டிருக்கிறது- மினிமைஸ், ரெஸ்டோர் டவுன் அல்லது மேக்சிமைஸ் மற்றும் க்ளோஸ்.

நீங்கள் பிரவுஸ் செய்ய விரும்பும் இணையதளம் அல்லது யு ஆர் எல்-ன் பெயர் அட்ரஸ் பாரில் டைப் செய்யப்படுகிறது இது கோ அல்லது ரெ்ப்ரெஷ் அல்லது ஸ்டாப் பட்டன்களைக் கொண்டிருக்கிறது. கோ பட்டன் ஒரு வெப்பேஜை அல்லது வெப்சைட்டை லோட் செய்வதற்கு உங்களுக்கு உதவுகிறது, ரெ்ப்ரெஷ் பட்டன் வெப்பேஜை மீண்டும் லோட் செய்வதற்கு உங்களுக்கு உதவுகிறது மற்றும் ஸ்டாப் பட்டன் எக்ஸ்ப்ளோரரின் தற்போதைய செயல்பாடுகள் எதையும் நிறுத்துகிறது. அட்ரஸ் பாரின் இடது பக்கத்தில், பேக் மற்றும் ்பார்வர்டு பட்டன்கள் இருக்கிறது. இந்த பட்டன்கள் சமீபத்தில் பார்த்த இணையதளங்களில் , முந்தைய மற்றும் அடுத்த இணையதளத்திற்கு செல்வதற்கு உதவுகிறது.







மெனு பார் ்பைல் , எடிட் , வ்யூ , ்பேவரிட்ஸ், டூல்ஸ் மற்றும் ஹெல்ப் போன்ற மெனு வாய்ப்புகளைக் கொண்டிருக்கிறது.




வெப் பேஜ் ஏரியா என்பது இணையதளம் அல்லது வெப்பேஜ் டிஸ்பிளே செய்யப்படும் பகுதி.

ஸ்டேடஸ் பார் ஒரு வெப்சைட்டின் / வெப்பேஜின் நிலையை வெய்ட்டிங் , லோடிங் அல்லது டன் என அளிக்கிறது

**சர்ச் என்ஜின்கள்**

சர்ச் என்ஜின்கள் என்பவை இணையதளங்கள் ஆகும் , இவை உபயோகிப்பாளர் ஒருவர் தேடும் தகவலைக் கொண்ட இணையதளங்களைக் கண்டறியும் நோக்கம் கொண்டுள்ளது பொதுவாக உபயோகிக்கப்படும் சில



சர்ச் என் ஜின் கள் குகிள், யாஹூ மற்றும் எம் எஸ் என் ஆகும். குகிள் மிக பிரபலமான சர்ச் என்ஜின். அவை வெப்பை சர்ஃப் செய்வதற்கு ரோபோட்ஸ் அல்லது ஸ்பைடர்கள் என்றழைக்கப்படும் எலெக்ட்ரானிக் சாதனங்களை உபயோகிக்கிறது. தேவையான தகவலை தேடுவதற்காக . அவை WWW உட்பட இன்டர்னெட்டைச் சுற்றி ஓடும்.




**சர்ச் என்ஜின்களின் வகைகள்**

மல்டி அல்லது மெட்டா சர்ச் என்ஜின்கள் உங்கள் கீவொர்ட்சை கண்டு பிடிப்பதற்கு ஒன்றுக்கும் அதிகமான தனிப்பட்ட ச்ர்ச் என்ஜின்களை பயன்படுத்துகிறது. குகிள் மற்றும் பிங் இந்த சர்ச் என்ஜின்களின் உதாரணங்கள் இந்த டைரக்டரி, நபர்கள் தாங்களாகவே பரிசோதித்த இணையதளங்களின் ஒரு டைரக்டரியை உபயோகிக்கிறது மற்றும் அவை கொண்டிருக்கும் தகவலுக்கு ஏற்ப பிரிவுபடுத்தப்படுகிறது. ஒரு டைரக்டரி சர்ச் என்ஜினின் உதாரணம் யாஹூ

**ஒரு சர்ச் என்ஜினை உபயோகிப்பது**

சர்ச் என்ஜின்கள் என்பது இன்டர்னெட்டில் தகவல் தேடுவதற்கு உபயோகிக்கப்படும் கருவிகள். சர்ச் என்ஜின்கள் வெப் பேஜ்களைப் போன்றது மற்றும் ஒரு வெப் பிரவுசரை உபயோகித்து திறக்கப்பட வேண்டும். வழக்கமாக, தேடுதல் ஒரு வார்த்தை அல்லது வார்த்தைகள் அல்லது தலைப்புகளின் ஒரு கலவையின் அடிப்படையிலானது. இந்த வார்த்தைகள் அல்லது வாசகங்கள் முக்கிய வார்த்தைகள் (கீ வொர்ட்ஸ்) என அறியப்படுகிறது. இந்த சர்ச் முடிவுகள் வெப் பேஜ்கள், இமேஜ்கள் , தகவல் மற்றும் மற்ற வகையான ஃபைல்களைக் கொண்டிருக்கலாம். பரவலாக உபயோகிக்கப்படும் சர்ச் என்ஜின்களில் சில:

- https://www.google.co.in/
- http://www.bing.com/
- http://search.yahoo.com/

## ஒரு சர்ச்சை (தேடுதல்) நடத்துவது

**குகிளை உபயோகித்து சர்ச் செய்வதற்கான படிகள்**

| | | |
|---|---|---|
| படி 1 | வெப் பிரவுசரை ஸ்டார்ட் செய்யவும் |  |
| படி 2 | முகவரி அல்லது லொகேஷன் பாரில் https://www.google.co.in/ டைப் செய்யவும் |  |
| படி 3 | ஒருவேளை 'ஸ்கூல்ஸ் இன் ரூரல் இண்டியா' ('கிராமப்புற இந்தியாவில் உள்ள பள்ளிகள்') தொடர்பான தகவலை நீங்கள் பெற விரும்பினால், காண்பிக்கப்பட்டபடி முக்கிய வார்த்தைகளை (கீவொர்ட்ஸ்) டைப் செய்யவும். |  |
| படி 4 | சர்ச் செய்யத் தொடங்குவதற்கு உங்கள் கீபோர்டில் சர்ச் பட்டனை க்ளிக் செய்யவும் அல்லது என்டர் கீயை அழுத்தவும். |  |

| | | |
|---|---|---|
| படி 5 | முடிவுகளாக காண்பிக்கப்பட்ட லிங்குகளின் பட்டியலைப் பார்க்கவும். ஒவ்வொரு இணையதளத்தைப் பற்றியும் ஒரு சிறு விவரிப்பு தோன்றும். மிக பொருத்தமான லிங்க் மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 6 | வேறு ஏதாவது விஷயம் பற்றி நீங்கள் தகவல் அறிய முயற்சி செய்தால், சர்ச் என்ஜினின் ஹோம் பேஜிற்கு செல்வதற்கு பேக் பட்டனை க்ளிக் செய்யவும் |  |
| படி 7<br><br>படி 8 | நீங்கள் கண்டறிய விரும்பும் தகவல் பற்றி முக்கிய வார்த்தைகளை டைப் செய்யவும்.<br><br>சர்ச் பட்டன் மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 9 | வெவ்வேறு இணையதள லிங்குகள் தோன்றும். பொருத்தமான லிங்கை தேர்ந்தெடுக்கவும் மற்றும் தேவையான தகவலை வாசிக்கவும். |  |
| படி 10 | வெளியேறுவதற்கு பிரவுசிங் விண்டோவின் மேலே வலது மூலையில் உள்ள க்ளோஸ் பட்டன் மீது க்ளிக் செய்யவும். |  |

## பயிற்சி 2

1. சர்ச் என்ஜின்கள் வெப் பேஜ்களைப் போன்றது மற்றும் ஒரு வெப் பிரவுசரை உபயோகித்து திறக்கப்பட வேண்டும்.
   உண்மை பொய்

2. மெடா எஸ் இ -ன் ஒரு உதாரணம் யாஹூ
   உண்மை பொய்

3. ஃபையர்ஃபாக்ஸ் என்பது குகிளிலிருந்து பெறப்பட்ட ஒரு பிரவுசர்
   உண்மை பொய்

4. தலைப்பு பட்டை வெப் பேஜ் மற்றும் வெப் பிரவுசரின் பெயரை டிஸ்பிளே செய்கிறது
   உண்மை பொய்

5. வெப்பை சர்ஃப் செய்வதற்கு (வலைதளத்தில் உள்ள தகவல்களைப் பார்பதற்கு) சர்ச் என்ஜின்கள் ரோபோட்டுகள் அல்லது ஸ்பைடர்கள் என்றழைக்கப்படும் எலெக்ட்ரானிக் சாதனங்களை உபயோகிக்கிறது
   உண்மை பொய்

# 4 இன்டர்னெட்டை உபயோகித்து தொடர்புகள்



## கற்றதன் விளைவுகள்

இந்த பிரிவின் இறுதியில், உங்களால் பின்வரும் செயல்களைச் செய்ய முடியும்:

- ஒரு இ-மெயில் அகவுன்டின் வெவ்வேறு அம்சங்களை உருவாக்குவது மற்றும் பயன்படுத்துவது
- இன்ஸ்டென்ட் மெசேஜிங் (உடனடியாக மெசேஜ் அனுப்புவது) மற்றும் ஒருங்கிணைப்பதற்காக ஸ்கைப் மற்றும் ஹேங்கவுட் போன்ற வாய்ஸ் ஒவர் இன்டர்னெட் ப்ரோடோகோலை (வி ஓ ஐ பி) உபயோகிப்பது
- ஃபேஸ்புக் மற்றும் ட்விட்டர் போன்ற சோஷியல் மீடியா கருவிகளை உபயோகிப்பது
- யூ ட்யூப் மற்றும் விகிபீடியா போன்ற தகவல் கருவிகளை உபயோகிப்பது
- வாட்ஸாப் போன்ற மெசேஜிங் சேவைகளை உபயோகிப்பது

## பாடத் திட்டம்

I. இ-மெயிலுக்கான அறிமுகம்
II. வி ஓ ஐ பி சேவைகளுக்கான அறிமுகம்: ஸ்கைப் அண்டு ஹேங்கவுட்
III. சோஷியல் மீடியா கருவிகளுக்கான அறிமுகம்: ஃபேஸ்புக் மற்றும் ட்விட்டர்
IV. தகவல் அளிக்கும் கருவிகளின் அறிமுகம் : யூ ட்யூப் மற்றும் விகிபீடியா
V. மெசேஜிங் சேவைக்கான அறிமுகம்: வாட்சாப்

## 1. இ-மெயிலுக்கான அறிமுகம்

இ-மெயில் அல்லது எலெக்ட்ரானிக் மெயில் என்பது இன்டர்னெட்டில் மெசேஜ்களைப் பரிமாறிக் கொள்வதற்கான ஒரு முறை. ஒரு இமெயில் வெவ்வேறு பகுதிகளைக் கொண்டிருக்கிறது - பெறுபவருக்கான ஃபீல்டு, சப்ஜெக்ட் ஃபீல்டு மற்றும் மெசேஜ் ஏரியா. இந்த அப்ளிகேஷனை உபயோகிப்பதற்கு நீங்கள் ஒரு இமெயில் அகவுன்டை வைத்திருக்க வேண்டும். ஜிமெயில் , யாஹூ மற்றும் ஹாட்மெயில் போன்ற பல வெப் அடிப்படையிலான இலவச இ-மெயில் சேவைகள் கிடைக்கின்றன இந்த இ-மெயில் சேவைகள் எதிலாவது அல்லது அனைத்திலும் நீங்கள் உங்கள் சொந்த இமெயில் அகவுன்டை உருவாக்கலாம்.

**ஒரு இ-மெயில் அகவுன்டை உருவாக்குவது**

| | | |
|---|---|---|
| படி 1 | ஒரு வெப் பிரவுசரைத் திறக்கவும் மற்றும் அட்ரஸ் பாரில் www.gmail.com என்பதை டைப் செய்யவும் |  |
| படி 2 | கோ பட்டன் மீது க்ளிக் செய்யவும் அல்லது என்டரை அழுத்தவும் |  |
| படி 3 | க்ரியேட் ஏன் அகவுன்ட் பட்டன் மீது க்ளிக் செய்யவும் |  |
| படி 4 | ஆன்லைன் ரெஜிஸ்ட்ரேஷன் படிவத்தை பூர்த்தி செய்யவும் |  |
| படி 5 | அடுத்த படிக்கான பட்டன் மீது க்ளிக் செய்யவும் |  |

| | | |
|---|---|---|
| படி 6 | கன்டின்யூ டு ஜிமெயில் பட்டன் மீது க்ளிக் செய்யவும் |  |

**ஒரு இ-மெயில் அகவுன்டை உபயோகிப்பது**




உங்கள் இ-மெயில் அகவுன்டை பயன்படுத்துவதற்கு , நீங்கள் முதலில் சைன் இன் செய்ய வேண்டும். இதற்காக, ஜிமெயில் ஹோம்பேஜிற்கு செல்லவும் மற்றும் இந்த ஸ்க்ரீனில் வலது பக்கத்தில் டிஸ்பிளே செய்யப்பட்ட உங்கள் யூசர்நேம் மற்றும் பாஸ்வொர்டை டைப் செய்யவும். பின்னர் கீழே ‘சைன் இன்’ மீது க்ளிக் செய்யவும்.

இப்போது உங்கள் அகவுன்ட்ஸ் பேஜை நீங்கள் பார்க்கலாம். இந்த பேஜில் இன்பாக்ஸ் , ஸ்டார்டு, இம்பார்டென்ட் (முக்கியமானது) , அனுப்பப்பட்ட மெயில் , ட்ராஃப்டுகள் மற்றும் கம்போஸ் போன்ற வெவ்வேறு லிங்குகள் டிஸ்பிளே செய்யப்படுகிறது இந்த லிங்குகள் இமெயில் விஷயங்கள் தொடர்புடைய அனைத்தையும் கொண்டிருக்கிறது.



**இன்பாக்ஸ்** உங்கள் இன் கமிங் கால்கள் அனைத்தையும் கொண்டிருக்கும். இன்பாக்சில் க்ளிக் செய்வதன் மூலமாக , நீங்கள் பெற்றிருக்கும் அனைத்து இமெயில்களையும் நீங்கள் பயன்படுத்தலாம். ஆன்லைனில் உங்கள் நண்பர்களுடனும் நீங்கள் சாட் செய்யலாம். வலது பிரிவில், நீங்கள் பெற்றிருக்கும் இமெயில்கள் அனைத்தையும் நீங்கள் பார்க்கலாம் மற்றும் அவற்றைக் க்ளிக் செய்வதன் மூலமாக அதனைப் பார்பதற்கு நீங்கள் அவை ஒவ்வொன்றையும் திறக்கலாம்.



ஒரு இமெயில் அனுப்புபவருக்கு நீங்கள் பதில் அளிக்க விரும்பினால், இமெயிலின் வலது பக்கத்தில் டிஸ்பிளே செய்யப்பட்ட அம்புக்குறி மீது நீங்கள் க்ளிக் செய்ய வேண்டும் மற்றும் பின்னர் ரிப்ளை பட்டன் மீது க்ளிக் செய்யவும். ‘டு’ ஃபீல்டில் பெறுபவரின் இமெயில் ஐடி நிரப்பப்படும் ஒரு ரிப்ளாய் பாக்ஸ் டிஸ்பிளே செய்யப்படும். மெசேஜ் டெக்ஸ்ட் ஏரியாவில் உங்கள் பதிலை டைப் செய்யவும் மற்றும் உங்கள் இமெயிலை அனுப்புவதற்கு மேலே உள்ள சென்டு பட்டன் மீது க்ளிக் செய்யவும்.

**ஒரு இமெயில் அனுப்புவது**

| | | |
|---|---|---|
| படி 1 | கம்போஸ் பட்டன் மீது க்ளிக் செய்யவும் மற்றும் ஒரு புதிய மெசேஜ் வின்டோ டிஸ்பிளே செய்யப்படும். |  |
| படி 2 | நீங்கள் இமெயில் அனுப்ப விரும்பும் நபரின் இமெயில் ஐடியை ‘டு’ ஃபீல்டில் டைப் செய்யவும். ‘டு’ ஃபீல்டில் , ஒரு அரைப்புள்ளியை (;) உபயோகித்து பலரின் இமெயில் ஐடிக்களை சேர்பதன் மூலமாக பல நபர்களுக்கு நீங்கள் இமெயில் அனுப்பலாம். |  |

| | | |
|---|---|---|
| படி 3 | 'சப்ஜெக்ட்' ஃபீல்டில் , உங்கள் மெசேஜ் எந்த விஷயம் குறித்தது என்பதை (சப்ஜெக்டை) டைப் செய்யவும். |  |
| படி 4 | மெசேஜ் எழுதுவதற்கான பகுதியில் உங்கள் மெசேஜை டைப் செய்யவும். 'சப்ஜெக்ட்' பெட்டிக்கு சற்று கீழே 'அட்டாச் ஏ ஃபைல்' மீது க்ளிக் செய்வதன் மூலமாக மெசேஜுடன் நீங்கள் டாக்குமென்டுகள் , படங்கள் போன்றவற்றையும் இணைக்கலாம். |  |
| படி 5 | உங்கள் மெசேஜை நீங்கள் டைப் செய்து முடித்தவுடன், உங்கள் மெசேஜை அனுப்புவதற்கு 'சென்டு' பட்டன் மீது க்ளிக் செய்யவும். வெற்றிகரமாக அனுப்பப்பட்ட இமெயில்கள் அனைத்தும் சென்ட் மெயில் ஃபோல்டரில் ஸ்டோர் செய்யப்படுகிறது. உங்களுடைய பூர்த்தியாகாத இமெயில்களில் சில ட்ராஃப்ட்ஸ் ஃபோல்டரில் ஸ்டோர் செய்யப்பட்டிருக்கிறது. |  |

**ஒரு இமெயிலை கம்போஸ் செய்வது**

| | | |
|---|---|---|
| படி 1 | ஒரு புதிய மெசேஜை கம்போஸ் செய்வதற்கு , ந்யூ அல்லது கம்போஸ் மெயில் மீது க்ளிக் செய்யவும் |  |
| படி 2 | 'டு' பாக்சை க்ளிக் செய்யவும் மற்றும் நீங்கள் மெசேஜ் அனுப்ப விரும்பும் நபரின் இமெயில் முகவரியை டைப் செய்யவும் |  |
| படி 3 | உங்கள் மெசேஜின் ஒரு நகலை மற்றொரு நபருக்கு நீங்கள் அனுப்ப விரும்பினால், 'CC' பெட்டியில் அந்த நபரின் இமெயில் முகவரியை டைப் செய்யவும். |  |

| | | |
|---|---|---|
| படி 4 | 'சப்ஜெக்ட்' பெட்டியில் உங்கள் மெசேஜின் ஒரு சிறு தலைப்பை டைப் செய்யவும் |  |
| படி 5 | சப்ஜெக்ட் பாக்சிற்கு கீழே உள்ள காலி இடத்தின் மீது க்ளிக் செய்யவும். நீங்கள் உங்கள் மெசேஜை டைப் செய்யக்கூடிய இடம் இது. |  |

**ஒரு இமெயிலுக்கு பதில் அளிப்பது**

| | | |
|---|---|---|
| படி 1 | மெசேஜைத் தேர்ந்தெடுக்கவும், பின்னர், ரிப்ளை என்பதை க்ளிக் செய்யவும் |  |
| | நீங்கள் 'கம்போஸ்' பேஜிற்கு வழிகாட்டப்படுவீர்கள். அனுப்புபவரின் இமெயில் முகவரி மற்றும் சப்ஜெக்ட் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டிருக்கும் |  |
| படி 2 | சப்ஜெக்ட் பாக்சிற்கு கீழே உள்ள இடத்தில் க்ளிக் செய்யவும். உங்கள் மெசேஜை டைப் செய்யவும். |  |
| படி 3 | இந்த மெசேஜை நீங்கள் ஒரு ட்ராஃப்டாக (வரைவு மடலாக) சேவ் செய்ய விரும்பினால், 'சேவ் ட்ராஃப்ட்' அல்லது 'சேவ் நௌ' ஐ க்ளிக் செய்யவும் |  |

| | | |
|---|---|---|
| படி 4 | உங்கள் மெசேஜை அனுப்புவதற்கு 'சென்ட்' ஐ க்ளிக் செய்யவும் |  |

**உங்கள் இமெயிலுடன் ஒரு ஃபைலை இணைப்பது**

உங்கள் இமெயில் மெசேஜுடன் இணைப்பதன் மூலமாக உங்கள் மெசேஜுடன் ஒரு படம் , ஒரு ஃபைல் அல்லது ஒரு டாக்குமென்டையும் நீங்கள் அனுப்பலாம்.

| | | |
|---|---|---|
| படி 1 | 'கம்போஸ்' பேஜின் கீழே உள்ள 'அட்டாச் அ ஃபைல்' ஐகான் மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 2 | ஒரு புதிய வின்டோ பாப் ஆகும், இது நீங்கள் சேவ் செய்திருக்கும் ஃபோல்டரிலிருந்து ஃபைலை தேர்ந்தெடுக்கச் சொல்லும். நீங்கள் இணைக்க விரும்பும் ஃபைலை பிரவுஸ் செய்யவும் மற்றும் க்ளிக் செய்யவும். வின்டோ மீது 'ஓபன்' என்பதை க்ளிக் செய்யவும் |  |
| படி 3 | நீங்கள் இணைத்த ஃபைல் , 'சப்ஜெக்ட்' பாக்சிற்கு கீழே டிஸ்பிளே செய்யப்படும். |  |
| படி 4 | உங்கள் மெசேஜை அனுப்புவதற்கு 'சென்ட்' ஐ க்ளிக் செய்யவும். |  |

**ஒரு இமெயில் மெசேஜை டெலீட் செய்வது**



ஒரு மெசேஜ் அல்லது பல மெசேஜ்களை டெலீட் செய்வதற்கு , இன்பாக்சை க்ளிக் செய்யவும். நீங்கள் டெலீட் செய்ய விரும்பும் மெசேஜ்கள் பக்கத்தில் உள்ளா செக் பாக்சுகள் மீது க்ளிக் செய்யவும் மற்றும் அந்த பேஜின் மேலே உள்ள 'டெலீட்' ஐகானைக் க்ளிக் செய்யவும்.



**உங்கள் இமெயில் அகவுன்டிலிருந்து சைன் அவுட் செய்யவும்.**

உங்கள் இமெயில் அகவுன்டிலிருந்து வெளியேறுவதற்கு 'சைன் அவுட்டை' க்ளிக் செய்யவும். உங்கள் இமெயில் அகவுன்டின் வலது பக்கத்தில் நீங்கள் சைன் அவுட் லிங்கை நீங்கள் காணலாம்.

**இ-மெயிலுக்கான முக்கிய லிங்குகள்**

**ரிப்ளை: (பதில் அளிப்பது)** நீங்கள் இமெயிலை யாரிடமிருந்து பெற்றிருக்கிறீர்களோ, அவருக்கு ஒரு இமெயிலை அனுப்புவதற்கான இந்த வாய்ப்பைத் தேர்ந்தெடுக்கவும்.

**ரிப்ளை ஆல்: (அனைவருக்கு பதில் அளிக்கவும்)** நீங்கள் பெற்றிருக்கும் இமெயிலில் குறிப்பிடப்பட்ட இமெயில் ஐடி-கள் அனைத்திற்கும் ஒரு இமெயிலை அனுப்புவதற்கு இந்த வாய்ப்பை தேர்ந்தெடுக்கவும்.

**ஃபார்வார்டு: (ஒருவர் அனுப்பிய மெயிலை மற்றவர்களுக்கு அனுப்புவது)** இந்த ஃபீல்டுகள் எதிலும் ஒரு நபரின் இமெயில் ஐடி சேர்க்கப்படவில்லை என்றால் , அந்த நபருக்கு ஒரு குறிப்பிட்ட இமெயிலை அனுப்புவதற்கு நீங்கள் விரும்பினால், 'ஃபார்வார்டு' பட்டனை உபயோகித்து அவருக்கு நீங்கள் இமெயிலை ஃபார்வார்டு செய்யலாம். நீங்கள் அந்த நபரின் இமெயில் ஐடி-ஐ மட்டும் டைப் செய்ய வேண்டும் மற்றும் 'சென்டு' மீது க்ளிக் செய்யவும்.

**அட்டாச்மென்ட்:** ரிப்போர்டுகள் , டாக்குமென்டுகள் , ஃபோட்டோக்கள் போன்ற இமெயில் மெசேஜ்களுடன் அனுப்பப்படும் ஃபைல்கள் அட்டாச்மென்டுகள் (இணைப்புகள்) ஆகும்.

## பயிற்சி 1

1. ஒரு இ-மெயில் அகவுன்டில், எந்த வாய்ப்பு அனைத்து இன்கமிங் மெசேஜ்களையும் கொண்டிருக்கிறது?
   அவுட்பாக்ஸ் | இன்பாக்ஸ் | கம்போஸ்

2. ஒரு இ-மெயில் அகவுன்டில் ஒரு மெயிலை டைப் செய்வதற்கு எந்த வாய்ப்பை நாம் க்ளிக் செய்ய வேண்டும்?
   சென்ட் ஐடம்ஸ் | ட்ராஃப்ட் | கம்போஸ்

3. ஒரு இ-மெயில் அகவுன்டில் முழுமையற்ற மெயில்கள் எங்கே ஸ்டோர் செய்யப்படுகிறது?
   ட்ராஃப்ட்ஸ் | சென்ட் ஐடெம்ஸ் | அவுட்பாக்ஸ்

4. ஒரு மெசேஜின் நகலை நாம் மற்றொரு நபருக்கு அனுப்ப விரும்பினால், அந்த நபரின் இமெயில் முகவரியை நாம் எங்கே டைப் செய்ய வேண்டும்?
   டூ | சிசி | சென்டு

5. இமெயில் மெசேஜ்களுடன் அனுப்பபட்ட ஃபைல்கள் என்னவென்று அழைக்கப்படுகிறது?
   ட்ராஃப்டுகள் அட்டாச் மென்டுகள் | ஆடட் மெயில்ஸ்

## II. வி ஓ ஐ பி சேவைகளுக்கான அறிமுகம்: ஸ்கைப் அண்டு ஹேங்கவுட்

### வாய்ஸ் ஓவர் இன்டர்னெட் ப்ரோடோகால்(வி ஓ ஐ பி) சேவைகளுக்கான அறிமுகம்

வாய்ஸ் ஓவர் இன்டர்னெட் ப்ரோடோகால்(வி ஓ ஐ பி) என்பது இன்டர்னெட் ஃபோன் சேவைகளுக்கு உபயோகிக்கப்படும் ஒரு தொழில்நுட்பம். VoIP மூலமாக , VoIP சேவை அளிப்பவர் மற்றும் நிலையான கம்ப்யூட்டர் ஆடியோ சிஸ்டம்களை உபயோகித்து இன்டர்னெட்டில் ஃபோன் கால்கள் செய்யப்படலாம். இது பாரம்பரிய தொலை தூர தொலைபேசி அழைப்புகளை விட குறிப்பிடத்தக்க அளவு செலவை மிச்சப்படுத்துகிறது. ஸ்கைப் என்பது VoIP ன் முதன்மை உதாரணம்

### ஸ்கைப்பை உபயோகிப்பது

ஸ்கைப் என்பது தொடர்பு கொள்வதற்கான சாதனம், இது இன்டர்னெட் மூலமாக உலகின் எந்த பகுதியிலும் உள்ள யாருடனும் பேசுவதற்கு உங்களை அனுமதிக்கிறது. இலவசமாக மற்றும் ஒரு கட்டணத்திற்கு லேண்ட்லைன்கள் அல்லது மொபைல் ஃபோன்களுக்கு உங்கள் கம்ப்யூட்டர் / லேப்டாப்பிலிருந்து நீங்கள் ஃபோன் செய்யலாம். ஸ்கைப் இன்ஸ்டென்ட் மெசேஜிங் , ஃபைல் ட்ரான்ஸ்ஃபர், வாய்ஸ் கால்கள் மற்றும் வீடியோ கால்கள் போன்ற அம்சங்களைக் கொண்டிருக்கிறது.

### ஸ்கைப்பை டவுன்லோட் செய்வது மற்றும் இன்ஸ்டால் செய்வது

| | | |
|---|---|---|
| படி 1 | ஸ்டார்டிற்கு செல்லவும் மற்றும் இன்டர்னெட் எக்ஸ்ப்ளோரர் மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 2 | இன்டர்னெட் எக்ஸ்ப்ளோரர் திறந்தவுடன், அட்ரஸ் பாரில் www.skype.com என்பதை டைப் செய்யவும் கோ மீது க்ளிக் செய்யவும் அல்லது என்டரை அழுத்தவும். |   |
| படி 3 | இப்போது ஸ்கைப் ஹோம் பேஜ் திறந்துவிடும். டவுன்லோட் லிங்க் மீது க்ளிக் செய்யவும், டிவைஸ் செக்ஷனில் (சாதனங்கள் பிரிவில்) கம்ப்யூட்டர் டிஃபால்டாக (ஆரம்ப நிலையாக) தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் |  |
| படி 4 | வின்டோஸ் டெஸ்க்டாப் பட்டனுக்கு கெட் ஸ்கைப் மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 5 | SkypeSetup.exe பெட்டி தோன்றும் போது, சேவ் பட்டன் மீது க்ளிக் செய்யவும் மற்றும் உங்கள் கம்ப்யூட்டரில் பொருத்தமான ஒரு இடத்தில் ஃபைலை சேவ் செய்யவும். |  |

| | | |
|---|---|---|
| படி 6 | அப்ளிகேஷனை இன்ஸ்டால் செய்வதற்கு , செடஅப் ஃபைல் சேவ் செய்யப்பட்ட இடத்திற்கு செல்லவும் மற்றும் SkypeSetup.exe மீது டபுள் க்ளிக் (தொடர்ச்சியாக இரண்டு முறை க்ளிக்) செய்யவும். ஃபைலைத் ஓபன் செய்யவும்- பாதுகாப்பு எச்சரிக்கை தோன்றுகிறது. இன்ஸ்டாலேஷனைத் தொடங்குவதற்கு ரன் அல்லது யெஸ் மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 7 | மொழிக்கான ட்ராப்டவுன் மெனுவில் ஆங்கிலத்தை தேர்ந்தெடுக்கவும் மற்றும் 'ஐ அக்ரீ-நெக்ஸ்ட்' பட்டனை க்ளிக் செய்யவும். |  |
| படி 8 | கன்டின்யூ மீது க்ளிக் செய்யவும். ஸ்கைப் இன்ஸ்டாலேஷன் தொடங்குகிறது. இன்ஸ்டாலேஷன் பூர்த்தியாவதற்கு காத்திருக்கவும். |  |
| படி 9 | இன்ஸ்டாலேஷன் பூர்த்தியானவுடன், க்ரியேட் ஏன் அகவுன்ட் பட்டன் மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 10 | ஒரு சைன்-அப் வெப் பேஜ் தோன்றுகிறது. தேவையான விவரங்களுடன் ரெஜிஸ்ட்ரேஷன் படிவத்தைப் பூர்த்தி செய்யவும் |   |
| படி 11 | கட்டத்தில் டிஸ்பிளே செய்யப்படும் பாதுகாப்பு வார்த்தைகளை கட்டத்தில் டைப் செய்யவும் மற்றும் 'ஐ அக்ரீ- கன்டின்யூ' (நான் ஏற்றுக் கொள்கிறேன்-தொடரவும்) மீது க்ளிக் செய்யவும். உங்கள் ஸ்கைப் அகவுன்ட் உருவாக்கப்பட்டது. |  |

*(குறிப்பு: உங்கள் ஸ்மார்ட் ஃபோன் மீது ஸ்கைப் ஆப்பையும் நீங்கள் டவுன்லோட் செய்யலாம்.)*

**ஸ்கைப்பில் கான்டாக்ட்ஸ் சேர்ப்பது**

| | | |
|---|---|---|
| படி 1 | ஸ்கைப்பை ஸ்டார்ட் செய்யவும், உங்கள் ஸ்கைப் பெயர் மற்றும் பாஸ்வொர்டை டைப் செய்யவும் மற்றும் சைன் மீ இன் பட்டன் மீது க்ளிக் செய்யவும். (நீங்கள் முதல் முறை சைன் இன் செய்யும் போது , நீங்கள் உங்கள் மைக்ரோஃபோன் மற்றும் கேமராவைச் சரிபார்க்க வேண்டும். உங்கள் ஸ்கைப் ஐடிக்கு நீங்கள் ஒரு ப்ரொஃபைல் படத்தையும் அப்லோட் செய்யலாம்). |  |
| படி 2 | ஸ்கைப்பில் கான்டாக்ட்சை சேர்ப்பதற்கு, கான்டாக்ட்ஸ் மெனு ஆப்ஷன் மீது க்ளிக் செய்யவும் , ஆட் கான்டாக்டைத் தேர்ந்தெடுக்கவும் மற்றும் சர்ச் ஸ்கைப் டைரக்டரியை தேர்ந்தெடுக்கவும். |  |
| படி 3 | நீங்கள் சேர்க்க விரும்பும் நபரின் விவரங்களை அளிக்கவும்-இமெயில், ஃபோன் நம்பர் , பெயர் மற்றும் ஸ்கைப் பெயர் கான்டாக்டை சர்ச் செய்யவும் மற்றும் கான்டாக்டைச் சேர்ப்பதற்கு ஆட் பட்டன் மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 4 | ஒரு கான்டாக்ட் ரெக்வெஸ்ட் பாக்ஸ் டிஸ்பிளே செய்யப்படும். சென்ட் ரெக்வெஸ்ட் பட்டனைக் க்ளிக் செய்யவும் அந்த நபர் உங்கள் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளும் போது, அவருடைய பெயர் உங்கள் கான்டாக்ட் லிஸ்டில் தோன்றும். |  |
| படி 5 | ஆன்லைனில் உள்ள கான்டாக்டைத் தேர்ந்தெடுப்பதன் மூலமாக உங்கள் கான்டாக்டுகளை நீங்கள் தொடர்பு கொள்ளலாம். கான்டாக்ட் பெயருக்கு பக்கத்தில் தோன்றும் பச்சை நிற செக் மார்க் (டிக் குறி) இந்த கான்டாக்ட் ஆன்லைனில் உள்ளது என்பதைக் காண்பிக்கிறது. |  |
| படி 6 | நீங்கள் ஸ்கைப்பை உபயோகித்து முடித்தவுடன், ஸ்கைப்பை க்ளிக் செய்யவும் மற்றும் சைன் அவுட்டைத் தேர்ந்தெடுக்கவும். இப்போது நீங்கள் ஸ்கைப் அகவுன்டிலிருந்து சைன் அவுட் செய்து விட்டீர்கள் |  |

ஸ்கைப்பில் உள்ள கான்டாக்சுடன் தொடர்பு கொள்வது

| | | |
|---|---|---|
| படி 1 | கான்டாக்ட்சில் க்ளிக் செய்யவும், நீங்கள் சாட் செய்ய விரும்பும் நபரின் பெயர் மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 2 | அந்த நபரின் பெயருடன் ஒரு சாட் வின்டோ தோன்றுகிறது சாட் பாக்சில் உங்கள் கர்சரை வைக்கவும் மற்றும் உங்கள் மெசேஜை டைப் செய்யத் தொடங்கவும். |  |
| படி 3 | மெசேஜை அனுப்புவதற்கு சென்டை க்ளிக் செய்யவும் அல்லது என்டரை அழுத்தவும். |  |
| படி 4 | வாய்ஸ் காலுக்கு , கால் பட்டன் மீது க்ளிக் செய்யவும். கான்டாக்டு உங்கள் காலை ஏற்றுக் கொண்டால், நீங்கள் அவரிடம் பேசலாம். |  |
| படி 5 | காலை முடிப்பதற்கு , என்ட் கால் பட்டன் மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 6 | உங்கள் கம்ப்யூட்டரில் ஒரு வெப் கேமரா இன்ஸ்டால் செய்யப்பட்டிருந்தால் , நீங்கள் ஒரு வீடியோ காலையும் செய்யலாம். வீடியோ காலைத் தொடங்குவதற்கு வீடியோ கால் டேப் மீது க்ளிக் செய்யவும். |  |

| | | |
|---|---|---|
| படி 7 | தேர்ந்தெடுக்கப்பட்ட கான்டாக்டுடன் நீங்கள் ஃபைல்களைப் பகிர்ந்து கொள்ளலாம். கான்வர்சேஷன் டேபைத் தேர்ந்தெடுக்கவும், சென்ட் மற்றும் பின்னர் ஃபைலைத் தேர்ந்தெடுக்கவும். |  |
| படி 8 | நீங்கள் அனுப்ப விரும்பும் ஃபைலை பிரவுஸ் செய்யவும் மற்றும் ஓபன் என்பதை க்ளிக் செய்யவும். |  |
| படி 9 | உங்கள் கான்டாக்டும் உங்களுக்கு எந்த ஃபைலையும் அனுப்பலாம் மற்றும் இது ஆரெஞ்சு செக் மார்க்குகளாக கான்டாக்ட் பட்டியலில் அறிவிப்புகளுக்கான வின்டோவில் தோன்றும். |  |
| படி 10 | சேவ் ஆஸ் பட்டனை க்ளிக் செய்வதன் மூலமாக நீங்கள் ஃபைலை பெறலாம். |  |
| படி 11 | ஃபைலை நீங்கள் சேவ் செய்ய விரும்பும் இடத்தை தேர்ந்தெடுக்கவும் மற்றும் சேவ் பட்டன் மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 12 | ஃபைலைத் திறப்பதற்கு , ஓபன் ஃபைலை க்ளிக் செய்யவும் அல்லது ஃபோல்டரில் ஷோவை க்ளிக் செய்யவும். |  |

### ஹேங்கவுட்டை உபயோகிப்பது

ஹேங்கவுட் என்பதுகுகிள் உருவாக்கிய ஒரு இன்ஸ்டென்ட் மெசேஜிங் மற்றும் வீடியோ சாட் ப்ளாட் ஃபார்ம். இது டாக் , குகிள்+ மெசெஞ்சர் மற்றும் ஹேங்கவுட் போன்ற மூன்று குகிள் மெசேஜிங் பொருட்களின் இணைந்த வடிவம். ஹேங்கவுட் இரண்டு அல்லது அதிகமான உபயோகிப்பாளர்கள் இடையே உரையாடல்கள் செய்வதை அனுமதிக்கிறது. ஹேங்கவுட் அப்ளிகேஷனில் பல அம்சங்கள் கிடைக்கின்றது.

**ஹேங் அவுட்டை உபயோகிக்கத் தொடங்குவதற்கான படிகள்**

**படி 1: ஒரு ஹேங் அவுட்டை உருவாக்குவது**

குகிள்+ ல் சைன் இன் செய்யவும். குகிள் + என்பது ஒரு சோஷியல் நெட்வொர்க்கிங் இணையதளம், இது குகிள் அகவுன்ட் வைத்திருப்பவர்களுக்காக வடிவமைக்கப்பட்டது. இதற்கு , ஜிமெயிலுக்காக நீங்கள் உபயோகிப்பதைப் போன்றதொரு குகிள் அகவுன்ட் உங்களுக்கு தேவை.



**படி 2: ஹேங் அவுட் ஃப்ரேமைக் கண்டு பிடிக்கவும்.**



குகிள் + பேஜின் வலது கை பக்கத்தில் ஹேங் அவுட்ஸ் அமைந்திருக்கிறது. ஹேங் அவுட் லிஸ்டின் மேலே 'ந்யூ ஹேங் அவுட்' ஃபீல்டில் க்ளிக் செய்யவும்.

**படி 3: ஒரு புதிய ஹேங் அவுட்டை உருவாக்குவது**



ஹேங் அவுட் லிஸ்ட் உங்கள் கான்டாக்ட்ஸ் மற்றும் குகிள்+ சேர்கிள்சின் ஒரு பட்டியலாக மாறும். ஹேங் அவுட்டில் நீங்கள் சேர்க்க விரும்பும் நபர்களின் பெயர்களுக்கு அடுத்து உள்ள பாக்சை செக் (க்ளிக்) செய்யவும். பெயர் , இமெயில் முகவரி அல்லது ஃபோன் நம்பரை டைப் செய்வதன் மூலமாக நபர்கள் மற்றும் சர்கிள்களை நீங்கள் தேடலாம்.

**படி 4: குகிள்+ ஹேங்கவுட்டில் சாட்டிங்கைத் தொடங்கவும்**



i. சாட்டிங்கைத் தொடங்குவதற்கு, நீங்கள் சாட் செய்ய விரும்பும் நபர் மீது க்ளிக் செய்யவும் ஒரு சிறிய வின்டோ தோன்றுகிறது. 'சென்ட் ஏ மெசேஜ்' கட்டத்தில் டெக்ஸ்டை டைப் செய்யவும் பின்னர் என்டரை அழுத்தவும்.

ii. உங்கள் உரையாடலில் நீங்கள் இமோஜியைச் சேர்க்க விரும்பினால், சாட் ஃபீல்டின் வலது பக்கத்தில் ஸ்மைலி ஃபேஸ் மீது க்ளிக் செய்யவும் அல்லது தட்டவும். நீங்கள் உபயோகிக்ககூடிய இமோட் ஐகான்சின் (உணர்வுகளை வெளிப்படுத்தும் வரைபடங்கள்) ஒரு பட்டியல் மற்றும் இமோஜி திறக்கும் இவை பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது, இமோட் ஐகான் ஸ்க்ரீனின் மேலே உள்ள ஐகான்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலமாக நீங்கள் இந்த பிரிவுகள் இடையே நேவிகேட் செய்யலாம். (பயன்படுத்திக் கொள்ளலாம்)



iii. உங்கள் சாட் ஃபீல்டின் வலது பக்கத்தில் கேமரா ஐகானை க்ளிக் செய்வதன் மூலமாக உங்கள் ஹேங் அவுட்டிற்கு நீங்கள் இமேஜ்களைச் சேர்க்கலாம். இது 'செலெக்ட் அ ஃபோட்டோ ஃப்ரம் யுவர் கம்ப்யூட்டரை' திறக்கும் அல்லது மொபைல் சாதனங்களில் ஒரு ஆப்ஷன் மெனுவைத் திறக்கும்,





iii. ஃபோட்டோக்களை எடுப்பதற்கு மற்றும் அவற்றைப் பகிர்ந்து கொள்வதற்கு நீங்கள் உங்கள் வெப்கேம் (கம்ப்யூட்டருடன் இணைக்கப்பட்ட கேமரா) அல்லது ஃபோனின் கேமராவை உபயோகிக்கலாம், அல்லது உங்கள் கம்ப்யூட்டர் அல்லது ஃபோனின் மெமரி போன்ற மற்ற ஆதாரங்களிலிருந்து ஃபோட்டோக்களைச் சேர்க்கலாம்.



iv. ஒரு வீடியோ சாட்டில் சாட்டை ஆன் செய்வதற்கு , சாட் பாக்சின் மேலே உள்ள வீடியோ கேமரா பட்டனை க்ளிக் செய்யவும். நீங்கள் ஒரு வீடியோ சாட்டைத் தொடங்க முயற்சி செய்கிறீர்கள் என மற்ற நபர் ஒரு அறிவிப்பை பெறுவார். கம்ப்யூட்டர் மற்றும் மொபைல் சாதனங்கள் இரண்டிலும் நீங்கள் வீடியோ சாட் செய்யலாம்.

5.நீங்கள் உங்கள் சாட் செட்டிங்சை அட்ஜெஸ்ட் செய்ய விரும்பினால், உங்கள் ஆர்சிவ் (ஆவணப் பெட்டகம்) செட்டிங்சைத் தேர்ந்தெடுப்பதற்கு சாட் வின்டோவில்





நீங்கள் சேட்டிங் செய்து கொண்டிருக்கும் நபரை நீங்கள் ப்ளாக் (தடை) செய்யலாம். நீங்கள் சேட்டிங் செய்து கொண்டிருக்கும் நபரை நீங்கள் ப்ளாக் (தடை) செய்யலாம்.

vii. ஒரு மொபைல் சாதனத்தை உபயோகித்தால், மெனுவை அழுத்தவும் மற்றும் தோன்றும் மெனுவில் உங்கள் ஆப்ஷன்களை (வாய்ப்புகளைத்) தேர்ந்தெடுக்கவும்.





viii. சாட் வின்டோவின் மேலே இடது மூலையில் உள்ள 'குரூப் ஹேங்க அவுட்' பட்டன் மீது க்ளிக் செய்வதன் மூலமாக குழுவிலும் நீங்கள் ஹேங் அவுட் செய்யலாம் நீங்கள் ஹேங்கவுட் செய்ய விரும்பும் ஒரு குழுவை உருவாக்குவதற்கு செக்பாக்ஸ் மீது க்ளிக் செய்யவும்.

உங்கள் ஆன்லைன் குகிள்+சர்கிள்சுடன் உடனடி ஹேங்கவுட் தவிர, ஒரு ஹேங்கவுட் நிகழ்ச்சியை நீங்கள் முன்னதாகவும் திட்டமிடலாம். எதிர்காலத்தில் எந்த நேரத்திலும் பார்பதற்காக யூ ட்யூபிலும் நீங்கள் சாட்டை சேவ் செய்யலாம்.

*(குறிப்பு: உங்கள் ஸ்மார்ட்ஃபோனில் நீங்கள் குகிள் ஹேங்கவுட் ஆப்பையும் டவுன் லோட் செய்யலாம்)*

## பயிற்சி 2

1. ஸ்கைப்பில் ஒரு வீடியோ கால் செய்வதற்கு , நம்முடைய கம்ப்யூட்டருடன் நாம் ஒரு ............ஐ இணைத்திருக்க வேண்டும்
2. சர்ச் ஸகைப் ................லிருந்து ஸ்கைப்பில் கான்டாக்டுகளை நாம் தேடலாம்.
3. ஸ்கைப்பில் உள்ள கான்டாக்டுகள் அனுப்பும் ஃபைல்கள் ............. வின்டோவின் கான்டாக்ட் லிஸ்டில் தோன்றும்.
4. ஹேங்கவுட் என்பது குகிளின் மூன்று மெசேஜிங் பொருட்களின் ஒரு ஒருங்கிணைந்த வகை (வெர்ஷன்) குகிள் + மெசெஞ்சர் மற்றும் ஹேங்கவுட்
5. ஹேங் அவுட்டில் சாட் செட்டிங்சை அட்ஜஸ்ட் செய்வதற்கு , நாம் ..................ஐகான் மீது க்ளிக் செய்ய வேண்டும்.

## III. சோஷியல் மீடியா டூல்சிற்கான அறிமுகம்: ஃபேஸ்புக் மற்றும் ட்விட்டர்

### சோஷியல் மீடியா என்றால் என்ன?



சோஷியல் மீடியா என்பது மக்கள் இடையே தொடர்புகளைக் குறிப்பிடுகிறது, இதில் அவர்கள் வெர்சுவல் கம்யூனிட்டியில் (மெய் போன்ற தோற்றம் கொண்ட சமுதாயங்களில்) மற்றும் நெட்வொர்க்குகளில் தகவல் மற்றும் கருத்துக்களை உருவாக்குகிறார்கள், பகிர்ந்து கொள்கிறார்கள் மற்றும் / அல்லது பரிமாறிக் கொள்கிறார்கள் சோஷியல் மீடியா என்பது கம்யூனிட்டி-பேஸ்டு இன்புட் , தொடர்புகள், உள்ளடக்க விஷயங்களைப் -பகிர்ந்து கொள்வது மற்றும் ஒருங்கிணைப்பிற்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆன்லைன் கம்யூனிகேஷன்ஸ் சேனல்களின் ஒரு தொகுப்பாகும். ஆன்லைன் சாட்டிற்கு , வாய்ஸ் ஓவர் இன்டர்னெட் ப்ரோடோகோல், ப்ளாக்ஸ் மற்றும் சோஷியல் நெட்வொர்கிங்கிற்கு அர்ப்பணிக்கப்பட்ட இணையதளங்கள் மற்றும் அப்ளிகேஷன்கள் , சோஷியல் மீடியா கருவிகளை இயக்குபவைகள் ஆகும். ஃபேஸ்புக் , ப்ளாக்ஸ், ட்விட்டர் , ஆர்குட், லிங்கிடின் மற்றும் விகிபீடியா சோஷியல் மீடியா அப்ளிகேஷன்சில் சில உதாரணங்கள்.

### சோஷியல் மீடியா டூல்ஸ் வகைகள்




1. **ஆன்லைன் சாட்டுகள்:** ஆன்லைன் சாட்டுகள், இன்டர்னெட்டில் ஏதாவது வகையான தொடர்புகளை குறிக்கிறது, இது அனுப்புபவரிடமிருந்து பெறுபவருக்கு டெக்ஸ்ட்-மெசேஜ்களை அதே சமயத்தில் உடனடியாக அனுப்புகிறது. பொதுவாக சாட் மெசேஜ்கள் சிறியதாக இருக்கும் , இது மற்ற பங்கேற்பாளார்கள் விரைவாக பதில் அளிப்பதை இயன்றதாக்கும். ஆன்லைன் சாட்டுகள் பேசப்படும் உரையாடலைப் போன்ற ஒரு உணர்வை உருவாக்கலாம், இது இன்டர்னெட் ஃபோரம் மற்றும் இமெயில் போன்ற மற்ற டெக்ஸ்ட்-அடிப்படையிலான ஆன்லைன் தொடர்புகளிலிருந்து இதை வேறுபடுத்துகிறது. ஆன்லைன் சாட் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கான தொடர்புகள் மற்றும் அனுப்பும் ஒருவரிடமிருந்து பலருக்கான தொடர்புகள் மற்றும் வாய்ஸ் மற்றும் வீடியோ சாட், அல்லது வெப் கான்ஃப்ரென்சிங்கின் சேவையின் ஒரு அம்சமாக இருக்கலாம். சில உதாரணங்கள் யாஹூ மெசெஞ்சர் மற்றும் ஜி-டாக்.




2. **ப்ளாக்:** ப்ளாக் என்பது ஒரு தனிநபர், குழு அல்லது நிறுவனம் வைத்திருக்கும் ஒரு ஆனலைன் ஜர்னல் ஆகும். இன்டர்னெட்டில் நீங்கள் ஆர்வம் கொள்ளும் விஷயம் பற்றிய தகவலைப் பகிர்ந்து கொள்வதற்கு , சமீபத்திய நிகழ்ச்சிகள் அல்லது முன்னேற்றங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு , மற்றும் அவற்றைப் பற்றி எழுதுவதன் மூலமாக ஆர்வமளிக்கும் கலந்துரையாடல்கள் மற்றும் விவாதங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு உபயோகிக்கப்படலாம். ப்ளாக்சிற்கான உதாரணங்கள் ப்ளாகர் மற்றும் வொர்ட்ப்ரெஸ்




3. **சோஷியல் நெட்வொர்கிங் :** சோஷியல் நெட்வொர்கிங் என்பது ஆர்வங்கள் , நடவடிக்கைகள் , பின்னணிகள் அல்லது நிஜ-வாழ்க்கை தொடர்புகளை பகிர்ந்து கொள்ளும் மக்கள் இடையே சோஷியல் நெட்வொர்க்கை (சமூக தொடர்புகளை) அல்லது சமூக உறவுகளை உருவாக்குவதற்கான ஒரு மேடை இவை இணையதளம் - அடிப்படையிலான சேவைகள், இது தனி நபர்கள் ஒரு பப்ளிக் ப்ரொஃபைலை உருவாக்குவதற்கு , இணைப்பை பகிர்ந்து கொள்வதற்கான உபயோகிப்பாளர்களின் ஒரு பட்டியலை உருவாக்குவது, மற்றும் இந்த முறைக்குள் தொடர்புகளைப் பார்பதற்கு மற்றும் க்ராஸ் செய்வதற்கு உங்களை அனுமதிக்கிறது. ஃபேஸ்புக், ட்விட்டர், லிங்கிடின் போன்றவை சோஷியல் நெட்வொர்கிங் சைட்டுகளின் சில உதாரணங்கள்.

**ஃபேஸ்புக் :**

ஃபேஸ்புக் தற்போது மிக பிரபலமான சோஷியல் நெட்வொர்கிங் சைட் , இது நண்பர்களுடன் இணைவதற்கு மற்றும் நண்பர்களுடன் தொடர்பில் இருப்பதற்கு , ஃபோட்டோக்களை போஸ்ட் செய்வதற்கு, லிங்குகளை ஷேர் செய்வதற்கு மற்றும் மற்ற தகவலைப் பரிமாறிக் கொள்வதற்கு உங்களுக்கு உதவுகிறது.

**ஃபேஸ்புக்கை உபயோகிப்பதற்கான படிகள்**

| | | |
|---|---|---|
| படி 1 | ஒரு வெப் பிரவுசரைத் திறக்கவும். அட்ரஸ் பாரில் www.facebook.com ஐ டைப் செய்யவும் மற்றும் கோ பட்டன் மீது க்ளிக் செய்யவும் அல்லது என்டரை அழுத்தவும். |  |
| படி 2 | சைன் அப்பில், கட்டங்களில் ரெஜிஸ்ட்ரேஷன் விவரங்களைப் பூர்த்தி செய்யவும் மற்றும் சைன் அப் பட்டன் மீது க்ளிக் செய்யவும். ரெஜிஸ்ட்ரேஷனைப் பூர்த்தி செய்வதற்கு இது உங்களை மூன்று படிகளில் அழைத்துச் செல்லும். |  |
| படி 3 | கான்டாக்ட்சுகளைச் சேர்ப்பதற்கு ஃபைன்ட் ஃப்ரென்ட்ஸ் பட்டன் மீது க்ளிக் செய்யவும். இந்த நிலையில் நீங்கள் இந்த செயல்முறையையும் விட்டுவிடலாம். |  |
| படி 4 | ப்ரொஃபைல் இன்ஃபர்மேஷன் பேஜைப் பூர்த்தி செய்யவும்; நீங்கள் இந்த செயல்முறையையும் விட்டு விடலாம். |  |
| படி 5 | உங்கள் கம்ப்யூட்டரில் உள்ள ஒரு புகைப்படத்தை அப்லோட் செய்வதன் மூலமாக உங்கள் ப்ரொஃபைல் படத்தை நீங்கள் செட் செய்யலாம். |  |
| படி 6 | சேவ் மற்றும் கன்டின்யூ பட்டனைக் க்ளிக் செய்யவும் மற்றும் உங்கள் ஃபேஸ்புக் அகவுன்ட் உருவாக்கப்படும். |  |

| | | |
|---|---|---|
| படி 7 | ஃபைன்டு பீபிள் யூ நோ (உங்களுக்கு தெரிந்தவர்களைக் கண்டு பிடியுங்கள்) பகுதியில் , உங்களுக்கு தெரிந்த நபர்களின் பெயரை அல்லது இ-மெயிலை டைப் செய்வதன் மூலமாக நீங்கள் நபர்களைச் சேர்க்கலாம். |  |
| படி 8 | ஃபேஸ்புக்கில் உங்கள் ஸ்டேடசையும் நீங்கள் அப்லோட் செய்யலாம். அதற்காக , ஸ்டேடஸ் பட்டன் மீது க்ளிக் செய்யவும் மற்றும் உங்கள் ஸ்டேடசை டைப் செய்யவும். உங்கள் ஸ்டேடசை போஸ்ட் செய்வதற்கு , போஸ்ட் பட்டன் மீது க்ளிக் செய்யவும். |  |

*(குறிப்பு: உங்கள் ஸ்மார்ட் ஃபோனிலும் நீங்கள் ஃபேஸ்புக் ஆப்பை டவுன் லோட் செய்யலாம்)*

**ப்ரொஃபைல் பேஜின் கீழ் உள்ள வெவ்வேறு டேப்கள்**

டைம்லைன் டேபில் , நீங்கள் வேலை செய்யும் இடம் , நகரம் , பள்ளி மற்றும் உங்கள் உறவு நிலைப் பற்றி நீங்கள் குறிப்பிடலாம். உங்கள் நண்பர்களின் போஸ்டுகள் மீதும் நீங்கள் கமென்ட் செய்யலாம். அதற்கு நீங்கள் கமென்ட் லிங்க் மீது க்ளிக் செய்ய வேண்டும், கமென்ட் பாக்சில் உங்கள் கமென்டுகளை டைப் செய்யவும் மற்றும் என்டரை அழுத்தவும்.



டைம்லைன் பார் ஒரு சர்ச் பாக்சையும் கொண்டுள்ளது , இதில் உங்கள் நண்பரின் பெயரை டைப் செய்து நீங்கள் தேடலாம் மற்றும் நீங்கள் அவருடைய ப்ரொஃபைலைப் பார்க்கலாம்.





தொடர்பில் உள்ளவருக்கு (கான்டாக்டிற்கு) ஒரு ஃப்ரென்ட் ரெக்வெஸ்டை அனுப்புவதற்கு ஆட் ஃப்ரென்ட் பட்டன் மீது க்ளிக் செய்யவும்.



நீங்கள் ஃபேஸ்புக்கில் உங்கள் வேலைகளை முடித்தவுடன் , ஃபேஸ்புக்பாரில் உள்ள செட்டிங்ஸ் ஐகானை க்ளிக் செய்வதன் மூலமாக பின்னர் லாக் அவுட் ஆப்ஷனை க்ளிக் செய்து நீங்கள் சைன் அவுட் செய்யலாம்



இப்போது உங்களுக்கு ஒரு ஃபேஸ்புக் அகவுன்ட் உள்ளது. ஃபேஸ்புக்கிலிருந்து சைன் அவுட் செய்வத்ற்கு , ட்ராப் டவுன் அம்புக்குறி மீது க்ளிக் செய்யவும் , இது இந்த பேஜின் மேலே வலது கை பக்கத்தில் தோன்றுகிறது. உங்கள் ஃபேஸ்புக் அகவுன்டிலிருந்து வெளியேறுவதற்கு 'லாக் அவுட்' மீது க்ளிக் செய்யவும். நீங்கள் அடுத்த முறைப் பார்க்கும் போது , உங்கள் இ-மெயில் அல்லது ஃபோன் நம்பரை உபயோகித்து நீங்கள் சைன் இன் செய்யலாம். உங்கள் பாஸ்வொர்டை டைப் செய்யவும் மற்றும் உங்கள் அகவுன்டிற்குள் லாகின் செய்வதற்கு லாகின் பட்டன் மீது க்ளிக் செய்யவும்.



**ஸ்டேடஸ் மெசேஜை போஸ்ட் செய்வது மற்றும் கமென்டுகளை சேர்ப்பது**

ஒரு ஃபேஸ்புக் அகவுன்ட் வைத்திருப்பது உங்களை ஸ்டேடஸ் மெசேஜ்களை போஸ்ட் செய்வதற்கு அனுமதிக்கிறது, இதனை உங்கள் நண்பர்கள் பார்க்கலாம். ஒரு ஸ்டேடஸ் மெசேஜைப் போஸ்ட் செய்வதற்கு, 'அப்டேட் ஸ்டேடஸ்' என்பதன் கீழ் உள்ள காலி பெட்டி (கட்டம்) மீது முதலில் க்ளிக் செய்யவும். உங்கள் ஸ்டேடசை டைப் செய்யவும் மற்றும் அடியில் 'போஸ்ட்' என்பதன் மீது க்ளிக் செய்யவும்.



ஒரு போஸ்ட் அல்லது ஃபோட்டோ அல்லது ஏதாவது உள்ளடக்க விஷயம் மீது கமென்ட் செய்வதற்கு, ஒரு மெசேஜின் கீழே 'கமென்ட்' லிங்கை க்ளிக் செய்யவும். ஒரு டெக்ஸ்ட் பாக்ஸ் தோன்றும். அந்த பாக்சில் உங்கள் கமென்டை டைப் செய்யவும் மற்றும் என்டரை அழுத்தவும்.




**ஃபேஸ்புக் பாரை உபயோகிப்பது**

இந்த ஃபேஸ்புக் பார் ஃப்ரென்ட் ரெக்வெஸ்டுகள், மெசெஜ்கள் மற்றும் உங்கள் நண்பர்களின் சமீபத்திய நடவடிக்கைகள் பற்றி உங்களுக்கு சொல்கிறது. நீங்கள் க்ளிக் செய்து உங்களுக்கு கிடைத்திருக்கும் ஃப்ரென்டு ரெக்வெஸ்டுகளின் (நண்பர் ஆவதற்கான கோரிக்கைகளின்) எண்ணிக்கையை பார்க்கலாம் மற்றும் நீங்கள் பெற்றிருக்கும் மெசேஜ்களின் எண்ணிக்கையையும் பார்க்கலாம். ஃபேஸ்புக் பாரில் உள்ள உலக உருண்டை சின்னம் உங்கள் நண்பர்களின் சமீபத்திய நடவடிக்கைகள் மற்றும் உங்கள் போஸ்டுகளுக்கான பதில்கள் பற்றிய அறிவிப்புகளை உங்களுக்கு அளிக்கிறது

**தொழிலுக்காக ஃபேஸ்புக்கை உபயோகிப்பது**

சோஷியல் நெட்வொர்கிங் இணையதளங்கள் உங்கள் தொழிலை மேம்படுத்துவதில் உங்களுக்கு உதவலாம். பல தொழில்கள் தங்களுடைய வாடிக்கையாளர்களுடன் தொடர்பு கொள்ளும் விதத்தை மற்றும் அவர்களுடைய கம்பெனியை விளம்பரப்படுத்தும் விதத்தை ஃபேஸ்புக் மாற்றி வருகிறது. பெரிய பிராண்டுகள் மட்டும் ஃபேஸ்புக்கில் வெற்றி காணவில்லை, சிறிய தொழில்களும் அவர்களுடைய சமுதாயத்தில் புதிய வாடிக்கையாளர்களைச் சென்றடைவதற்கு வெற்றிகரமாக அதன் சாத்தியக்கூறுகளை உபயோகித்து வருகிறது.

ஃபேஸ்புக்கில் உங்கள் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான வழிகளில் ஒன்று அதற்கான ஒரு பேஜை உருவாக்குவதாகும். அது ஒரு ஃப்ரீ டூல் (இலவச கருவி) என்பதால், அந்த இணையதளத்தின் முழு சாத்தியத்தை நீங்கள் சுலபமாக பயன்படுத்தலாம் மற்றும் நூற்றுக்கணக்கான , ஆயிரக்கணக்கான , பல லட்சகணக்கான மக்களையும் சென்றடையலாம்.

**உங்கள் தொழிலுக்கான ஒரு பேஜை உருவாக்குவது.**

| | | |
|---|---|---|
| படி 1 | உங்கள் தொழிலுக்கான ஒரு ப்ரொஃபைலை உருவாக்குவதற்கு , ஹோம் பேஜின் கீழே அமைந்திருக்கும் க்ரியேட் ஏ பேஜ் மீது க்ளிக் செய்யவும் |  |
| படி 2 | லோக்கல் பிசினஸ் அல்லது இடத்தை க்ளிக் செய்யவும் |  |

| | | |
|---|---|---|
| படி 3 | ட்ராப்-டவுன் பாக்சில் பட்டியலிடப்பட்ட வாய்ப்புகளிலிருந்து ஒரு பிரிவைத் தேர்ந்தெடுக்கவும் மற்றும் முகவரி , நகரம் , தொடர்பு கொள்வதற்கான எண் போன்ற விவரங்களைப் பூர்த்தி செய்யவும். |  |
| படி 4 | பின்னர் , 'கெட் ஸ்டார்டட்' பட்டன் மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 5 | அடுத்த வின்டோவில், உங்கள் தொழில் பற்றிய அனைத்து விவரங்களையும் நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டும் நீங்கள் விளம்பரம் செய்யும் தொழில் பற்றிய சில அடிப்படைத் தகவலை நீங்கள் அளிக்க வேண்டியிருக்கும். |  |
| படி 6 | உங்கள் பேஜிற்கு ஃப்ரொஃபைல் படத்தைச் சேர்ப்பதற்கு , உங்கள் கம்ப்யூட்டரில் உள்ள ஒரு ஃபைலை நீங்கள் அப்லோட் செய்யலாம் அல்லது உங்கள் இணையதளத்திலிருந்து அதனை இம்போர்ட் செய்யலாம். |  |
| படி 7 | அந்த பேஜில் உங்கள் ஃபேவரிட்ஸ் லிஸ்டை நீங்கள் சேர்க்கலாம். |  |
| படி 8 | உங்கள் பிசினஸ் பேஜில் பணம் செலுத்துவதற்கான முறையை சேர்ப்பதன் மூலமாக நீங்கள் பலரைச் சென்றடையலாம். |  |

| | | |
|---|---|---|
| படி 9 | பணம் செலுத்துவதற்கான முறையை நீங்கள் தேர்ந்தெடுத்தால், ஒரு வின்டோ தோன்றும். நீங்கள் உங்கள் நாட்டை இந்தியா என தேர்ந்தெடுக்கலாம். |  |
| படி 10 | நீங்கள் கன்டின்யூ பட்டனை க்ளிக் செய்தவுடன், ஒரு வின்டோ தோன்றுகிறது, இது உங்களிடம் உங்கள் கார்டு விவரங்களைக் கேட்கும். உங்கள் கார்டு விவரங்களைப் பூர்த்தி செய்யவும் மற்றும் சப்மிட் மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 11 | எதிர்காலத்தில் வாங்குவதற்காக நீங்கள் பணம் செலுத்திய தகவலை ஃபேஸ்புக் சேவ் செய்யும். நீங்கள் எப்போதுமே உங்கள் அகவுன்ட் செட்டிங்சில் இந்த தகவலை அகற்றலாம் அல்லது நிர்வகிக்கலாம். |  |
| படி 12 | நீங்கள் பணம் செலுத்துவதற்கான எந்த முறையையும் சேர்க்க விரும்பவில்லை என்றால் , நீங்கள் அந்த படியை விட்டுவிடவும் மற்றும் உங்கள் பிசினஸ் பேஜ் உருவாக்கப்படும். |  |

**ஃபேஸ்புக் பேஜை பிரபலப்படுத்துவது.**

உங்கள் நண்பர்களுக்கு சொல்வதன் மூலமாக உங்கள் பேஜை நீங்கள் பிரபலமாக்கலாம். இந்த பேஜை லைக் செய்வதற்கு உங்கள் நண்பர்களை வரவேற்பதற்கு, 'பில்டு ஆடியன்ஸ்' டேப் மீது க்ளிக் செய்யவும். இது இந்த பக்கத்தில் வலது கை பக்கத்தில் மேலே தோன்றும். நீங்கள் இன்வைட் ஃப்ரென்ட்ஸ் மீது க்ளிக் செய்யும் போது , உங்கள் அனைத்து நண்பர்களின் பட்டியல் டிஸ்பிளே செய்யப்படும். நீங்கள் தேர்ந்தெடுத்து , உங்கள் ஃபேஸ்புக் பேஜை பார்பதற்கு அவர்களை வரவேற்கலாம்.



**ஃபேஸ்புக் பேஜை நிர்வகிப்பது.**

அந்த பக்கத்தில் அளிக்கப்பட்டிருக்கும் வெவ்வேறு ஐகான்கள் மீது க்ளிக் செய்வதன் மூலமாக உங்கள் பேஜில் உள்ள எந்த தகவலையும் அல்லது ப்ரொஃபைல் படத்தையும் நீங்கள் மாற்றலாம்.



**ஸ்டேடஸ் மெசெஜைப் போஸ்ட் செய்வது மற்றும் கமென்டுகளைச் சேர்ப்பது.**

1. ஒரு ஸ்டேடஸ் மெசேஜை போஸ்ட் செய்வதற்கு , ஸ்டேடசின் கீழ் உள்ள கட்டத்தின் மீது க்ளிக் செய்யவும். உங்கள் மெசேஜை டைப் செய்யவும் மற்றும் ஷேரை க்ளிக் செய்யவும்.



2. ஒரு போஸ்ட் , அல்லது ஃபோட்டோ அல்லது ஏதாவது உள்ளடக்க விஷயங்கள் மீது கருத்து தெரிவிப்பதற்கு , கமென்ட் லிங்கை க்ளிக் செய்யவும். கமென்ட் பாக்சில் உங்கள் கர்சரை வைப்பதற்கு க்ளிக் செய்யவும். உங்கள் கமென்டை டைப் செய்யவும் மற்றும் உங்கள் கீபோர்டின் மீதுள்ள என்டரை அழுத்தவும். பேஜிலிருந்து சைன் அவுட் செய்வதற்கு, ட்ராப்-டவுன் அம்புக்குறி பட்டன் மீது க்ளிக் செய்யவும் , இது இந்த பக்கத்தின் மேல் வலது கை பக்கத்தில் மீது தோன்றுகிறது. உங்கள் பேஜை விட்டு வெளியேறுவதற்கு லாக் அவுட் மீது க்ளிக் செய்யவும்.



**ட்விட்டரை உபயோகித்து**

ட்விட்டர் என்பது ஒரு சக்தி வாய்ந்த சோஷியல் நெட்வொர்கிங் சேவை , இதன் மூலமாக நீங்கள் உலகெங்கிலும் உள்ள பல லட்சக்கணக்கான உபயோகிப்பாளர்களுடன் திறம்பட உங்கள் கருத்துக்கள் / எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளலாம். இது ஒரு இலவச சேவை , மேலும் இது பலருடன் தொடர்பு கொள்வதற்கு மற்றும் அரசியல் , விளையாட்டு, பொழுதுபோக்கு போன்ற பல துறைகள் தொடர்பான தகவலை தீவிரமாக பகிர்ந்துகொள்வதற்கு உபயோகிக்கப்படுகிறது.

**ட்விட்டரை உபயோகிப்பதற்கான படிகள்**

| | | |
|---|---|---|
| படி 1 | ட்விட்டரில் ஒரு அகவுன்டை உருவாக்குவதற்கு, www.twitter.com க்கு செல்லவும் மற்றும் தேவையான தகவலை பூர்த்தி செய்வதன் மூலமாக சைன் அப் செய்யவும். நீங்கள் ஏற்கனவே ஒரு அகவுன்ட் வைத்திருந்தால் , உங்கள் யூசர்நேம் / இமெயில் ஐடி மற்றும் பாஸ்வொர்டை உபயோகித்து சைன் இன் செய்யவும். நீங்கள் வெற்றிகரமாக உங்கள் அகவுன்டை உருவாக்கிய பின் அல்லது லாகின் செய்த பின், இப்போது நீங்கள் ட்விட்டரை உபயோகிக்கத் தொடங்கலாம். |  |
| படி 2 | உங்களைப் பின் தொடர்பவர்களுடன் சில தகவலை நீங்கள் பகிர்ந்து கொள்ள விரும்பினால், 'கம்போஸ் ந்யூ ட்வீட்' டெக்ஸ்ட் பாக்சில் உங்கள் மெசேஜை டைப் செய்யவும் மற்றும் கீழே 'ட்வீட்' பட்டன் மீது க்ளிக் செய்யவும். ட்வீட்டுகள் 140 எழுத்துக்கள் வரை மட்டுமே வரையறுக்கப்படுகிறது , அதனால் உங்கள் ட்வீட்டுகளை சிறியதாக வைக்கவும். |  |

| | | |
|---|---|---|
| படி 3 | நீங்கள் எந்த நபர்களின் ட்வீட்டுகளைப் பெற விரும்புகிறீர்களோ அவர்களைத் தொடரத் தொடங்குவதற்கு, ஹோம்பேஜில் டிஸ்பிளே செய்யப்படும் மெனு டேபை உபயோகிக்கவும் மற்றும் 'ஹூ டு ஃபாலோ' பகுதியின் கீழ் டிஸ்பிளே செய்யப்பட்ட 'ஃபாலோ' பட்டன் மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 4 | நீங்கள் ட்விட்டரில் பலரைப் பின் தொடர்கிறீர்கள் என்றால், சுலபமாக பார்த்துக் கொள்வதற்கு நீங்கள் நபர்களின் பட்டியலை ஒருங்கிணைக்கலாம். வேறொருவரை ஒரு பட்டியலில் சேர்ப்பதற்கு , அவர்களுடைய ப்ரொஃபைலுக்கு செல்லவும் மற்றும் இந்த டூல்பாரில் ஒரு நபரின் ஐகானை க்ளிக் செய்யவும் மற்றும் 'ஆட் ஆர் ரிமூவ் ஃப்ரம் லிஸ்ட்ஸ்' தேர்ந்தெடுக்கவும். |  |
| படி 5 | உங்கள் பட்டியல்களைக் கொண்ட ஒரு மெனு பாப் அப் ஆகும்; நீங்கள் ஒரு புதிய லிஸ்டை உருவாக்குவதற்கு தேர்ந்தெடுக்கலாம் அல்லது தற்போதைய லிஸ்டில் அந்த நபரைச் சேர்க்கலாம். |  |

*(குறிப்பு : உங்கள் ஸ்மார்ட் ஃபோனில் நீங்கள் ட்விட்டர் ஆப்பையும் டவுன்லோட் செய்யலாம்.)*

**ட்விட்டரில் உங்கள் ப்ரொஃபைலை செட் செய்வது**

| | | |
|---|---|---|
| படி 1 | உங்கள் ப்ரொஃபைலை அப்லோட் செய்வதற்கு , உங்கள் யூசர்நேம் கீழே உள்ள ட்ராப் டவுன் மெனுவில் 'செட்டிங்ஸ்' மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 2 | 'ப்ரொஃபைல்' மீது க்ளிக் செய்யவும் மற்றும் உங்கள் கம்ப்யூட்டரிலிருந்து ஒரு ஃபைலைத் தேர்ந்தெடுப்பதற்கு 'சூஸ் ஃபைல்' மீது க்ளிக் செய்யவும். (இந்த படம் இந்த இணையதளத்தில் உங்கள் பெயருடன் டிஸ்பிளே செய்யப்படும். இது JPG, GIF, அல்லது PNG ஃபைலாக இருக்க வேண்டும் மற்றும் 700 கே பி-ஐ விட குறைவானதாக இருக்க வேண்டும்). |  |

| | | |
|---|---|---|
| படி 3 | உங்கள் பெயர், இடம் , இணையதளம் போன்ற மீதமுள்ள ப்ரொஃபைல் விவரங்களை நீங்கள் பூர்த்தி செய்யலாம். உங்கள் ட்வீட்டிகள் ஃபேஸ்புக்கில் போஸ்ட் செய்யப்பட வேண்டுமா என்பதையும் நீங்கள் தேர்ந்தெடுக்கலாம். நீங்கள் தொடர்ந்து செல்ல விரும்பினால், ப்ரொஃபைல் பேஜின் கீழே போஸ்ட் யுர் ட்வீட்ஸ் டு ஃபேஸ்புக் பட்டன் மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 4 | ட்வீட் மீயடியா மற்றும் ப்ரைவசி செட்டிங்சைப் பார்க்கவும். உங்கள் செட்டிங்சின் அகவுன்ட் டேபின் கீழ் இவை பட்டியலிடப்பட்டிருக்கிறது. பொருத்தமான கட்டங்கள் மீது க்ளிக் செய்து தேர்ந்தெடுக்கவும் மற்றும் சேவ் சேஞ்சஸ் பட்டனை க்ளிக் செய்யவும் |  |
| படி 5 | உங்கள் அகவுன்டைப் பாதுகாப்பதற்கு குறிப்பிட்ட கால இடைவெளிகளில் உங்கள் பாஸ்வோர்டை மாற்றவும். அவ்வாறு செய்வதற்கு ,செட்டிங்க்ஸ் கீழ் உள்ள 'பாஸ்வோர்டு' டேப் மீது க்ளிக் செய்யவும். உங்கள் பழைய பாஸ்வொர்டை டைப் செய்யவும், பின்னர் இரண்டு முறை உங்கள் புதிய பாஸ்வொர்டை டைப் செய்யவும். முடிக்கும் போது 'சேஞ்ச்' மீது க்ளிக் செய்யவும் |  |
| படி 6 | ட்விட்டரிலிருந்து நீங்கள் எப்போது இமெயில்கள் பெற விரும்புகிறீர்கள் என்பதை முடிவு செய்யவும். 'நோட்டிஃபிகேஷன்ஸ்' டேபின் கீழ், நடவடிக்கைகளின் ஒரு பட்டியல் உள்ளது. நீங்கள் ஒரு இமெயில் பெற விரும்பும் நடவடிக்கைகளுக்கு பக்கத்தில் உள்ள கட்டங்கள் மீது க்ளிக் செய்யவும் |  |

**உங்கள் ப்ரொஃபைலை தேவைக்கு ஏற்ப மாற்றுவது**

ஒவ்வொரு ப்ரொஃபைலும் ஒரு முன்னிருப்பு (டிஃபால்ட்) பேக்கிரவுண்டு மற்றும் கலர் திட்டத்துடன் தொடங்குகிறது. இருந்தாலும், நீங்கள் அதனை தனிப்பட்ட முறையில் மாற்றிக் கொள்ள விரும்பினால் . பின்வரும் படிகளைப் பின்பற்றி நீங்கள் மாற்றிக் கொள்ளலாம்

| | | |
|---|---|---|
| படி 1 | டிசைன் டேப் செட்டிங்கஸ் மீது க்ளிக் செய்யவும். |  |

| | | |
|---|---|---|
| படி 2 | அளிக்கப்பட்டிருக்கும் பின்னணி இமேஜ்கள் ஒன்றிலிருந்து தேர்ந்தெடுக்கவும் , அல்லது சேஞ்ச் பேக்கிரவுன்டு இமேஜ் என்று சொல்லும் பட்டன் மீது க்ளிக் செய்வதன் மூலமாக உங்கள் சொந்த இமேஜ்களை அப்லோட் செய்யவும். |  |
| படி 3 | உங்கள் கம்ப்யூட்டரிலிருந்து ஒரு இமேஜை அப்லோட் செய்வதற்கு சூஸ் ஃபைல் மீது க்ளிக் செய்யவும் |  |
| படி 4 | சேஞ்ச் டிசைன் கலர்சை க்ளிக் செய்வதன் மூலமாகவும் நீங்கள் கலர் ஸ்கீமை வைத்தும் விளையாடலாம். |  |

## பயிற்சி 2

1. பின்வருபவைகளில் எது இன்டர்னெட்டில் ஒரு சோஷியல் மீடியா சேவை?
   விகிபீடியா  ஃப்ளிப்கார்ட்  ட்விட்டர்

2. பின்வருபவைகளில் எது ஒரு தனிநபர் , குழு அல்லது நிறுவனம் வைத்திருக்கும் ஆன்லைன் ஜர்னல்?
   ப்ளாக்  ட்வீட்  சாட்

3. பெயரை டைப் செய்வதன் மூலமாக நீங்கள் வேறொருவரை தேடக்ககூடிய ஒரு சர்ச் பாக்சை ஃபேஸ்புக்கில் உள்ள எந்த வாய்ப்பு கொண்டுள்ளது?
   டைம்லைன் பார்  கமென்ட்  ஃபேஸ்புக் பார்

4. ட்விட்டரில் எத்தனை எழுத்துக்கள் வரை ட்வீட்டுகள் வரையறுக்கப்படுகிறது?
   150  140  130

5. இன்டர்னெட்டில் தொடர்பு கொள்வதற்கு மற்றும் தீவிரமாக தகவலை பகிர்ந்து கொள்வதற்கு பின்வரும் எது உபயோகிக்கப்படுகிறது?
   யூட்யூப்  விகிபீடியா  ட்விட்டர்

## IV. தகவல் பெறுவதற்கான கருவிகள் குறித்த அறிமுகம்: யூட்யூப் மற்றும் விக்கிபீடியா

### யூ ட்யூப்

யூட்யூப் என்பது குகிள் அளிக்கும் இலவச வீடியோ பகிர்விற்கான ஒரு மேடை. பிப்ரவரி 2005 ல் உருவாக்கப்பட்ட இந்த இணையதளம் பல லட்சக்கணக்கான மக்கள் முதன்மையாக உருவாக்கப்பட்ட வீடியோக்களை கண்டுபிடிப்பதற்கு , பார்பதற்கு மற்றும் பகிர்ந்து கொள்வதற்கு அனுமதிக்கிறது. மக்கள் இணைவதற்கு , தகவல் அளிப்பதற்கு மற்றும் உலகெங்கிலும் உள்ள மற்றவர்களை ஊக்குவிப்பதற்கு மற்றும் மூலப்படிவத்தின் உள்ளடக்க விஷயங்களை உருவாக்குபவர்கள் மற்றும் பெரிய மற்றும் சிறிய அளவில் விளம்பரம் செய்பவர்களுக்கான ஒரு விநியோக மேடையாக நடந்து கொள்கிறது. யூ ட்யூபை இயக்குவதற்கு , உங்களிடம் இன்டர்னெட் இணைப்பு, அடோப் ஃப்ளாஷ் ப்ளேயர் மற்றும் ஒரு ஸ்பிக்கர் இருக்க வேண்டும்.

**யூ ட்யூபை உபயோகிப்பது**

| | | |
|---|---|---|
| படி 1 | ஸ்டார்ட் படன் மீது க்ளிக் செய்யவும் மற்றும் இன்டர்னெட் எக்ஸ்ப்ளோரரைக் திறக்கவும். அட்ரஸ் பாரில் www.youtube.com ஐ டைப் செய்யவும் மற்றும் கோ பட்டன் மீது க்ளிக் செய்யவும் அல்லது என்டரை அழுத்தவும். |   |
| படி 2 | யூ ட்யூப் வெப்பேஜ் லோட் ஆகும் இந்த பக்கத்தின் மேலே நீங்கள் சர்ச் பாரைப் பார்க்கலாம். சர்ச் ஐடம்ஸ் அல்லது சர்ச் கீவொர்ட்சை டைப் செய்யவும் மற்றும் சர்ச் பட்டன் மீது க்ளிக் செய்யவும் அல்லது என்டரை அழுத்தவும். |  |
| படி 3 | ஸ்க்ரீன் மீது தேடப்பட்ட தலைப்பிற்கான வீடியோ லிங்கின் ஒரு பட்டியல் தோன்றுகிறாது தொடர்புடைய வீடியோக்களைப் பார்பதற்கு லிங்க் மீது க்ளிக் செய்யவும் |  |
| படி 4 | தேர்ந்தெடுக்கப்பட்ட வீடியோ , வீடியோ ப்ளேயரில் ப்ளே செய்யப்படும். வீடியோ ப்ளேயர் கீழே ப்ளே / பாஸ் , வால்யூம்/ ம்யூட் , மொத்த நேரம், தரத்தை மாற்றுவது மற்றும் ஃபுல் ஸ்க்ரீன் போன்ற வெவ்வேறு கட்டுபாடுகளை நீங்கள் பார்க்கலாம். |  |
| படி 5 | வீடியோ குறித்து விவரங்கள் மற்றும் கருத்துக்களை வீடியோவிற்கு கீழே காணலாம். யூ ட்யூபில் பிரபலமான மற்றும் பொதுவான வீடியோக்களைப் பார்பதற்கு உங்களுக்கு ஒரு அகவுன்ட் தேவையில்லை, ஆனால் ப்ரைவெட் வீடியோக்களைப் பார்பதற்கு உங்களுக்கு ஒரு லாகின் அகவுன்ட் தேவை. |  |

*(குறிப்பு : உங்கள் ஸ்மார்ட் ஃபோனிலும் யூட்யூப் ஆப்பை டவுன்லோட் செய்யலாம்.)*

**யூ ட்யூபில் வீடியோக்களை அப்லோட் செய்வது**

| | | |
|---|---|---|
| படி 1 | உங்கள் குகிள் அகவுன்டை உபயோகித்து யூ ட்யூபில் சைன்-இன் செய்வதற்கு, யூ ட்யூப் வெப்பேஜின் வலது கை மூலை மீதுள்ள சைன்-இன் பட்டன் மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 2 | குகிள் சைன்-இன் பேஜ் தோன்றுகிறது உங்கள் இமெயில் மற்றும் பாஸ்வொர்டை டைப் செய்யவும் மற்றும் சைன்-இன் பட்டன் மீது க்ளிக் செய்யவும். உங்களிடம் குகிள் அகவுன்ட் இல்லை என்றால் , நீங்கள் அதனை உருவாக்க வேண்டும். |   |
| படி 3 | யூ ட்யூப் பேஜ் தோன்றும். சர்ச் பாக்ஸ் பக்கத்தில் உள்ள அப்லோட் பட்டன் மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 4 | நீங்கள் முதல் முறையாக உபயோகிப்பவர் என்றால், அது உங்களை உங்கள் சேனலை செட் அப் செய்யச் சொல்லும் மற்றும் பாலினம் மற்றும் பிறந்த தேதி போன்ற தனிப்பட்ட விவரங்களை அளிக்கும்படி கேட்கும். அந்த விவரங்களைப் பூர்த்தி செய்யவும் மற்றும் கன்டின்யூ டு அப்லோட் பட்டன் மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 5 | லிங்கை அப்லோட் செய்வதற்கு ஃபைல்கள் மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 6 | உங்கள் கம்ப்யூட்டரை பிரவுஸ் செய்யவும் மற்றும் நீங்கள் அப்லோட் செய்ய விரும்பும் வீடியோவைத் தேர்ந்தெடுக்கவும் ஓபன் பட்டன் மீது க்ளிக் செய்யவும் |  |

| | | |
|---|---|---|
| படி 7 | டவுன் லோடிங்க் தொடங்குகிறது மற்றும் முன்னேற்றம் வெப் பேஜின் மீது டிஸ்பிளே செய்யப்படுகிறது. அப்லோடிங் பூர்த்தியானவுடன், ஒரு மெசேஜ்-'அப்லோட் கம்ப்ளீட்' தோன்றுகிறது மற்றும் அந்த வீடியோவிற்கான லிங்கும் டிஸ்பிளே செய்யப்படுகிறது. பின்னர் யூ ட்யூபில் அந்த வீடியோவை நீங்கள் பார்க்கலாம். நீங்கள் தலைப்பு மற்றும் விவரிப்பை சேர்க்கலாம் மற்றும் டிஸ்பிளே செய்யப்பட்டிருக்கும் பக்கத்தில் வீடியோவின் ப்ரைவசி செட்டிங்கை செட் செய்யலாம், |  |
| | வீடியோ அப்லோட் செய்யப்பட்டவுடன், நீங்கள் வீடியோ மேனஜரை உபயோகித்து ப்ரைவசி செட்டிங்கை மாற்றலாம் அல்லது வீடியோவை டெலீட் செய்யலாம். |  |

**யூ ட்யூபில் வீடியோக்களை டெலீட் செய்வது**

| | | |
|---|---|---|
| படி 1 | வீடியோ மேனேஜர் மீது க்ளிக் செய்யவும் |  |
| படி 2 | டெலீட் செய்யப்பட வேண்டிய வீடியோ மீது க்ளிக் செய்யவும் |  |
| படி 3 | ஆக்ஷன்ஸ் மெனு மீது க்ளிக் செய்யவும் மற்றும் டெலீட்டைத் தேர்ந்தெடுக்கவும். |  |
| படி 4 | உறுதி செய்வதற்கான ஒரு தகவல் டிஸ்பிளே செய்யப்படுகிறது. 'யெஸ், டெலீட்' பட்டன் மீது க்ளிக் செய்யவும் மற்றும் உங்கள் வீடியோ டெலீட் செய்யப்படும். |  |

## விகிபீடியாவை உபயோகிப்பது

விகிபீடியா ஒரு இலவச இணையதளம், இது யாரும் அதில் வைக்கப்பட்டிருக்கும் உள்ளடக்க விஷயங்களை வாசிப்பதற்கு அல்லது எடிட் செய்வதற்கு அனுமதிக்கிறது. விகி இணையதளத்தின் சிறப்பாக அறியப்பட்ட உதாரணம் விகிபீடியா.

**தகவல் பெறுவதற்காக விகிபீடியாவை உபயோகிப்பது**

| | | |
|---|---|---|
| படி 1 | விகிபீடியா இணையதளம் www.wikipedia.orgக்கு செல்லவும் |  |
| படி 2 | சர்ச் பாரில் டெக்ஸ்டை டைப் செய்யவும், மொழியைத் தேர்ந்தெடுக்கவும் மற்றும் அம்புக்குறி பட்டனை அழுத்தவும். |  |
| படி 3 | அடுத்த பக்கம் உங்களுக்கு தேவையான தகவலை டிஸ்பிளே செய்யும். |  |
| படி 4 | அடிக்கடி அந்த பக்கத்தின் மேல் பகுதி அந்த பக்கத்தின் உள்ளடக்க விஷயங்களைக் கொண்டிருக்கும், அந்த பக்கத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் ஹைப்பர்லிங்க் கொண்டிருக்கும். நேரடியாக அந்த பகுதிக்கு செல்வதற்கு ஒரு குறிப்பிட்ட பகுதி மீது நீங்கள் க்ளிக் செய்யலாம். |  |
| படி 5 | பொதுவாக அனைத்து பக்கங்களும் கடைசியிலிருந்து இரண்டாவது பகுதியாக 'சீ ஆல்சோ' என்பதைக் கொண்டிருக்கும் , இதில் தொடர்புடைய லிங்குகள் டிஸ்பிளே செய்யப்படும் மற்றும் கடைசி பகுதியாக 'ரெ.்ப்ரென்சுகளை' கொண்டிருக்கும் , இதில் செய்தி கட்டுரைகள் தொடர்பான வெவ்வேறு லிங்குகள் அளிக்கப்பட்டிருக்கும் , அதிகமான தகவல் பெறுவதற்கு நீங்கள் இதைப் படிக்கலாம். |  |

**விகிபீடியாவில் ஒரு செய்திகட்டுரையை எடிட் செய்வது**

| | | |
|---|---|---|
| படி 1 | விகிபீடியாவில் ஒரு செய்தி கட்டுரையை எடிட் செய்வதற்கு, நீங்கள் எக்சிஸ்டிங் யூசர் (தற்போது உபயோகிப்பவர்) என்றால் சைன் இன் செய்யவும் அல்லது ஒரு அகவுன்டை உருவாக்கவும். 'எடிட்' லிங்க் மீது க்ளிக் செய்வதன் மூலமாக உங்கள் அகவுன்டில் சைன் இன் செய்யாமலும் நீங்கள் டேட்டாவை எடிட் செய்யலாம், ஆனால் அந்த இணையதளம் உங்கள் ஐபி முகவரியை வெளிப்படையாக பதிவு செய்வதை தடுப்பதற்கு, உங்கள் அகவுன்டிலிருந்து ஒரு செய்தி கட்டுரையை எடிட் செய்வது உசிதமானது. |  |
| படி 2 | வெற்றிகரமாக சைன் இன் செய்த பின், 'எடிட்' லிங்க் மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 3 | இப்போது , அந்த பக்கத்திற்கான டெக்ஸ்ட் அடங்கிய ஒரு எடிட்டிங் வின்டோவை அது திறக்கும். எதையாவது டைப் செய்யவும் , அல்லது நீங்கள் அங்கு பார்க்கும் டெக்ஸ்டில் மாற்றங்களைச் செய்யவும் (குறிப்பு: அந்த பக்கத்தின் மேல் நீங்கள் 'எடிட்' வாய்ப்பை பார்க்கவில்லை என்றால், அனேகமாக கெட்ட நோக்கத்துடன் மாற்றங்கள் செய்வது அதிகரித்திருப்பதன் காரணமாக எடிட் செய்யப்படுவதிலிருந்து அந்த பேஜ் பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்பதைக் குறிக்கிறது) |  |
| படி 4 | இந்த கட்டுரையின் ஒரு பகுதியில் நீங்கள் சிறிய மாற்றங்களை செய்கிறீர்கள் என்றால், அந்த பகுதிக்கு அருகே 'எடிட்' லிங்க் மீது க்ளிக் செய்யவும். இது முழு செய்தி கட்டுரையையும் திறக்காமல் இந்த கட்டுரையின் ஒரு பகுதியில் மாற்றங்களைச் செய்வதற்கு உங்களை அனுமதிக்கும். |  |
| படி 5 | இப்போது அந்த பக்கத்தின் கீழே உள்ள 'எடிட் சம்மரி ' கட்டத்தில் நீங்கள் செய்த மாற்றங்களை சுருக்கமாக விளக்கவும். |  |

| | | |
|---|---|---|
| | 'ஷோ ப்ரிவியூ' பட்டன் மீது க்ளிக் செய்வதன் மூலமாக உங்கள் மாற்றங்களை மூன்னோம் பார்க்கவும் (ப்ரிவியூ செய்யவும்). நீங்கள் மாற்றம் செய்த டெக்ஸ்டிற்கான உங்கள் மாற்றங்களை நீங்கள் ஒப்பிட விரும்பினால், 'ஷோ சேஞ்சஸ்' பட்டனைத் தட்டவும். உங்கள் வேலையுடன் நீங்கள் திருப்தியடைந்தவுடன் , 'சேவ் பேஜ்' பட்டனைத் தட்டவும் |  |

**விகிபீடியாவில் ஒரு பக்கத்தை உருவாக்குவதற்கான ஆலோசனைகள்**

விகிபீடியாவில் ஒரு பேஜை உருவக்கும் போது சில விஷயங்களை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். இவை பின்வருமாறு இருக்க வேண்டும்:

i. ஒரு பக்கத்தை உருவாக்குவதற்கு முன் தற்போது ஒரு கட்டுரை உள்ளதா என்பதே தேடவும்:
ஒரு கட்டுரையை உருவாக்குவதற்கு முன், அதே தலைப்பில் தற்போது செய்தி கட்டுரைகள் , ஒருவேளை சற்று வித்தியாசமான ஒரு பெயரின் கீழ் இல்லாததை உறுதி செய்து கொள்ள முயற்சி செய்யவும்

ii. குறிப்புகளைச் சேகரிப்பது:
நீங்கள் எழுதவிருக்கும் தகவலுக்கான ஆதாரங்களைச் சேகரிப்பது: ஒரு என்சைக்ளோபீடியாவில் (தகவல் களஞ்சியத்தில்) உங்கள் கட்டுரையைச் சேர்ப்பதற்கு, ஒரு விஷயம் செய்திதாள்கள் , நாளிதழ்கள் மற்றும் புத்தகங்கள் போன்ற நம்பகமான ஆதாரங்கள் மூலமாக போதியளவு சரிபார்க்கப்படக்கூடியதாக இருக்க வேண்டும். கட்டுரைகளுக்கான ஆதாரங்களைச் சேகரிப்பதற்கான வழிகள் குறித்த விளக்கமான அறிவுரைகள் விகிபீடியாவின் WP:CITE பக்கத்தில் காணலாம்.

iii. பின்வருபவை போன்ற தலைப்புகள் தொடர்பான ஒரு பக்கத்தை உருவாக்குவதை விக்கிபீடியா அனுமதிப்பதில்லை:
- தொழிலுக்காக உங்கள் பொருளை விளம்பரப்படுத்துவது
- தனிப்பட்ட ஆய்வுரை அல்லது முதன்மை ஆய்வு
- போதியளவு மேற்கோள் இல்லாமல் , குறிப்பிடும் படியாக இல்லாத தலைப்புகள்
- உங்களுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புடைய கட்டுரைகள்
- ஒரு நபர் அல்லது நிறுவனத்தின் மீதான தாக்குதல்கள்
- ஆதரித்து பேசுவதற்கான மற்றும் சர்ச்சைக்குரிய தலைப்புகள்
- உள்ளூர் விஷயங்களில்-ஆர்வம் கொண்ட கட்டுரைகள்
- புதிய செய்தி நிகழ்ச்சிகள்

iv. விகிபீடியாவில் உங்கள் செய்திகட்டுரைகளுக்கு பங்களிப்பதற்கான ஆலோசனைகள் :
- விளம்பரப்படுத்தப்படும் மொழியைச் சேர்க்க வேண்டாம்
- நீங்கள் சேர்க்கும் அல்லது எடிட் செய்யும் எந்த உள்ளடக்க விஷயத்திலும் ஒரு நடுநிலையான , பாரபட்சமற்ற தொனியை பராமரிக்கவும்.
- வாடிக்கையாளருடன் / தலைப்புடன் உங்களுக்கு உள்ள உறவைத் தெரிவிக்கவும்
- பர்சனல் அகவுன்ட்சை உபயோகித்து ஒரு பக்கத்தை உருவாக்கவும்.
- உதவியை நாடவும்: இதே போன்ற தலைப்புகளில் வேலை செய்திருக்கும் ஒரு ஸ்பான்சரைத் (தன்னார்வத்துடன் எடிட் செய்பவர்) தேடவும், அல்லது செய்திகட்டுரைகளுக்கான ஐடியாக்களை சமர்பிக்கவும்.

**விகிபீடியாவில் ஒரு பேஜை உருவாக்குவதற்கான படிகள்**

| | | |
|---|---|---|
| படி 1 | நீங்கள் தற்போதுள்ள உபயோகிப்பாளர் (எக்சிஸ்டிங் யூசர்) என்றால் உங்கள் அகவுன்டை சைன்-இன் செய்யவும் அல்லது நீங்கள் யூசர் இல்லை என்றால் நீங்கள் புதிய ஒன்றை உருவாக்கலாம். ஆர்டிகிள்ஸ் ஃபார் கிரியேஷனில் விமர்சனத்திற்காக மற்றும் வெளியிடப்படுவதற்காக உங்கள் செய்தி கட்டுரையை சமர்பிப்பதன் மூலமாக சைனிங் இன் செய்யாமலும் ஒரு பேஜை நீங்கள் உருவாக்கலாம். |  |

| | | |
|---|---|---|
| படி 2 | சர்ச் பாக்சில், உங்கள் கட்டுரையின் தலைப்பை டைப் செய்யவும் , பின்னர் கோ என்பதை க்ளிக் செய்யவும். |  |
| | நீங்கள் கோரிக்கை செய்த பேஜ் இல்லை என்றால், சர்ச் பேஜ் "யூ மே க்ரியேட் த பேஜ்" (நீங்கள் பேஜை உருவாக்கலாம்) என்பதை தெரிவிக்கிறது , அதைத் தொடர்ந்து கட்டுரையின் பெயர் சிவப்பில் தோன்றும், உங்கள் செய்தி கட்டுரை உருவாக்குவதற்கு நீங்கள் சிவப்பு நிறத்தில் உள்ள கட்டுரை பெயரை க்ளிக் செய்யலாம். |  |
| படி 3 | இது ஒரு காலியான எடிட்டிங் விண்டோவைத் திறக்கும். அந்த பக்கத்தின் மேலே டிஸ்பிளே செய்யப்பட்ட அறிவுரைகளை வாசிக்கவும் மற்றும் ஒரு விண்டோவில் எழுதத் தொடங்கவும். |  |
| படி 4 | இப்போது அந்த பக்கத்தின் கீழே உள்ள 'எடிட் சம்மரி ' கட்டத்தில் நீங்கள் செய்த மாற்றங்களை சுருக்கமாக விளக்கவும். |  |
| படி 5 | 'ஷோ ப்ரிவ்யூ' பட்டன் மீது க்ளிக் செய்வதன் மூலமாக உங்கள் மாற்றங்களை நீங்கள் முன்னதாகவே பார்க்கலாம். (ப்ரிவ்யூ செய்யலாம்). நீங்கள் மாற்றம் செய்த டெக்ஸ்டிற்கான உங்கள் மாற்றங்களை நீங்கள் ஒப்பிட விரும்பினால், 'ஷோ சேஞ்சஸ்' பட்டனைத் தட்டவும். உங்கள் வேலையுடன் உங்களுக்கு திருப்தி ஏற்பட்டவுடன் , 'சேவ் பேஜ்' பட்டனை க்ளிக் செய்யவும். |  |

## பயிற்சி 4

1. விகிபீடியா தொழிலுக்காக பொருட்களை விளம்பரப்படுத்துவதை அனுமதிக்கிறது.
   உண்மை பொய்

2. யூ ட்யூபில் தனியார் வீடியோக்களைப் பார்பதற்கு உங்களுக்கு ஒரு லாகின் அகவுன்ட் தேவை
   உண்மை பொய்

3. யூ ட்யூபில் வீடியோ மேனேஜரை உபயோகித்து ஒரு வீடியோவின் ப்ரைவசி செட்டிங்கை நீங்கள் மாற்றலாம்.
   உண்மை பொய்

4. உங்கள் தனிப்பட்ட கட்டுரைகள் அல்லது முதன்மை ஆய்வுகள் குறித்து விகிபீடியாவில் ஒரு பக்கத்தை நீங்கள் உருவாக்கலாம்.
   உண்மை பொய்

5. விகிபீடியாவில் ஒரு வெப்பேஜை உருவாக்கும் போது நீங்கள் விளம்பரம் செய்வதற்கான மொழியை சேர்க்க கூடாது.
   உண்மை பொய்

**மெசேஜிங் சேவைக்கான அறிமுகம்: வாட்ஸாப்**

வாட்சாப் என்பது ஒரு விளம்பரம்-இல்லாத மொபைல் அப்ளிகேஷன் மெசேஜிங் அப்ளிகேஷன் ஆகும், இது உபயோகிப்பளர்கள் டெக்ஸ்ட் மற்றும் மீடியா தகவல்களை இன்டர்னெட் டேட்டா பளான் அல்லது வை-ஃபை மூலமாக பரிமாறிக் கொள்வதற்கு உங்களை அனுமதிக்கிறது. உபயோகிப்பாளர்கள் எஸ் எம் எஸ்-காக பணம் செலுத்த வேண்டிய தேவை இல்லை ஆனால் அந்த அப்ளிகேஷனை உபயோகிப்பதற்காக ஒரு சிறிய வருடாந்திர கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஐஃபோன் உபயோகிப்பளர்கள் அப்ளிகேஷனை டவுன்லோட் செய்வதற்கு $1.99 செலுத்துகிறார்கள். அதே சமயத்தில் ஆன்ட்ராய்டு ஸ்மார்ட் ஃபோன் மற்றும் மற்ற ஃபோன் உபயோகிப்பாளர்கள் வாட்சாப்பை ஒரு வருடத்திற்கு இலவசமாக டவுன்லோட் செய்யது ரசிக்கலாம். ஒரு வருடத்திற்கு பின் , வாட்ஸாப்பை உபயோகிப்பதற்கான சப்ஸ்க்ரிப்ஷன் கட்டணமாக $0.99 வசூலிக்கப்படுகிறது.

**ஆன்ட் ராய்டு - அடிப்படையிலான ஸ்மார்ட் ஃபோன்கள் / டேப்லெட்டுகளில் வாட்சாப்பை உபயோகிப்பதற்கான படிகள்**

| | | |
|---|---|---|
| படி 1 | உங்கள் ஸ்மார்ட் ஃபோன் / டேப்லெட் மீது 'மெனு' வாய்ப்பிற்கு க்கு செல்லவும் |  |
| படி 2 | மெனுவில் . 'ப்ளே ஸ்டோர்' மீது தட்டவும். ஆப்ஸ், புத்தகங்கள் , திரைப்படங்கள் மற்றும் கேம்சை உள்ளடக்கிய ஆன்-ஸ்க்ரீன் மெனுக்கள் இடையே நேவிகேட் செய்வதன் (பயன்படுத்துவதன்) மூலமாக நீங்கள் அப்ளிகேஷன்கள் மற்றும் உள்ளடக்க விஷயங்களைக் கண்டு பிடிக்கலாம். |  |

| | | |
|---|---|---|
| | டிஸ்பிளே செய்யப்பட்ட ஆப்ஷன்களில் (வாய்ப்புகளில்) ஒன்றின் மீது க்ளிக் செய்யவும். உதாரணமாக, நீங்கள் ஆப்ஸ் மீது க்ளிக் செய்திருந்தால், இது கேடகரீஸ், ஹோம் , டாப் பெய்டு , டாப் ஃப்ரீ போன்ற வெவ்வேறு இணை-பிரிவுகளைக் கொண்டிருக்கும் அப்ளிகேஷன் பிரிவைத் திறக்கும், |  |
| | இப்போது சர்ச் பாரில் வாட்சாப்பை டைப் செய்யவும். அப்ளிகேஷன்களின் ஒரு பட்டியல் பாப்அப் ஆகும். சரியானதை கண்டறியவும் மற்றும் அதன் மீது க்ளிக் செய்யவும். |  |
| | உங்கள் ஸ்மார்ட் ஃபோன்/ டேப்லெட் மீது வாட்சாப்பை இன்ஸ்டால் செய்வதற்கு 'இன்ஸ்டால்' பட்டன் மீது க்ளிக் செய்யவும். |  |
| | இப்போது, வாட்சாப்ப்பை திறப்பதற்கு, ஓபன் மீது க்ளிக் செய்யவும். |  |
| | இப்போது சரிபார்ப்பதற்கான காரணங்களுக்கு அது உங்கள் ஃபோன் நம்பரை டைப் செய்யச் சொல்லும். அதை டைப் செய்யவும் மற்றும் 'ஓகே' பட்டனை அழுத்தவும். |  |
| | இப்போது உங்கள் பெயரை டைப் செய்யவும் மற்றும் நீங்கள் விரும்பினால் ப்ரொஃபைல் ஃபோட்டோவை அப்லோட் செய்யவும் மற்றும் 'நெக்ஸ்ட்' என்பதை அழுத்தவும். |  |

| | | |
|---|---|---|
| | அவர்களுடைய சாதனங்களில் வாட்சாப் கொண்டிருக்கும் நபர்களுக்கு, வாட்சாப் தானாகவே உங்கள் கான்டாக்ட் லிஸ்ட் முழுவதையும் இம்போர்ட் செய்யும் நீங்கள் சாட் செய்ய விரும்பும் கான்டாக்டை சர்ச் பாரில் சர்ச் செய்யவும் பின்னர் அந்த கான்டாக்டில் க்ளிக் செய்யவும். |  |
| | இப்போது பக்கத்தில் உள்ள ஸ்க்ரீன் தோன்றும். ஸ்க்ரீனின் கீழே அளிக்கப்பட்டிருக்கும் கட்டத்தில் நீங்கள் உங்கள் மெசேஜை டைப் செய்யலாம். கீழே இடது மூலையில் அளிக்கப்பட்டிருக்கும் பட்டனை உபயோகித்து மெசேஜில் இமோஜி (உணர்வுகளை வெளிப்படுத்தும் சிறு வரைபடங்கள்) நுழைக்கப்படலாம் மற்றும் ஆடியோ மெசேஜ்கள் கீழே வலது மூலையில் அளிக்கப்பட்டிருக்கும் பட்டனை உபயோகித்து அனுப்பப்படலாம். |  |
| | இப்போது வீடியோக்கள் , ஃபோட்டோக்கள் , உங்கள் தற்போதைய இடம் மற்றும் கான்டாக்டுகளை அனுப்புவதற்கு, மேலே வலது பட்டன் மீது க்ளிக் செய்யவும் மற்றும் உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப இந்த வாய்ப்பைத் தேர்ந்தெடுக்கவும். |  |



**வாட்சாப்பின் வெவ்வேறு அம்சங்களை உபயோகிப்பது**

வாட்சாப்பின் மற்ற அம்சங்களை உபயோகிப்பதற்கு , உங்கள் ஸ்மார்ட் ஃபோனின் வலது அல்லது இடது பட்டன் மீது க்ளிக் செய்யவும் மற்றும் ஒரு புதிய ஸ்க்ரீன் தோன்றும்.

(i) நீங்கள் ஒரு நபருடன் ஒரு சாட்டைத் தொடங்க விரும்பினால் 'ந்யூ சாட்' என்பதன் மீது க்ளிக் செய்யவும்.

(ii) ஒரு இட த்தில் ஒரே சமயத்தில் இரண்டு அல்லது அதிகமான நபர்கள் கொண்ட ஒரு குழுவை உருவாக்குவதற்கு 'ந்யூ குரூப்' பட்டன் மீது க்ளிக் செய்யவும்

(iii) அதே மெசேஜ்களை ஒன்றுக்கும் அதிகமான நபர்களுக்கு அனுப்புவதற்கு 'ந்யூ ப்ராட்காஸ்ட் பட்டியல்' மீது க்ளிக் செய்யவும்.



(iv) கான்டாக்ட்ஸ் லிஸ்டிற்கு செல்வதற்கு 'கான்டாக்ட்ஸ்' பட்டன் மீது க்ளிக் செய்யவும்.

(v) நீங்கள் உங்கள் ஸ்டேடஸை அப்டேட் செய்ய விரும்பினால் 'ஸ்டேடஸ்' பட்டன் மீது க்ளிக் செய்யவும் அருகாமையில் உள்ள ஸ்க்ரீன் தோன்றும். முன்னிருப்பாக (டிஃபால்டாக) அளிக்கப்பட்டிருக்கும் நிலைகளில் ஏதாவது ஒன்றை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம் அல்லது நீங்களே ஒன்றை சொந்தமாக எழுதலாம்.



(vi) நீங்கள் உங்கள் செட்டிங்சை மாற்ற விரும்பினால், 'செட்டிங்ஸ்' பட்டன் மீது க்ளிக் செய்யவும். ஒரு ஸ்க்ரீன் தோன்றும்

(a) மேலும் தகவல் தேடுவதற்கு 'ஹெல்ப்' பட்டன் மீது க்ளிக் செய்யவும்

(b) உங்கள் பெயர் மற்றும் ப்ரொஃபைல் ஃபோட்டோவை மாற்றுவதற்கு 'ப்ரொஃபைல்' பட்டன் மீது க்ளிக் செய்யவும்.

(c) ப்ரைவசி செட்டிங்சை மாற்றுவதற்கு , பணம் செலுத்துவது, நம்பரை மாற்றுவது, அகவுன்டை டெலீட் செய்வது மற்றும் நெட்வொர்க் பயன்பாட்டைத் தெரிந்து கொள்வதற்கு 'அகவுன்ட்' பட்டன் மீது க்ளிக் செய்யவும்.

(d) உங்கள் சாட் , நோட்டிஃபிகேஷன்ஸ் மற்றும் கான்டாக்ட் தொடர்பான செட்டிங்சை மாற்றுவதற்கு 'சாட் செட்டிங்க்ஸ்' , 'நோட்டிஃபிகேஷன்ஸ்' மற்றும் கான்டாக்ட்ஸ் மீது க்ளிக் செய்யவும்.

**சோஷியல் நெட்வொர்கிங் தொடர்பான சட்டப் பிரச்சனைகள்**

சோஷியல் நெட்வொர்கிங் இந்தியாவில் மிக அதிகமாக பிரபலமடைந்து வருகிறது மற்றும் இது பல சட்ட ரீதியிலான பிரச்சனைகளை எழுப்பியிருக்கிறது , பெரும்பாலும் குடிமுறை மற்றும் குற்றவியல் பொறுப்புகளுக்கு வழிவகுக்கும் ஆன்லைன் நடவடிக்கைகள் அல்லது கடமைகளைப் புறக்கணிப்பது தொடர்பானதாகும்

அறிவுசார்ந்த சொத்திற்கான உரிமைகள் முதல் தகவல் தொழில் நுட்ப சட்டங்கள் வரை உள்ள பலதரப்பட்ட சட்டங்கள் , சோஷியல் நெட்வொர்கிங் நடவடிக்கைகள் அல்லது கடமைகளைப் புறக்கணிப்பதற்கும் பொருந்தும். சோஷியல் நெட்வொர்கிங் மீடியா என்பது , இந்தியாவின் தகவல் தொழில் நுட்ப சட்டம் 2000 (ஐடீ சட்டம் சட்டம் 2000) -ன் அர்த்தத்திற்குள் ஒரு "நடுநிலையாளராக" உள்ளது. இதனால், சோஷியல் நெட்வொர்கிங் இணையதளங்கள் மேற்கொள்ளும் வெவ்வேறு நடவடிக்கைகள் அல்லது கடமையை புறக்கணிப்பது சட்டங்களின் கீழ் தண்டனைக்கு உரியவை. உதாரணத்திற்கு , இந்தியாவில் ஆன்லைன் காப்புரிமை விதிமுறைகள் உட்பட ஆன்லைன் ஐ பி ஆர்' விதிமீறல்களுக்கு சோஷியல் நெட்வொர்கிங் இணையதளங்களுக்கு சட்டரீதியாக பொறுப்புவகிக்கிறது.

சோஷியல் மீடியாவை உபயோகிப்பதுடன் தொடர்புபடுத்தப்படகூடிய மற்ற சில சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகள் பின்வருபவையாகும் :

(i) பேச்சு சுதந்திரம்
(ii) பிரச்சனைகளைத் தேடுவது மற்றும் தாக்குவது
(iii) காப்புரிமை விதிமுறைகள் மற்றும் மற்ற அறிவுசார்ந்த உரிமைகள்
(iv) தனிப்பட்ட விளம்பரம் மற்றும் தனிப்பட்ட உரிமைகளை மீறுதல்
(v) கீழ்தரமான அல்லது அவமானம் ஏற்படுத்தும் உள்ளடக்க விஷயங்கள்/ வாக்கியங்கள்

இந்திய அரசியல் சட்டமைப்பு , தகவல் தொழில் நுட்ப சட்டம் பிரிவு 66 A என்பதன் கீழ் சில விதிகள் மற்றும் நிபந்தணைகள் சொல்லப்பட்டிருக்கிறது, இது ஒரு கம்ப்யூட்டர் ஆதாரம் அல்லது தொடர்பிற்கான சாதனம் மூலமாக பின்வரும் எதையாவது அனுப்பும் ஒரு நபருக்கு தண்டை அளிக்கிறது -

(a) குருரமாக காயம் ஏற்படுத்தும் அல்லது பயமுறுத்தும் இயல்பைக் கொண்ட ஏதாவது தகவல்;
(b) தொடர்ச்சியாக இத்தகைய கம்ப்யூட்டர் ஆதாரம் அல்லது தொடர்புகளுக்கான சாதனத்தை உபயோகித்து எரிச்சல் , அசௌகரியம், அபாயம், தடை , அவமானம் , காயம் , குற்றவியல் அச்சுறுத்தல், விரோதம் , வெறுப்பு அல்லது தீமை ஏற்படுத்தும் காரணம் தவிர பொய் என அவருக்கு தெரிந்த ஏதாவது தகவல்
(c) எரிச்சல் அல்லது அசௌகரியம் ஏற்படுத்துவதற்கான காரணத்திற்கான ஏதாவது எலெக்ட்ரானிக் மெயில் அல்லது எலெக்ட்ரானிக் மெயில் மெசேஜ் தகவல் அல்லது அனுப்பபடுபவர் அல்லது பெறுபவருக்கு இத்தகைய தகவல்கள் எங்கிருந்து வருகிறது என்பதைப் பற்றி ஏமாற்றுவது அல்லது தவறாக வழிகாட்டுவது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான ஜெயில் தண்டனையுடன் , இது அபராதத்துடன் மூன்று வருடங்கள் வரை நீட்டிக்கப்படலாம்.

## பயிற்சி 5

1. இவற்றில் எந்தெந்த நெட்வொர்கிங் சேவைகளுக்கு , உபயோகிப்பதற்கு நீங்கள் ஒரு சிறிய வருடாந்திர கட்டணத்தை செலுத்த வேண்டிய தேவை உள்ளது?
   ஃபேஸ்புக் — லிங்க்டின் — வாட்ஸாப்

2. வாட்சாப்பில் , கீழே இடது மூலையில் உள்ள பட்டனை தட்டுவதன் மூலமாக இவற்றில் எந்தெந்த சேவைகள் உபயோகிக்கப்படலாம்?
   ஆடியோ மெசேஜ் — இமோஜி — வீடியோசாட்

3. வாட்சாப்பில், கீழே வலது மூலையில் உள்ள பட்டன் மூலமாக எந்த வகையான சேவை அனுப்பபடலாம்?
   ஆடியோ மெசேஜ்கள் — வீடியோ சாட் — அட்டாச்மென்ட்ஸ்

4. வாட்சாப்பில் இரண்டு அல்லது அதிகமான நபர்கள் கொண்ட ஒரு குழுவினருடன் சார் செய்வதற்கு , எந்த பட்டன் க்ளிக் செய்யப்பட வேண்டும்?
   ந்யூ க்ரூப் — ந்யூ சார் — கான்டாக்ட்ஸ்

5. வாட்சாப்பில் உள்ள பெயர் அல்லது ஃபோட்டோவை மாற்றுவதற்கு இவற்றில் எந்தெந்த ஆப்ஷன்களுக்கு (வாய்ப்புகளுக்கு) நாம் செல்ல வேண்டும்?
   அகவுன்ட் — ப்ரொஃபைல் — சாட் செட்டிங்கஸ்

# 5 இன்டர்னெட் பயன்பாடுகள்



### கற்றதன் விளைவுகள்

இந்த பிரிவின் இறுதியில், உங்களால் பின்வரும் செயல்களைச் செய்ய முடியும்:

- விவசாயம் மற்றும் கல்வி போன்ற வாழ்வாதாரம் தொடர்பான தகவலைத் தேடுவது
- ஆன்லைனில் பயன்பாட்டு பில்களைச் செலுத்துவது
- ஆன்லைனில் ரயில் மற்றும் பஸ் டிக்கெட்டுகளைப் முன்பதிவு செய்வது
- வெவ்வேறு அரசாங்க திட்டங்களைப் பயன்படுத்தும் செயல்முறையை விளக்குவது

### பாடத் திட்டம்

I. விவசாயம் மற்றும் கல்வி போன்ற வாழ்வாதாரம் தொடர்பான தகவலைப் பயன்படுத்துவது

II. பயன்பாட்டு பில்களை ஆன்லைனில் செலுத்துவது

III. ஆன்லைனில் ரயில் மற்றும் பஸ் டிக்கெட்டுகளை புக் செய்வது

IV. அரசு திட்டங்களுக்கான தகவலைக் கண்டறிவது

## I. விவசாயம் மற்றும் கல்வி போன்ற வாழ்வாதாரம் தொடர்பான தகவலைப் பெறுவது

### பயிர் மார்கெட் விலைக்கான அறிமுகம்

இந்திய ஜனத் தொகையில் எழுபது சதவிகிதத்தினர் கிராமப்புற பகுதியில் வாழ்கிறார்கள் மற்றும் விவசாயம் மற்றும் தொடர்புடைய நடவடிக்கையைச் சார்ந்தே இருக்கிறார்கள் இந்திய பொருளாதாரத்தில் விவசாய துறையின் முக்கியத்துவத்தைக் அங்கீகரித்து , இந்திய அரசாங்கத்தின் விவசாய அமைச்சகம், விவசாயம் மற்றும் ஒத்துழைப்பு துறை வழக்கமாக விவசாயம் சார்ந்த புள்ளி விவரங்களைச் சேகரிக்கிறது மற்றும் பராமரிக்கிறது மற்றும் www.agmarknet.nic.in இணையதளம் மூலமாக பங்குதாரர்கள் பயன்படுத்தக்கூடியதாக ஆக்குகிறது. இந்த இணையதளம் மூலமாக விவசாயிகள் மொத்த விற்பனைக்கான உற்பத்தி பொருட்களுக்கான தேசிய அளவிலான மார்கெட் தகவலைப் பெறலாம். ஒரு எளிமையான இன்டர்னெட் கனெக்ஷனுடன் , அவர்கள் வெவ்வேறு உற்பத்தி பொருட்களுக்கு சுலபமாக தினசரி மார்கெட் விலைகளைக் கண்டறியலாம் மற்றும் தகவல் பெற்று வாங்குவது மற்றும் விற்பனை செய்வது குறித்த முடிவுகளை எடுக்கலாம்.

தகவல் ஹிந்தி , ஆங்கிலம், பஞ்சாபி, தெலுங்கு, தமிழ் போன்ற உள்ளூர் மொழிகளில் தகவல் பெறப்படலாம். மொத்தவிற்பனை விலை குறித்த அவ்வப்போதைய தகவல் தவிர, விவசாய துறை தொடர்பான கடன்கள் , கொள்கைகள் மற்றும் விதிமுறைகள் மீதான தகவலை நீங்கள் பெறலாம். இதனால் விவசாயிகள் அருகாமையில் உள்ள மார்கெட்டில் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை நல்ல விலைகளில் விற்பனை செய்யலாம்.

#### அரிசி பயிருக்கான அவ்வப்போதைய விலையை பெறுவதற்கான படிகள்

உங்கள் மாநிலத்தில் அரிசியின் மொத்த விற்பனை மார்கெட் விலையைப் பெறுவதற்கு, நீங்கள் பின்வரும் படிகளைப் பின்பற்ற வேண்டும்.

| | | |
|---|---|---|
| படி 1 | அக்மார்க்னெட் வெப்பேஜிற்கு செல்லவும் (www.agmarknet.nic.in) |  |
| படி 2 | உத்திர பிரதேச மாநிலத்தில் அரிசியின் விலையை நீங்கள் சரிபார்க்க விரும்பினால் , டிஸ்பிளே செய்யப்பட்டிருக்கும் பக்கத்தில் 'மார்கெட் புல்லெட்டின்ஸ்' பகுதியின் கீழ் 'டேட்-வைஸ் ப்ரைசஸ் ஃபார் ஸ்பெசிஃபைடு காமாடிட்டி' (தேதி-வாரியாக குறிப்பிடப்பட்ட பொருளுக்கான விலைகள்) லிங்கை க்ளிக் செய்யவும். (ஹோம் பேஜின் மேலே ' ஃபார் மோர் க்வெரீஸ் ஆன் ப்ரைசஸ் அண்டு அரைவல்ஸ் க்ளிக் ஹியர்' (விலைகள் மற்றும் புதிய வரவுகள் குறித்த மேலும் உள்ள கேள்விகளுக்கு இங்கே க்ளிக் செய்யவும்) லிங்க் மீதும் நீங்கள் க்ளிக் செய்யலாம்). |  |
| படி 3 | நீங்கள் லிங்கில் க்ளிக் செய்யும் போது, ஒரு புதிய பக்கம் திறக்கும் இந்த பக்கத்தில் , எந்த வருடம் மற்றும் மாதத்திற்கு நீங்கள் பயிரின் விலையை தெரிந்து கொள்ள விரும்புகிறீர்கள் என்பதை தேர்ந்தெடுக்கவும். |  |

| | | |
|---|---|---|
| படி 4 | அதன் பின்னர் அந்த மாநிலத்தின் பெயரை தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்பை நீங்கள் பார்ப்பீர்கள் பட்டியலிலிருந்து , உங்களுக்கு எந்த மாநிலத்தின் தகவல் தேவை என்பதை தேர்ந்தெடுக்கவும் (இங்கே, உத்திர பிரதேசத்தை தேர்ந்தெடுக்கவும்). |  |
| படி 5 | மாநிலத்தை தேர்ந்தெடுத்தவுடன் , மற்றொரு பெட்டி தோன்றும் அதில் நீங்கள் பொருளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பொருட்களின் பட்டியலிலிருந்து , 'ரைஸ்' மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 6 | 'அரிசி' தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், 'சப்மிட்' பட்டன் மீது க்ளிக் செய்யவும், இது கட்டத்திற்கு கீழே தோன்றும். |  |
| படி 7 | இப்போது, தேர்ந்தெடுக்கப்பட்ட மாதத்தின் வெவ்வேறு தேதிகளுக்கு உத்திர பிரதேசத்தின் வெவ்வேறு விவசாய மார்கெட்டுகளின் அரிசியின் விலைகள் குறித்த அறிக்கையை நீங்கள் பார்ப்பீர்கள். |  |

**மார்கெட்-வாரியாக மற்றும் பொருள் -வாரியான அறிக்கையை உருவாக்குவது**

| | | |
|---|---|---|
| படி 1 | மார்கெட்டில் உள்ள அனைத்து பொருட்களின் விலையையும் நீங்கள் தெரிந்து கொள்ள விரும்பினால், மார்கெட் புல்லெட்டின் செக்ஷனில் , 'மார்கெட்-வைஸ், கமாடிட்டி-வைஸ் டெய்லி ரிப்போர்ட்' (மார்கெட் -வாரியாக , பொருள்-வாரியாக தினசரி அறிக்கை') மீது க்ளிக் செய்யவும். |  |

| | | |
|---|---|---|
| படி 2 | மற்றொரு பக்கத்திற்கு நீங்கள் அழைத்துச் செல்லப்படுவீர்கள். கேலண்டரிலிருந்து தேதியைத் தேர்ந்தெடுக்கவும் அதன் கீழே மாநிலங்களின் ஒரு பட்டியல் தோன்றும். இந்த பட்டியலிலிருந்து ,உத்தர பிரதேசம் என்பதை தேர்ந்தெடுக்கவும் மற்றும் 'சப்மிட்' பட்டன் மீது க்ளிக் செய்யவும். (நீங்கள் ஒன்றுக்கும் அதிகமான மாநிலத்தின் பெயரைத் தேர்ந்தெடுக்க விரும்பினால் , <CTRL> கீயை அழுத்திக் கொண்டு மாநிலங்களின் பெயர்கள் மீது க்ளிக் செய்யவும்). |  |
| படி 3 | அந்த ஸ்க்ரீன் மீது மார்கெட்டுகளின் ஒரு பட்டியல் தோன்றும். நீங்கள் விலை தெரிந்து கொள்ள விரும்புபவைகளுக்கு கட்டங்களை டிக் செய்யவும் மற்றும் இந்த பட்டியலின் கீழ் உள்ள சப்மிட் பட்டன் மீது க்ளிக் செய்யவும் |  |
| படி 4 | இந்த இணையதளம் இப்போது நீங்கள் தேர்ந்தெடுத்திருக்கும் மார்கெட் / மார்கெட்டுகள் குறித்த ஒரு விளக்கமான அறிக்கையை டிஸ்பிளே செய்யும். பயிர் சந்தையில் விலை குறித்த அவ்வப்போதைய தகவலை எப்படி தேடுவது என்பதை நீங்கள் இப்போது கற்றுக் கொண்டிருப்பதால், இணையதளத்தில் கிடைக்கின்ற மற்ற வாய்ப்புகளை நீங்கள் ஆராயலாம். |  |

**வானிலை முன்னறிவிப்பு மீதான தகவலைத் தேடுவது**

இப்போதெல்லாம், தற்போதைய வானிலை மற்றும் இது குறித்த கடந்த கால விவர குறிப்புகள் பற்றிய நிஜ தகவலை ஒருவர் தெரிந்து கொள்ளக்கூடிய பல இணையதளங்கள் உள்ளது. www.weatheronline.in, www.weatherforecastmap.com, போன்ற சில முக்கியமான இணையதளங்கள், இந்தியாவில், இந்திய அரசாங்கத்தின் புவி விஞான அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்திய வானிலைத் துறை வானிலை ஆராய்ச்சி மற்றும் வானிலை முன்னறிவிப்பிற்கு பொறுப்புவகிக்கிறது. அனைத்து தகவல்களும் அதன் இணையதளமான www.imd.gov.in ல் கிடைக்கிறாது

www.imd.gov.in **இணையதளத்தை உபயோகித்து வானிலை தகவலைத் தேடுவதற்கான படிகள்**

| | | |
|---|---|---|
| படி 1 | அட்ரஸ் பாரில் www.imd.gov.in என்பதை டைப் செய்யவும். இந்த இணையதளத்தின் ஹோம் பேஜ் தோன்றும். நீங்கள் ஹிந்தி மொழியில் பார்க்க விரும்பினால் அந்த பக்கத்தின் வலது பக்கத்தில் டிஸ்பிளே செய்யப்பட்டிருக்கும் ஹிந்தி லிங்க் மீது க்ளிக் செய்யவும். |  |

| | | |
|---|---|---|
| படி 2 | நீங்கள் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வெவ்வேறு தகவல் இந்த பக்கத்தின் மேலே இடது பக்கத்தில் டிஸ்பிளே செய்யப்பட்டிருக்கிறது. வானிலைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு, இண்டியா வெதர் லிங்க் மீது க்ளிக் செய்யவும் மற்றும் உங்களுக்கு www.indiaweather.gov.inக்கான வழி காட்டப்படும் |  |
| படி 3 | இப்போது 'டிபார்ட்மென்டல் வெப்சைட்ஸ்' டேபிற்கு செல்லவும் மற்றும் நீங்கள் விரும்பும் நகரத்திற்கு செல்லவும் பொருத்தமான இணையதளத்திற்கு உங்களுக்கு வழிகாட்டப்படும். இங்கே, அஹமதாபாத் நகரம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. |  |
| படி 4 | பருவமழை, உள்ளூர் வானிலை முன்னறிவிப்பு, துறைமுகம் மற்றும் மீனவர்களுக்கான எச்சரிக்கை, , வாராந்திர வானிலை அறிக்கை இந்த பக்கத்தின் இடது பக்கத்தில் டிஸ்பிளே செய்யப்படுகிறது. மேலும் தெரிந்து கொள்வதற்கு பொருத்தமான லிங்க் மீது க்ளிக் செய்யவும். உதாரணமாக, மாநிலத்தின் குறிப்பிட்ட நகரம் குறித்த வானிலை தகவல் பற்றி தெரிந்து கொள்வதற்கு . 'லோக்கல் வெதர் ஃபோர்காஸ்ட்' (உள்ளூர் வானிலை முன்னறிவிப்பு) லிங்கிற்கு செல்லவும் மற்றும் நீங்கள் தேர்வு செய்யும் நகரத்தின் மீது க்ளிக் செய்யவும். அந்த நகரத்திற்கான சமீபத்திய வானிலை அறிக்கையை உங்களால் பார்க்க முடியும். |  |
| படி 5 | மாநிலம்-முழுவதற்குமான சீதோஷண நிலை குறித்த தகவல் பெறுவதற்கு , 'ஸ்டேட் ஃபோர்காஸ்ட்' (மாநில வானிலை) லிங்க் மீது க்ளிக் செய்யவும் மற்றும் வாரந்திர வானிலை அறிக்கையை டவுன் லோட் செய்வதற்கு. 'வாராந்திர வெப்பநிலை அறிக்கை' பட்டன் மீது க்ளிக் செய்யவும். அதே போல, ஹோம் பேஜில் டிஸ்பிளே செய்யப்பட்ட பொருத்தமான லிங்குகளை க்ளிக் செய்வதன் மூலமாக நீங்கள் அதிகமான தகவலைத் தேடலாம். |  |

**பெருங்கடல்கள் மற்றும் மீன்பிடிப்பதற்கு சாதகமான பகுதிகள் குறித்த தகவலைப் பெறுவதற்கான படிகள்**

பெருங்கடல் மற்றும் மீன்பிடிப்பதற்கு சாதகமான பகுதிகள் குறித்த தகவலைப் பெறுவதற்கு , புவி விஞ்சான அமைச்சகத்தின் கீழ் சுயாட்சி பெற்ற அமைப்பான பெருங்கடல் தகவல் சேவைகளுக்கான இந்திய தேசிய மையத்தின் இணையதளத்தை நீங்கள் பார்த்து (www.incois.gov.in) இந்த படிகளைப் பின்பற்றவும்.

| | | |
|---|---|---|
| படி 1 | அட்ரஸ் பாரில் www.incois.gov.in டைப் செய்யவும், ஹோம் பேஜ் தோன்றும். |  |

| | | |
|---|---|---|
| படி 2 | மீன் பிடிப்பதற்கு சாதகமான பகுதி குறித்த தகவல் தேடுவதற்காக, 'அட்வைசரி சர்வீசஸ்' பகுதியின் கீழ் 'மீன் பிடிப்பதற்கு சாதகமான பகுதி' க்கு செல்லவும். |  |
| படி 3 | கடலோர பகுதிகளுக்கான வானிலை அறிக்கை பெறுவதற்கு., 'அட்வைசரி சர்வீசஸ்' (ஆலோசனை சேவைகள்) பகுதியின் கீழ் 'ஓஷன் ஸ்டேட் ஃபோர்காஸ்டிற்கு' (பெருங்கடல் பகுதிக்கான வானிலைல் முன்னறிவிப்பு) செல்லவும் பெருங்கடல் தொடர்பான வெவ்வேறு தகவலுக்கான லிங்குகள் அளிக்கப்பட்டிருக்கிறது |  |

www.shiksha.com **மூலமாக கல்வி குறித்த தகவல் தேடுவது**

| | | |
|---|---|---|
| படி 1 | www.shiksha.com இணையதளத்திற்கு செல்லவும். இந்த பக்கத்தின் மேல் , வெவ்வேறு டேப்கள் அளிக்கப்பட்டிருக்கிறது அவற்றைப் பார்த்து பொருத்தமான தகவலைக் கண்டறியவும். |  |
| படி 2 | 'ஹோம்' டேபின் சர்ச் பாரில், நீங்கள் மேலும் தகவல் பெற விரும்பும் கல்வி நிறுவனத்தின் பெயர் அல்லது படிப்பின் பெயரை டைப் செய்யவும். நீங்கள் 'ஸ்டடி இன் இண்டியா' (இந்தியாவில் படிப்பது) மற்றும் 'ஸ்டடி அப்ராட்' (வெளிநாட்டில் படிப்பது) போன்ற வாய்ப்புகளையும் பார்க்கலாம், இதில் நீங்கள் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் கிடைக்கின்ற வெவ்வேறு படிப்புகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் மீதான அதிகமான தகவலைப் பெறலாம். |  |
| படி 3 | 'எம் பி ஏ' டேப் எம் பி ஏ படிப்புகள் மற்றும் கல்விநிறுவனங்கள் தொடர்பான தகவலை அளிக்கிறது ஒரு குறிப்பிட்ட படிப்பு அல்லது குறிப்பிட்ட பரிட்சையை ஏற்றுக் கொள்ளும் கல்வி நிறுவனங்களின் ஒரு பட்டியலை நீங்கள் பார்க்கலாம். |  |

| | | |
|---|---|---|
| படி 4 | ‘ஆஃப்டர் 12த்’ டேப் , 12வது வகுப்பு படித்து முடித்த பின் படிக்கப்படக்கூடிய வெவ்வேறு பாடங்கள் மீதான தகவலை அளிக்கிறது இந்த பாட திட்டங்கள் பற்றி மேலும் தெரிந்து கொள்வதற்கு லிங்க் மீது க்ளிக் செய்யவும். |  |
| படி 5 | ‘கேரியர் சென்ட்ரல்’ டேப் நீங்கள் தேர்ந்தெடுக்ககூடிய வெவ்வேறு துறைகள் மற்றும் பாட திட்டங்கள் தொடர்பான தகவலை அளிக்கிறது. நீங்கள் டைப் செய்யும் தகவலின் அடிப்படையில் நீங்கள் எந்த பாட திட்டத்தை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது குறித்தும் உங்களுக்கு அறிவுரை அளிக்கிறது. |  |
| படி 6 | ‘டாப் இன்ஸ்டிட்யூட்ஸ்’ டேபை உபயோகித்து எம் பி ஏ , பி.இ /பி.டெக் , எல் எல் பி போன்ற போன்ற வெவ்வேறு துறைகளில் உள்ள முதன்மையான கல்வி நிறுவனங்களையும் நீங்கள் தேடலாம். / B.Tech, LLB, etc., using ‘Top Institutes’ tab. |  |
| படி 7 | ஹோம் பேஜின் கீழே , கேரியர் ஆப்ஷன்ஸ்(வேலை வாய்ப்புகள்) , தேர்விற்கு தயாராவது, செய்தி கட்டுரைகள், சாதனங்கள் போன்ற பகுதிகளின் கீழ் வெவ்வேறு லிங்குகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் தெரிந்து கொள்வதற்கு பொருத்தமான லிங்க் மீது க்ளிக் செய்யவும். |  |

**வேலை வாய்ப்பு மற்றும் வேலையில் முன்னேற்றமடைவது தொடர்பான தகவலுக்காக தேடுவதற்கு ஆன்லைன் போர்டல்களை உபயோகிப்பது**

இப்போதேல்லாம் பல இணையதளங்கள் கிடைக்கிறது, இவை வேலை தேடுவது மற்றும் வேலையில் முன்னேற்றம் அடைவது தொடர்பான தகவல் இத்தகைய இணையதளங்களுக்கான உதாரணங்கள் - www.employmentnews.com, www.naukri.com, www.timesjob.com, போன்றவை. சில இணையதளங்கள் பிரத்யேகமாக கிராமப்புற பகுதிகளின் தேவைகள் மீது கவனம் செலுத்துகிறது, www.ruralnaukri.com போன்றவை

**வேலை வாய்ப்பு செய்திகள் இணையதளம் மூலமாக வேலை தேடுவது**

| | | |
|---|---|---|
| படி 1 | உங்கள் வெப் பிரவுசரின் அட்ரஸ் பாரில் www.employmentnews.com என டைப் செய்யவும். ஹோம் பேஜில், உபயோகமான தகவல் மற்றும் லிங்குகளுடன் பல பகுதிகள் டிஸ்பிளே செய்யப்படும் அதைப் பற்றி அதிகம் தெரிந்து கொள்வதற்கு உங்களுக்கு பொருத்தமான லிங்கை க்ளிக் செய்யவும். |  |

| | | |
|---|---|---|
| படி 2 | பரிட்சை முடிவுகள் மற்றும் வெவ்வேறு கல்லூரிகள் மற்றும் பல்கலைகழகங்களில் சேர்க்கைகான கால அட்டவணையைப் பார்பதற்கு , 'அட்மிஷன் மற்றும் ரிசல்ட்' டேபிற்கு செல்லவும் |   |
| படி 3 | வேலை வாய்ப்பு தொடர்பான வெவ்வேறு தகவலைப் பார்ப்பதற்கு , 'கேரியர் லிங்க்ஸ்' டேபிற்கு செல்லவும் ., இதில் கல்வி , விமான சேவை, வங்கி , அரசு வேலைகள், இராணுவம் , பொறியியல் போன்றவை தொடர்பான முக்கியமான இணையதளங்களுக்கு லிங்க் அளிக்கப்பட்டிருக்கும். |   |
| படி 4 | வேலை வாய்ப்பு செய்திகளைப் பெறுவதற்கு . ஹோம்பேஜின் வலது மூலையில் அமைந்திருக்கும் 'சப்ஸ்க்ரிப்ஷன்' லிங்கிற்கு செல்லவும் மற்றும் பட்டியலில் குறிப்பிடப்பட்ட தேவையான படிகளைப் பின்பற்றவும். |   |
| படி 5 | 'இ-வர்ஷன்' டேபிற்கு சென்று யூசர் நேம் மற்றும் பாஸ்வோர்டில் லாகின் செய்வதன் மூலமாக நீங்கள் வேலை வாய்ப்பு செய்திகளின் எலெக்ட்ரானிக் வடிவத்தைப் (இ-வர்ஷனை) பெறலாம் (உங்கள் லாக்-இன் ஐடி மற்றும் பாஸ்வோர்டு என்பது , வேலைவாய்ப்பு செய்திகளைப் பெறுவதற்காக நீங்கள் சப்ஸ்க்ரைப் செய்த போது உங்களுக்கு அளிக்கப்பட்ட சப்ஸ்க்ரிப்ஷன் நம்பர் ஆகும்).இதே போல, இந்த இணையதளத்தில் உள்ள மற்றும் மற்ற முக்கியமான அம்சங்களையும் நீங்கள் முயற்சி செய்து பார்த்து பொருத்தமான தகவலைப் பெறலாம். |   |

www.naukri.com **இணையதளம் மூலமாக வேலை தேடுவது**

| | | |
|---|---|---|
| படி 1 | அட்ரஸ் பாரில் www.naukri.com என்பதை டைப் செய்யவும். |   |

| | | |
|---|---|---|
| படி 2 | பதவி, திறன்கள் , இடம் , பிரிவு மற்றும் எதிர்பார்க்கப்படும் சம்பளத்தின் அடிப்படையில் விரும்பப்படும் வேலையை நீங்கள் தேடலாம். |  |
| படி 3 | ஹோம் பேஜின் இறுதியில் கிடைக்கின்ற ஜாப் சர்ச்சின் வெவ்வேறு முறைகளையும் நீங்கள் உபயோகிக்கலாம். |  |
| படி 4 | நீங்கள் வேலைக்கு ஆட்களை அமர்த்துபவர்களைத் தேட விரும்பினால். 'சர்ச் ரெக்ருட்டர்ஸ்' பட்டனுக்கு செல்லவும். அதிக துல்லியமான தேடலுக்கு ஃபில்டரை உபயோகிக்கவும். |  |
| படி 5 | நீங்கள் உங்கள் ரெஸ்யூமை போஸ்ட் செய்ய விரும்பினால், ஹோம் பேஜில் 'போஸ்ட் ரெஸ்யூம்' டேபிற்கு செல்லவும் மற்றும் ரெஸ்யூம் பேஜில் தேவையான தகவலைப் பூர்த்தி செய்யவும் மற்றும் உங்கள் ரெஸ்யூமை அப்லோட் செய்யவும். |  |
| படி 6 | நீங்கள் லாகின் அல்லது ரெஜிஸ்டர் செய்ய விரும்புகிறீர்கள் என்றால், 'ஜாப்சீக்கர் லாக்-இன்' டேபிற்கு செல்லவும் மற்றும் லாகின் (அல்லது ரெஜிஸ்டர்) செய்யவும். |  |
